அரசியல், சமூக, பொருளாதார இதழ்

# எழுநிலம்

மாத இதழ் | மணம் 34 | மார்ச் 2024 | திருவள்ளுவர் ஆண்டு 2055







## சர்வதேச துறைகளில் பெண்கள்





## கோட்டாவின் புத்தகம்

## பெண்

## 'புதிய வாழ்வு' அமைப்பின் நிறுவுனர் புனிதாவுடன் ஒரு செவ்வி




## மகளிர் தின வாழ்த்துக்கள்



அம்மு

# பெண்

எத்தனை வலிகள் இருந்தாலும்
அத்தனையையும்
பொறுத்து, மறைத்து, சிரித்து
வாழும்
தேவதையவள்!

வாழ்க்கையின்
பல்வேறு கட்டங்களில்
பல்வேறு பாத்திரங்களில்
பரிணமிப்பவள்!

தன் குடும்பத்துக்காய்
மாதத்தில்
மூன்று நாட்கள் வலியையும்
பொறுப்பாள்,
ஓய்வின்றி
உழைத்திடும் உத்தமியவள்!
உயிரை பணயம் வைத்து
பத்து திங்கள் மகவினை சுமந்து
பெற்றெடுக்கும் சிற்பியவள்!

தனக்காக வாழாமல்
தன் குடும்பத்திற்காக
தனையுருக்கி
ஒளிதரும்
மெழுகுவர்த்தி!

குடும்ப நலனுக்காக
தன் ஆசைகளை அடக்கி
உழைத்திட செல்லும்
இடங்களில் எழும்
சமுதாய சீண்டல்கள்..

அவற்றை எதிர்கொண்டு,
அவற்றினை தாண்டி,
வீறுநடைபோடும் துணிச்சல்
பெண்கள்!

இத்தனை அவதாரம்
எடுக்கும் பெண்கள்
உங்கள் வீட்டிலும் இருக்கிறாள்!
பெண் வடிவில் தன் உறவை
காணும் எவரும்
அவளை
வன் கொடுமை
செய்யத் துணியார்!

பெண்ணை மதியுங்கள்!
மனித நேயத்துடன் வாழுங்கள்!!

EZHUNILAM

மாத இதழ் | மணம்: 34

மார்ச்

தொடர்புகளுக்கு:-

ezhunilam@yahoo.com

www.ezhunilam.com


## உள்ளடக்கம்...


| | |
|---|---|
| ஆசிரியர் கருத்து... | 05 |
| ஜனாதிபதித் தேர்தலுக்கான... | 06 |
| திசைகாட்டி... | 10 |
| ஆழமான ஆபத்து... | 13 |
| கோட்டாவின்.... | 16 |
| பெண் என்னும் (கவிதை)... | 21 |
| சர்வதேச துறைகளில்.... | 22 |
| பெண் விடுதலைக்காக... | 25 |
| மகளிர் தின வாழ்த்துக்கள்(கவிதை)... | 27 |
| 'புதிய வாழ்வு' அமைப்பின்... | 29 |
| சிரிப்பும் சிந்தனையும்.... | 32 |
| இடப்பெயர்வும் நானும் (பாகம்;02)... | 35 |
| தென்மராட்சி தமிழரின்... | 37 |
| யாழ்ப்பாணத்தில் விசித்திர.... | 39 |
| உயர்ந்த மனிதன்... | 40 |
| வலை (தொடர் கதை)... | 41 |
| மகளிர் நாள் பேச்சாளர் (கதை)... | 44 |
| மெய்யெழுத்துக்கள் (கவிதை)... | 47 |
















## திருக்குறள்

**குறள் 465:**

"வகையறச் சூழா தெழுதல் பகைவரைப்
பாத்திப் படுப்பதோ ராறு"

**விளக்க உரை:**

செயலின் வகைகளை எல்லாம் முற்ற எண்ணாமல் செய்யத்தொடங்குதல், பகைவரை வளரும் பாத்தியில் நிலைபெறச் செய்வதொரு வழியாகும்.

# அக்கறை உறவுகள்



இதுவரை வந்த பத்திரிகைகளில் மணம் 33 இன் அட்டைப்படம்தான் சிறந்தது என்பேன். அவ்வளவு உணர்வுபூர்வமான விடயத்தை தக்க தருணத்தில் தந்து மனதை நெகிழச் செய்து விட்டீர்கள்.

முதுகில் குத்தும் இந்தியத் துரோகம் மீண்டும் ஒருமுறை அம்பலத்துக்கு வந்திருக்கிறது.

சாந்தனின் தாயாருக்கு எவ்வளவு ஆறுதல் கூறினாலும் அவரின் வலி போகுமா? சாந்தனுக்கு எங்கள் இதயபூர்வமான அஞ்சலிகள்.

**-ஜெகநாதன் குடும்பம்.**
**இலண்டன்.**

அட்டைப்படம், 'வணங்குகிறோம் ஐயா' கவிதை இரண்டுமே மனதைத் தொட்டன. ஆசிரியர் தலைப்பிலும் அருமையாகப் பதிவிட்டுள்ளீர்கள்.

தமிழர்கள் என்றால் இப்படித்தான் என்று எம்மை தரம் குறைக்க காரணமான முற்ற வெளி நிகழ்வைப் பற்றி இன்னும் எவ்வளவு தகவல்கள் எழுதினாலும் தகும்.

எங்கள் பிள்ளைகள் கொஞ்சம் உணர்ச்சி வசப்பட்டு விட்டார்கள் என்பது உண்மை தான். ஆனால், எங்களை அழிக்கும் திட்டத்தை உள்ளே வைத்து புறத்தில் எம்மைக் குதூகலிக்க வைக்க வந்தோம் என்றவர்களின் சாயம் வெளுத்து விட்டது அல்லவா? இது போதும்.

**-உள்ளூரான், தாயகம்.**

ஐங்கரனின் கட்டுரையில் எங்கள் கோவிலுக்கு அருகில் கட்டப்பட்ட விகாரையைப் பார்க்கப் பார்க்க கோபமாக வரும் அதே சமயத்தில் என்ன செய்வது என்ற இயலாத் தன்மையும் எழுகிறது.

இப்படியே விட்டால், எங்கள் காணிகள் ஒவ்வொன்றிலும் விகாரைகள் முளைக்கும். எங்கள் பச்சோந்தி அரசியல்வாதிகள் என்ன ரணிலுக்கு பூங்கொத்து கொடுக்க ஓடி விட்டார்களா?

**-விநயா சங்கர் ஜேர்மனி.**

இடப்பெயர்வுக் கட்டுரை என்னை அந்த நாட்களுக்கே இட்டுச் சென்றுவிட்டது. ஷெல் சத்தங்களுக்கு நடுவே முட்டை முடிச்சுகளுடன் வெளியேறியதும், சனக்கூட்டத்தில் குடும்ப உறுப்பினர்களைத் தொலைத்து தடுமாறியதும் அப்பப்பா.

பவானியின் எழுத்து யதார்த்தமாக இருக்கிறது. வாழ்த்துகள். அநுர இந்தியா போனாலென்ன, உலகம் சுற்றினால் என்ன.. தமிழரின் உரிமையை விட்டுக் கொடுப்பான் என்று கனவிலும் நினைக்க வேண்டாம். சிங்களவன் சிங்களவன்தான்.

**-செல்வவேல் தியாகராஜா**
**நியூயார்க்.**

தமிழ் அரசியல்வாதிகளுக்கு பிரச்சனையை தீர்க்கும் எண்ணம் கொஞ்சமும் இல்லை.

ஒரு பேராசிரியர் கூறியது போல் நாங்கள் பால் கறக்காத மாடுகளுக்கு தீனி போட்டு வளர்த்து பாராளுமன்ற கதிரையில் சொகுசாக இருத்தி விடுகிறோம்.

எந்த அரசியல்வாதியாவது நிலத்தையோ, சொத்தையோ பறி கொடுத்திருக்கிறானா? இன்னுமின்னும் சொத்து சேர்த்துக் கொண்டு அல்லவா போகிறான்? அட்டைப்படம், ஆசிரியர் பக்கம், இடப்பெயர்வு, நெடுங்கதை என்று எல்லாமே உணர்வு பூர்வமாக உள்ளன.

ஆசிரியருக்கு வாழ்த்துகள். தொடரட்டும் உங்கள் பணி.

**-கீதா மதியழகன்**
**மர்சேய், பிரான்ஸ்.**

'வரலாறு காணாத புலம்பெயர்வு' கட்டுரை இங்குள்ள அச்சமூட்டும் நிலைமையை தொட்டுச் சென்றுள்ளது. உண்மையாகச் சொல்லப்போனால் இது ஒரு பாரிய பிரச்சனையாக உருவெடுத்துள்ளது. எம்மவர்கள் கோடிக்கணக்கான சொத்துகளை போலி முகவர்களிடம் கொடுத்து ஏமாந்து போகிறார்கள்.

'சுற்றுலா விசா' வில் எந்த நாட்டிலாவது வதிவிட அனுமதி பெற முடியுமா என்ன? படித்தவர்களாக இருந்து என்ன பயன்? வெளிநாட்டு மோகத்தால் இருக்கும் அனைத்தையும் இழந்து பலர் ஓட்டாண்டியாகவும், கடனாளியாகவும் நிற்கின்றனர். புலம் பெயர் உறவுகளே! உங்களுக்கும் இதில் பங்குண்டு. இங்கு வந்து தப்பான படம் காட்டிவிட்டுச் செல்கிறீர்கள். அதை நம்பி இங்குள்ளவர்கள் அல்லாடுகிறார்கள்.

**-திருமலையான்.**
**தாயகம்.**

மணம் 33 சிறப்பாக வந்திருக்கிறது. அதிலும் அட்டைப்படம் மனதை உருக்கி விட்டது. கவிதைகள் அத்தனையும் சிறப்பு. ஓரிரு தடவைகள் ஹைக்கூ கவிதைகள் போட்டீர்கள். அதையும் தொடரலாமே. என்னைப் போன்ற பிரியைகள் ரசிப்பார்கள். ஒரு வேண்டுகோள். தமிழ் வளர்ப்பதற்கு ஏதுவான ஆக்கங்களுக்காக இரண்டு பக்கங்களை ஒதுக்குவீர்களா? அவற்றில் எமது தொன்மையான நூல்களில் இருந்து ஒரு பகுதி அல்லது ஒரு பாடல் பொருளுடன் என்று வெளியிடலாமே.

கட்டுரைகள் ஒவ்வொன்றும் முத்துகள். புதிதாக வரும் இடப்பெயர்வு தொடரும் நன்று. வலையின் அடுத்த அங்கத்திற்காக எதிர்பார்த்துக் காத்துக் கிடக்கிறேன்.

**-சுபாங்கி ஜெயகரன்**
**மெல்போண், அவுஸ்திரேலியா.**

வழமைபோல பத்திரிகை தரமாகவும் சிறப்பாகவும் இருந்தது. கட்டுரைகள், கவிதைகள், இடப்பெயர்வு தொடர், எனது பிரியத்திற்குரிய 'வலை' தொடர் அனைத்தும் அருமை.

அத்தனையையும் அடித்துச் சென்று விட்டது சாந்தன் அவர்களின் இழப்பு. எவ்வளவு கொடிய துன்பத்தை அவர் சிறையில் அனுபவித்திருப்பார்? அதைவிடவும் கொடுமையை பெற்ற தாய் பார்த்திருப்பார்.

சரியான நேரத்தில் அஞ்சலி செய்து சாந்தன் அவர்களுக்கு வணக்கம் செலுத்தியது மனதைத் தொட்டு விட்டது.

**-நகுலேஸ்வரன் சின்னத்தம்பி**
**நோர்வே**




எழுநிலம் சஞ்சிகையின் கடந்த
மின்னிதழ்களை நூலகம் ஆவணகத்தின்
இணையத்தளத்தில்
இதழ்கள் பிரிவில் பார்வையிடலாம்...
https://www.noolaham.org

## ஆசிரியர் பக்கம்

# சீரழியும் சமுதாயம்

சொந்த நிலத்திலிருந்து உடுத்த உடையுடன் விரட்டப்பட்ட பின்னர் எமது மக்கள் பட்ட அவலங்கள் கொஞ்ச நஞ்சமல்ல. வீடு வாசல், சொத்து சுகங்கள் அனைத்தையும் இழந்து, பல்வேறு இடங்களில் இடம் பெயர்ந்தவர்களாக தஞ்சம் புகுந்துள்ள அவர்கள் 35 வருடங்களைக் கடந்த நிலையிலும் தஞ்சமடைந்த இடங்களை தற்காலிக இடமாகவே கருதி வருவதுடன், தமது சொந்த நிலத்தில் மீளக் குடியேறுவதற்கான வேணவாவுடனும் இருக்கின்றனர்.

போர் முடிவடைந்து 15 வருடங்கள் ஆகின்ற நிலையிலும் இன்னமும் யாழ்ப்பாணத்தின் பல பகுதிகள் இராணுவக் கட்டுப்பாட்டிலேயே இருக்கின்றன. இராணுவக் கட்டுப்பாட்டிலிருந்து விடுவிக்கப்பட்ட பகுதிகள் சிலவற்றில் தமது காணிகள் அடாத்தாக இன்னொருவருக்கு கையளிக்கப்பட்டிருப்பது, சிங்களவருக்கு உரித்துடையதாக உறுதி எழுதப்பட்டிருப்பது, அரச காணிகளாக்கப்பட்டு விகாரைகள் எழுப்பப் பட்டிருப்பது போன்ற செயல்களினால் தமது சொந்தக் காணிகளுக்குப் போக முடியாமல் எத்தனையோ பேர் தத்தளிக்கின்றனர். அரசாங்கமே இந்த முறைகேடுகளைச் செய்வதால் யாரிடம் முறையிடுவது என்று தெரியாமல் தத்தளிக்கும் எங்கள் மக்களுக்கு நீதி கிடைக்க வேண்டும்.

பல்லாண்டுகளாக, தமிழர் நிலங்கள் அபகரிக்கப்படுவது, கோயில்கள் இருக்கும் இடங்களிலெல்லாம் விகாரைகளை எழுப்புவது, இந்துக் கோயில்களை இடிப்பது, தமிழ் மக்களின் இடங்களில் அவர்களுக்கு நடுவே சிங்களக் குடியேற்றங்களை உருவாக்குவது, விவசாய நிலங்களை அபகரிப்பது என்று தமிழர்க்கு எதிரான பல்வேறு திட்டங்களை இனவாத சிங்கள அரசு நடைமுறைப்படுத்தி வருவது அனைவரும் அறிந்ததே.

தமிழரின் குடிப்பரம்பலை அழிப்பது மட்டுமல்லாமல், எமது தாயகப் பரப்பில் கலாசார சீரழிவு, போதைவஸ்து என்பனவற்றின் மூலம் இளைய தலைமுறையினரை சுயமாகச் சிந்திக்க முடியாதவர்களாகவும், தாயகப் பற்று இல்லாதவர்களாகவும் ஆக்கி ஒரு பலவீனமான இனமாக மாற்றுவதற்கு பெருமுயற்சி செய்கிறது. அதில் ஓரளவிற்கு வெற்றியும் கண்டுள்ளது.

வங்குரோத்தில் இருக்கும் சிங்கள அரசு எமது தாயகத்தின் பகுதிகளையும் அந்நிய சக்திகளுக்கு தாரை வார்த்துக் கொண்டிருப்பதன் விளைவாக இந்தியா, சீனா, யப்பான், அவுஸ்திரேலியா என்று பல நாடுகள் எமது தாயகத்தில் நிலத்தையும், கடலையும் அபகரிக்க போட்டி போடுகின்றன. இவர்களுக்கு எதிராகவும் நாங்கள் போராட்டங்களை நடத்தி எமது வளங்களைத் தக்க வைக்க வேண்டியுள்ளது.

கேள்வி விலை மனு (Tender) கோராமல், பூநகரி குளத்தில் 1730 மில்லியன் டொலர் பெறுமதியான சூரிய சக்தியில் மின்னுற்பத்தி செய்யும் திட்டம் அவுஸ்திரேலிய நிறுவனம் ஒன்றிற்கு வழங்கப்பட்டுள்ளது. நிதி மோசடியில் ஈடுபட்டது உறுதிப்படுத்தப்பட்ட பின்னரும் அதே இந்திய அதானி குழுமத்திற்கு பூநகரி, மன்னாரில் இரண்டு எரிசக்தி திட்டங்களுக்கு அனுமதி கொடுக்கப் பட்டுள்ளது. பூநகரி பொன்னாவெளியில் டோக்கியோ நிறுவனம் ஒன்றுக்கு 1200 ஏக்கர் நிலத்தில் சுண்ணக்கல் அகழும் திட்டத்தை வழங்கும் முயற்சி நடைபெறுகிறது. இதனால் சுற்றுச் சூழல் பேரழிவுக்கு உள்ளாகும் என்பதை சிங்கள அரசு கருத்திலும் எடுக்கவில்லை.

தீவகப் பகுதியில், இந்திய நிறுவனங்கள் மட்டும் கலந்து கொண்ட கேள்வி விலை மனுவில் கலந்து கொள்ளாத நிறுவனமான க் Solar Clean Energy (Pvt) Ltd இற்கு சூரிய மின்சக்தி தயாரிக்கும் ஒப்பந்தம் வழங்கப்பட்டிருக்கிறது. தனங்கிளப்பு, பொன்னாலை, மருதங்கேணி கரையோரங்களில் ஒரு தனியார் நிறுவனத்திற்கு காற்றாலை அமைக்க அனுமதி வழங்கும் முயற்சிகள் இடம்பெறுகின்றன.

காங்கேசன்துறையில் தனியார் காணிகள் அனுமதியின்றி சுவீகரிக்கப்பட்டு சனாதிபதி மாளிகை ஒன்று அமைக்கப் பட்டுள்ளது. எஞ்சிய நிலத்தை தமக்கு அடிவருடிகளாகவுள்ள ஒரு இந்திய நடிகையின் குடும்பத்தினருக்கு பல்கலைக்கழகம் அமைப்பதற்காக குத்தகைக்கு விடவிருக்கிறார்கள் என்று காணி உரிமையாளர்கள் பதைபதைப்புடன் இருக்கின்றனர்.

தமது கையாட்களாக, காட்டிக் கொடுப்பவர்களாக இருப்பவர்களுக்கும், தென்னிலங்கை நிறுவனங்களின் உள்ளூர் பினாமிகளுக்கும், தலா ஐந்து ஏக்கர் நிலம் வீதம் ஏக்கர் கணக்கான அரச நிலங்கள் பளைப்பகுதியில் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன. அதே பளையில் 3000 ஏக்கர் நிலத்தை தென்னை வள ஆராய்ச்சிக்கு என்ற பெயரில் சீனாவுக்கு தாரை வார்க்கும் முயற்சிகளும் நடைபெறுகின்றன.

இவை போதாது என்று, இயற்கையான கடல்வாழ் உயிரினங்களுக்கு சிறந்த மேய்ச்சல் கடலாகவும், உற்பத்தி மற்றும் இருப்புக்கான சிறந்த இடமாகவும் இருக்கும் எமது கடற்பரப்பில் 150 இற்கும் மேற்பட்ட சட்டவிரோத கடலட்டை பண்ணைகள் போடப்பட்டுள்ளன. வளம் செறிந்த எமது கடற் பரப்பை அபகரிக்க அந்நிய சக்திகள் தினம்தினம் போட்டி போடுகின்றன.

இவையெல்லாம் அண்மைய செய்திகள். நாளும் பொழுதும் எமது தாயகத்தின் ஒவ்வொரு அங்குல நிலத்தையும் காப்பாற்ற நாம் போராட வேண்டியுள்ளது. இனவாத சிங்களத்துடன் அந்நிய சக்திகளும் கைகோர்த்து எமது நிலத்தையும் வளத்தையும் அபகரிக்கத் துடிப்பது எங்களின் இருப்பை இன்னமும் கேள்விக்குறியாக்கி உள்ளது.

இந்த நிலையில் தமிழனே தமிழனின் முதுகில் குத்துவது எந்த வகையில் நியாயம்? எமது மக்களில் ஒரு பகுதியினர் எப்படி இப்படிக் கீழ்த்தரமானவர்களாக மாறிப் போனார்கள்? இராணுவத்தால் விடுவிக்கப்பட்ட தமது சொந்தக் காணிகளைப் பார்க்கச் சென்றவர்கள் காடையர்களாலும் கள்வர்களாலும் அச்சுறுத்தப்பட்டிருக்கிறார்கள். உரிமையாளர்களின் கண்முன்னே அவர்களது உடைமைகள் உடைத்து எடுத்துச் செல்லப்பட்டிருக்குன்றன. சொந்தக் காணியில் காலடி எடுத்து வைப்பதற்கு களவாணிகள் சிலர் உறுதி ஆதாரத்தைக் காட்டுமாறு கேட்டிருக்கிறார்கள்.

இத்தனை வருட கால இராணுவ அச்சுறுத்தலிலும் ஆங்காங்கே உடைந்திருந்தாலும் நிமிர்ந்து நின்ற வீடுகள், விடுவிக்கப்பட்ட மறுநாளே கள்வர்களால் உடைத்துத் தரைமட்டமாக்கப் பட்டிருக்கிறது. இன வெறியர்களைக் காட்டிலும் எம்மவரின் ஒரு பகுதியினர் தரம் தாழ்ந்து போயிருப்பது மன வேதனைக்குரியது.

35 வருட காலத்தின் பின்னர் தமது சொந்த இடத்திற்கு போனவர்களுக்கு அங்கிருந்த வீடுகள் வெறுமனே கட்டடங்களல்ல. அவை குடும்ப உறுப்பினரின் நினைவுப் பொக்கிசங்கள். தாம் ஓடியாடி விளையாடிய இடங்கள். வியர்வை சிந்தி உழைத்துக் கட்டிய அரண்மனைகள். மூதாதையரின், காணாமல் போன, மடிந்து போனவரின் ஞாபகச் சின்னங்கள். அவைகள் கண்முன்னே காடையர்களால் அழித்தொழிக்கப் படுவது என்பது இடப்பெயர்வு தந்த வலிக்கு இணையானது.

காடையர்களின் அடாவடிகளுக்கு தக்க நடவடிக்கை எடுக்காது விட்டால் இந்த இழி செயல் தொடரும். ஊர்க்காவலர்கள், நலன் விரும்பிகள் ஒன்றிணைந்து சட்டபூர்வமாக இதற்கு ஒரு முடிவு கட்டாவிட்டால் அகற்ற முடியாதபடி ஒரு கீழான தலைமுறை உருவாகிவிடும்.




# ஜனாதிபதித் தேர்தலுக்கான திகதி அண்மிக்கும் நிலை

ஜனாதிபதித் தேர்தலுக்கான திகதி அண்மிக்கும் நிலையில், அதில் வெற்றி பெறுபவர் யாராக இருக்கலாம் என்பதைப் பற்றி மாத்திரமல்ல, தேர்தலே நடத்தப்படுமா என்பது பற்றியும் ஊகங்கள் அதிகரித்த வண்ணம் இருக்கின்றன. ஜனாதிபதி தேர்தல் நடத்தப்படத்தான் வேண்டுமா என்று ஒரு விவாதமும் கூட மூண்டிருக்கிறது.

நாட்டை அபிவிருத்திப் பாதையில் வழிநடத்திச் செல்வதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு மேலும் கால அவகாசம் வழங்கவேண்டும் என்று உணரும் பலர் இருக்கிறார்கள். தெற்காசியா மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான உதவி இராஜாங்க அமைச்சர் டொனால்ட் லூ அத்தகைய ஒருவராக இருக்கலாம். இலங்கையின் பொருளாதார மீட்சி உலகின் இந்தப் பகுதியில் மிகப்பெரிய மீட்சிகளில் ஒன்றாகும் என்று அவர் கூறியிருக்கிறார்.

மறுபுறத்தில், ஜனாதிபதி ஆட்சிமுறையை சாத்தியமானளவு விரைவாக ஒழித்துவிடுவதற்கு ஆதரவாக



வாதிடுபவர்களும் இருக்கிறார்கள். ஜனாதிபதித் தேர்தலை நடத்த வேண்டியதில்லை என்பதும் அவர்களின் கருத்தாக இருக்கிறது.

ஜனாதிபதி பதவி மட்டுமீறிய அதிகாரங்களைக் கொண்டதாகவும் அதற்கு தெரிவு செய்யப் படுபவர்களினால் அந்த அதிகாரங்கள் துஷ்பிரயோகம் செய்யப்படக் கூடியவையாக இருப்பதாகவும் பொதுவில் நம்பப்படுவதால் அதை ஒழித்துவிட வேண்டும் என்று வலுவாக முறையில் வாதிடப்படுகிறது. இந்த வாதம் கடந்த காலத்தில் ஜனாதிபதித் தேர்தல்களில் வேட்பாளராக களத்தில் நின்றவர்களில் சிலரால் தேர்தல் பிரசார தொனிப்பொருளாகவும் முக்கியத்துவப் படுத்தப்பட்டது.

ஆனால், ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழிப்பதாக உறுதியளித்தவர்கள் தேர்தல்களில் வெற்றி பெற்ற பிறகு அவ்வாறு செய்யத் தவறியதுடன் மாத்திரம் நின்றுவிடாமல் தங்களால் இயன்றவரை நீண்டகாலத்துக்கு அந்தப் பதவியில் நீடிப்பதற்கு விடாமுயற்சியையும் மேற்கொண்டனர். ஜனாதிபதி ஆட்சிமுறை இன்று வரை நீடிப்பதற்கு அதுவே காரணம் எனலாம்.

ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற்று அதிகாரத்துக்கு வருபவர்கள் அந்தப் பதவியை ஒழிக்க விரும்புவார்கள் என்ற நம்பிக்கை இல்லை என்ற நிலையில், அடுத்த ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னதாக ஜனாதிபதி பதவி ஒழிக்கப்பட வேண்டும் என்ற ஒரு அபிப்பிராயமும் முன்வைக்கப் படுகிறது. ஜனாதிபதி ஆட்சிமுறையே நாட்டை பொருளாதார அனர்த்தத்துக்கு இட்டுச்சென்றது என்ற உண்மையும் இந்த

அவசரத்துக்கு காரணம். ஆனால், அதை ஒழிப்பது எந்தளவுக்கு நடைமுறைச் சாத்தியமானது என்பதே கேள்வி.

அரசியலமைப்பு மத்திய வகிபாகத்தை ஜனாதிபதி பதவிக்கு வழங்குவதால் தற்போதைய ஆட்சிமுறை நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறை என்று அழைக்கப்படுகிறது. இந்த மத்திய பதவியை இல்லாமல் செய்வது தற்போதைய ஆட்சி முறைக் கட்டமைப்புக்கு மரண ஆபத்தை தோற்றுவிப்பதற்கு சமமானதாகும். ஜனாதிபதி பதவி மீது செய்யக்கூடிய சத்திரசிகிச்சையின் விளைவாக தோன்றக்கூடிய ஓட்டையை கைதேர்ந்த முறையிலான அரசியலமைப்பு செயன்முறையின் மூலமாக நிரப்பிவிட முடியும் என்று வாதிடப் படலாம்.

ஆனால், அரசாங்கத்தையும் எதிரணியையும் உள்ளடக்கிய அரசியல் கருத்தொருமிப்பு இல்லாமல் இந்த சீர்திருத்தங்களை விரைவாகச் செய்யக் கூடியதாக இருக்குமா என்பது முக்கியமான கேள்வி. நாடு தற்போது எதிர்நோக்குகின்ற பிரச்சினைகளைப் பொறுத்தவரை அத்தகைய கருத்தொருமிப்பை காண முடியவில்லை.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழிப்பதானால், அதைப் பதிலீடு செய்யக்கூடிய புதிய ஆட்சிமுறை பற்றி மக்களுடனும் அரசியல் கட்சிகளுடனும் விரிவான கலந்தாலோசனை அவசியம். அந்த ஆட்சிமுறை இன, மத சிறுபான்மைச் சமூகங்களின் எதிர்பார்ப்புகளையும் அபிலாசைகளையும் நிறைவு செய்கின்ற ஒன்றாகவும் இருக்க வேண்டும். தற்போதைய தருணத்தில் அத்தகைய ஒரு கருத்தொருமிப்பு இல்லை.

## மக்கள் செல்வாக்கு இல்லாத அரசாங்கம்

புதிய அரசியலமைப்பு குறித்தும் அரசியலமைப்புச் சீர்திருத்தங்கள் குறித்தும் பல சந்தர்ப்பங்களில் ஆராயப்பட்டிருக்கிறது. ஆனால், கடந்த காலத்தைய அரசியலமைப்பு வரைவுத் திட்டங்களினால் தற்போது மக்களுடனும் அரசியல் கட்சிகளுடனும் கலந்தாலோசனை நடத்தவேண்டிய தேவையைப் பதிலீடு செய்யமுடியாது. ‘அறகலய’ மக்கள் கிளர்ச்சி மற்றும் பொருளாதார வங்குரோத்து அனுபவங்களுக்கு பிறகு சூழ்நிலைகள்





தீர்க்கமான முறையில் மாறிவிட்டன. இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பிலும் இன, மத சிறுபான்மைச்சமூகங்களை ஆட்சிமுறைக்குள் சேர்த்துக் கொள்வது தொடர்பிலும் கருத்தொருமிப்பு இல்லாத பட்சத்தில் மாற்றங்கள் மந்த கதியிலானவையாகவே இருக்கும் என்பதையும் ஏற்றுக்கொள்ள வேண்டியது அவசியமாகும். இதை மாகாண சபைத் தேர்தல் முறையில் மாற்றங்களைக் கொண்டு வருவதற்கு 2017 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட செயன்முறை இன்னமும் கூட பூர்த்தி செய்யப்படாமல் இருப்பதில் இருந்து புரிந்துகொள்ள முடியும். ஐந்து வருடங்களாக மகாண சபைகளுக்குத் தேர்தல்கள் நடத்தப்படாமல் இருக்கிறது.

அரசியலமைப்பின் ஒரு பகுதியாக 36 வருடங்களுக்கு முன்னர் கொண்டு வரப்பட்ட பின்னரும் மாகாண சபைகள் செயற்படாமலேயே இருக்கின்றன என்பது கவனிக்கத் தக்கது. மாகாண சபைகளின் பொலிஸ் அதிகாரங்களை இல்லாமல் செய்வதற்கு அரசியலமைப்புக்குத் திருத்தம் ஒன்றைக் கொண்டு வருவதற்கான யோசனையும் முன்வைக்கப் படுகிறது. சகலரும் தேர்தல் மீது கவனத்தைத் திருப்பியிருக்கும் நிலையில் அரசியலமைப்பு மாற்றத்தை துரிதப்படுத்துவது என்பது ஒரு உகந்த தெரிவாகத் தோன்றவில்லை.

ஜனாதிபதித் தேர்தல் போட்டியில் எதிரணி வேட்பாளர்கள் கணிசமான இடைவெளி வித்தியாசத்தில் முன்னணியில் இருப்பதாக கருத்துக் கணிப்புக்கள் திரும்பத் திரும்ப காட்டுகின்றன. இந்த கருத்துக்

> இரு வருடங்களுக்கு முன்னர் மக்கள் கூட்டத்தின் ஆவேசத்துக்கு பயந்து அரசாங்கத்தின் முன்னணி உறுப்பினர்கள் பொதுவெளியில் வருவதற்கு தயங்கும் அளவுக்கு அரசாங்கம் பலவீனமாக இருந்தது. திருமண வைபவங்களில் கலந்துகொண்ட அரசாங்க உறுப்பினர்களை நோக்கி மக்கள் கூச்சல் போட்டு கேலி செய்த பல சம்பவங்கள் இடம்பெற்றன. மங்களகரமான வைபவங்கள் என்றும் பார்க்காமல் மக்கள் அரசியல்வாதிகளை நாட்டை வங்குரோத்து நிலைக்குக் கொண்டு வந்ததற்காகக் கண்டனம் செய்தனர்.



கணிப்புகளின் முடிவுகள் யதார்த்த நிலைக்கு நெருக்கமாக இருக்குமானால், அதிகப் பெரும்பான்மையான மக்கள் தேர்தல் ஒன்றை எதிர்பார்க்கிறார்கள் என்றே ஊகிக்க முடியும். ஜனாதிபதி விக்கிரமசிங்க தலைமையில் அதிகாரத்தில் காலூன்றியிருக்கும் அரசாங்கத்தை வேறு எதையும் விட தேர்தல் ஒன்றின் மூலமாகவே பதவியில் இருந்து அகற்ற முடியும் என்றே மக்கள் நம்புகிறார்கள்.

இரு வருடங்களுக்கு முன்னர் மக்கள் கூட்டத்தின் ஆவேசத்துக்கு பயந்து அரசாங்கத்தின் முன்னணி உறுப்பினர்கள் பொதுவெளியில் வருவதற்கு தயங்கும் அளவுக்கு அரசாங்கம் பலவீனமாக இருந்தது. திருமண வைபவங்களில் கலந்துகொண்ட அரசாங்க உறுப்பினர்களை நோக்கி மக்கள் கூச்சல் போட்டு கேலி செய்த பல சம்பவங்கள் இடம்பெற்றன. மங்களகரமான வைபவங்கள் என்றும் பார்க்காமல் மக்கள் அரசியல்வாதிகளை நாட்டை வங்குரோத்து நிலைக்குக் கொண்டு வந்ததற்காகக் கண்டனம் செய்தனர்.

தற்போது அரசியல்வாதிகள் பிரச்சினை ஏதும் வந்தால் பாதுகாப்புத் தரப்பினர் அதைக் கையாளுவார்கள் என்ற நம்பிக்கையில் பயமின்றி பொது வைபவங்களில் பங்கேற்கிறார்கள்.

அதிகாரத்தில் இருப்பதிலேயே குறியாக இருக்கும் அரசியல் தலைவர்களைப் பொறுத்தவரை, அதிகாரத்தை இழக்கும் சாத்தியம் ஒருபோதும் மகிழ்ச்சி தருவதாக இருக்காது. அமெரிக்கா போன்ற முன்னேறிய நாடுகளிலும் கூட இதுவே நிலைவரமாக இருக்கிறது. 2020 ஆண்டில் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில் அன்றைய ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தனது தோல்வியை ஏற்க மறுத்து தேர்தலில் மோசடிகள் இடம்பெற்றதாக குற்றஞ் சாட்டினார். வளர்முக நாடுகளில் அதிகாரத்தில் இருப்பவர்கள் தாங்கள் பதவியில் இருந்து இறங்கினால் பழிவாங்கப்படக் கூடும் என்ற அச்சத்தினால் தொடர்ந்தும் அதிகாரத்தில் இருக்கவேண்டும் என்பதில் தீவிர ஆர்வம் காட்டுகிறார்கள்.அரசாங்கத்தில் இருப்பவர்களைப் பொறுத்தவரை, தேர்தல் தோல்விக்கு பின்னர் தாங்கள் முகங்கொடுக்க வேண்டியிருக்கும். முன்பின் தெரியாத சூழ்நிலை எப்போதும் அவர்களுக்கு அச்சம் தருவதாகும். அதுவும் புதிய அரசாங்கத்துக்கு வருகிறவர்கள் மிகவும் வேறுபட்ட அரசியல் கோட்பாட்டைக் கொண்டவர்களாக இருந்தால் தோல்வி கண்டவர்களின் பயம் மிகவும் கடுமையானதாக இருக்கும்.

## கையாள முடியாத பிரச்சினை

தற்போதைய அரசாங்கத்தின் பெரும்பகுதி நாட்டின் சகல பாகங்களில் இருந்தும் இலட்சக்கணக்கில் திரண்டுவந்து மக்கள் பங்கேற்ற போராட்ட இயக்கத்தின் முன்னால் மண்டியிட்ட அரசாங்கத்தின் ஒரு தொடர்ச்சியே. அந்த மகிழ்ச்சியானதும் அமைதியானதுமான போராட்ட நாட்களில் இளையவர்களும் முதியவர்களுமாக நடையாகவும் வாகனங்களிலும் வந்து அணிதிரண்ட மக்கள் நெருங்கிவிட்ட வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த புரட்சியொன்றின் அங்கமாக தங்களின் செயற்பாடுகளை நினைத்தனர். பல்வேறு போராட்டக் களங்களுக்கும் வந்து அர்ப்பணிப்புச் சிந்தையுடன் பங்கேற்க மக்களைத் தூண்டிய 'முறைமை மாற்றம்' ஒன்றுக்கான இலட்சிய நோக்கு அவர்கள் மனதில் தொடர்ந்து இருக்கிறது. வரவிருக்கும் தேர்தல்களில் பிரதானமாக பயனடையப் போகிறவர்கள் ஊழலை ஒழித்து வங்குரோத்து நிலையில் இருந்து மீள்வதற்கு செலுத்த வேண்டிய விலை, நேர்மையான முறையில் பகிரப்படுவதை உறுதி செய்யக்கூடிய முறைமை மாற்றத்துக்கான நம்பிக்கையை சிறந்த முறையில் வெளிக்காட்டக் கூடியவர்களே.

அரசாங்க மாற்றத்தைச் செய்வதற்கான சந்தர்ப்பம் அரசியலமைப்பின் பிரகாரம் ஜனாதிபதித் தேர்தலை நடத்த வேண்டியிருக்கும் அக்டோபர் மாதத்தில் வரும். அரசாங்கத்தில் உள்ளவர்கள் அந்தத் தேர்தல் இடம் பெறாதிருப்பதை அல்லது சாத்தியமானளவு நீண்ட காலத்துக்கு ஒத்திவைக்கப் படுவதை விரும்புவர்.

2022 மார்ச்சில் உள்ளூராட்சித் தேர்தல்கள் நடத்தப்படாமல் இருப்பதை அரசாங்கம் உறுதிசெய்தது. அந்த தேர்தல்களை நடத்துவதற்கு தேர்தல்கள் ஆணைக்குழுவுக்குத் தேவையான பணத்தை வழங்க மறுத்ததன் மூலம் அரசாங்கத்தினால் அவ்வாறு செய்யக் கூடியதாக இருந்தது.

அந்தத் தேர்தல்களை நடத்தக்கூடாது என்பதில் அரசாங்கம் மிகுந்த உறுதிப்பாட்டுடன் இருந்தது. தேர்தல்களை நடத்துவதற்குத் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு பணத்தைக் கிடைக்கச் செய்யுமாறு உயர் நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவையும் அரசாங்கம் மதிக்கவில்லை. அது ஜனநாயகக் கோட்பாடுகளை மலினப்படுத்தும் அடாவடித்தனமான நடவடிக்கையாகும். அதே காரணத்தை அல்லது வேறு காரணங்களைக் காட்டி ஜனாதிபதித் தேர்தலும் ஒத்தி வைக்கப்படலாம் என்ற கவலையும் உண்டு.

ஆனால், அரசியலமைப்பின் பிரகாரம் உரிய காலத்தில் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படும்





என்று ஜனாதிபதி செயலகத்தின் ஊடகப்பிரிவு அறிவித்திருக்கிறது. நாடாளுமன்றத் தேர்தல் அடுத்த வருடம் நடத்தப்படும் என்றும் அதற்குத் தேவையான நிதி 2025 பட்ஜெட்டில் ஒதுக்கீடு செய்யப்படும் என்றும் ஊடகப்பிரிவு அறிக்கையில் தெரிவித்திருக்கிறது.

தேர்தல்களை நடத்துவது தேர்தல்கள் ஆணைக்குழுவின் பொறுப்பு என்றும் தேவைப்படும்போது அது குறித்து ஆணைக் குழுவுக்கு அறிவிக்கப்படும் என்றும் அரசாங்கம் கூறியிருக்கிறது.

ஜனாதிபதித் தேர்தல் உரிய நேரத்தில் நடத்தப்படும் என்றும் ஜனாதிபதி ஆட்சிமுறை ஒழிக்கப்படப் போவதில்லை என்றும் அண்மையில் தன்னைச் சந்தித்து நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவொன்றிடம் ஜனாதிபதி விக்கிரமசிங்க தெரிவித்திருந்தார். ஜனாதிபதித் தேர்தலை ஒத்திவைக்கும் உத்தேசம் எதுவும் எனக்கு கிடையாது என்பதை பல தடவைகள் நான் தெளிவாகக் கூறியிருக்கிறேன். அதற்குத் தேவையான பணம் இருக்கிறது. நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழிப்பது பற்றிய கதைகளை பிரதான எதிர்க்கட்சியே கட்டிவிடுகிறது என்று அவர் கூறினார்.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதிப் பதவியை அவசர அவசரமாக ஒழித்துவிட முடியாது என்பது எதிர்க்கட்சியை விடவும் மக்களுக்கு நன்றாகத் தெரியும். அதைச் செய்வதற்கு ஒழுங்கமைவான நடைமுறை ஒன்று இருக்கிறது. அவர்களின் பொறியில் நாம் விழுந்துவிடக் கூடாது. இதில் வீணாக நேரத்தை விரயம் செய்யாதீர்கள். நாம் முன்னெடுக்கின்ற பொருளாதார மீட்சி நடவடிக்கைகளைப் பற்றி பேசுங்கள் என்றும் அவர் கூறியிருக்கிறார்.

அதேபோன்றே, அரசியலமைப்புக்கான 13ஆவது திருத்தத்தை

> ஜனாதிபதித் தேர்தல் உரிய நேரத்தில் நடத்தப்படும் என்றும் ஜனாதிபதி ஆட்சிமுறை ஒழிக்கப்படப் போவதில்லை என்றும் அண்மையில் தன்னைச் சந்தித்து நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவொன்றிடம் ஜனாதிபதி விக்கிரமசிங்க தெரிவித்திருந்தார். அதற்குத் தேவையான பணம் இருக்கிறது. நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழிப்பது பற்றிய கதைகளை பிரதான எதிர்க்கட்சியே கட்டிவிடுகிறது என்று அவர் கூறினார்.



முழுமையாக நடைமுறைப்படுத்த உத்தரவிடுவதன் மூலமாக ஜனாதிபதி நாட்டின் மிகவும் கையாள முடியாத பிரச்சினையாக இருந்துவரும் இனப் பிரச்சினைக்குத் தீர்வைக் காண்பதில் நாட்டத்தைக் காண்பிக்கலாம்.


அவ்வாறு செய்வதன் மூலமாக அடுத்த தேர்தலில் வெற்றி பெறுபவர் பரஸ்பரம் ஏற்புடைய தீர்வொன்றைக் காண்பதைச் எளிதாக்க முடியும். இதில் அவர் வெற்றி பெறுகிறாரோ இல்லையோ தான் இணங்கிக் கொண்டதையும் பொறுப்பேற்றுக் கொண்ட பணியையும் செய்ததாக ஒரு திருப்தியை உணரமுடியும்.




# திசைகாட்டி

வடக்கு, தெற்கு, கிழக்கு மற்றும் மேற்கு - இவை திசைகாட்டியின் திசைகள். நீங்கள் காடுகளில் தொலைந்து போகும்போது, நீங்கள் எங்கு செல்கிறீர்கள் என்று தெரியாமல், உங்கள் தடத்தைத் திரும்பக் கண்டுபிடிப்பது சாத்தியமில்லை. திசைகாட்டி நீங்கள் எந்த திசையில் செல்கிறீர்கள் என்பதை அதாவது அது வடக்கா, தெற்கா, கிழக்கா அல்லது மேற்கா என்று கண்டறிய உதவுகிறது.

திசைகாட்டி என்பது புவியியல் ரீதியாக முக்கியமான இடங்கள் தொடர்பான திசையைக் காட்டும் வழிசெலுத்தல் மற்றும் நோக்கு நிலைக்கு பயன்படுத்தப்படும் ஒரு காந்தமானி ஆகும். திசைகாட்டி நான்கு முக்கிய திசைகளைக் காட்டுகிறது. திசைகாட்டியின் வரலாறு 2000 ஆண்டுகளுக்கு முன்பு சீனாவில் ஹான் வம்சத்தின் (கிமு 202 - கிபி 220) போது தொடங்கியது.



அந்த 2000 க்கும் அதிகமான ஆண்டு வரலாறு மனிதனின் கதையை எமக்கு சொல்கிறது பல நூற்றாண்டுகள் பயம் மற்றும் வலியின் வழியாக அவனது சாகசப் பயணம் அவனது ஆர்வமும் மகிழ்ச்சியும், அவனது வெற்றி மற்றும் தோல்வி, அவனது முன்னேற்றத்தின் நோக்கம், பொருள் மற்றும் ஆன்மிகம் பற்றிக் கூறுகிறது.

ஒவ்வொரு முறையும் அவன் தோல்வியுற்றபோது, அது எங்கிருந்து வந்தது என்று யாருக்கும் தெரியாத வலிமையைத் திரட்டினான். மேலும், மீண்டும் மீண்டும் எழுந்து தனது இலக்கை அடைவதற்காக முணுமுணுப்பு இல்லாமல் புகார் இல்லாமல் தனது பாதையைத் தொடர்ந்தான்.

ஆற்றல் மற்றும் உந்துதல் இல்லாததால் நிறுத்தத் தேர்ந்தெடுத்தவர்கள், சில உத்வேகம் தரும் தலைவர்களால் வழி நடத்தப்பட்டனர், அவர்கள் தங்கள் நேரத்தையும் ஆற்றலையும் தியாகம் செய்தனர், தங்கள் சீடர்களுடன் சேர்ந்து தூண்டினர். இது ஒரு அற்புதமான சாகசமாக இருந்தது,

ஒரு நாட்டின் திசைகாட்டி உடைந்தால், அது எங்கிருந்து வந்தது , எங்கு செல்கிறது என்று அதற்கு தெரியாதபோது, நெருக்கடி நிறைந்த அத்தியாயங்களின் மூலம் ஒரு முழு தேசத்தின் பயணம் கேள்விக்கு உள்ளாக்கப்படுகிறது. மற்றும் முற்




றிலும் மாறுபட்ட குழப்பம் மற்றும் மோதல்களில் தள்ளப்படுகிறது.

அடுத்தடுத்த தலைமைகளின் தோல்வி, அறியாமை மற்றும் அதன் குடிமக்களின் வெளிப்படையான ஞானமின்மை மற்றும் அதன் அறிவு ஜீவிகளின் கவலையற்ற அக்கறையின்மை ஆகியவை அதன் வளர்ச்சியின் இதயத்தை உலுக்கும் தேக்கத்திற்கு பெரிதும் உதவுகின்றன. சமூக முன்னேற்றம் நிறுத்தப்பட்டு அதன் கலாசார முன்னேற்றம் வாடிப் போய்விடும்.

இன்று இலங்கையிலும் அப்படித்தான். அதன் காலனித்துவ அதிகாரங்களான போர்த்துகேயர்கள், டச்சுக்காரர்கள் மற்றும் ஆங்கிலேயர்களால் சுரண்டப்பட்ட பின்னர், இலங்கை சுதந்திரமடைந்தது, மேலும் அதன் அந்த சுதந்திரத்திற்கு தனது நெருங்கிய அண்டை நாடுகளின் தலைவர்களான காந்தி, நேரு, பட்டேல் மற்றும் அப்துல் கலாம் போன்றவர்கள் செய்த தன்னலமற்ற தியாகங்களுக்கு கடன்பட்டிருக்கிறது. இருபதாம் நூற்றாண்டின் முதல் பாதியில் இலங்கையின் அரசியல் மற்றும் நிர்வாகத் தலைமையானது பிரித்தானிய ராஜ்ஜியத்தால் 'தங்குமிடம்' அனுபவித்தவர்களால் ஆதிக்கம் செலுத்தப்பட்டது. ஒரு நிலவுடைமை வர்க்கம் அதன் 'உயர்ந்த'கல்வி மற்றும் விருப்பத்துடன் அங்கீகாரம் மற்றும் வாடகை மற்றும் சுரங்கத் தொழில்கள் போன்ற நாட்டின் வளங்களுக்கான அணுகல் அதிகாரத்துடன் தொடர்ந்து ஆட்சி செய்தது.

சில அடிப்படைக் கல்வியைக் கூட போதிக்க போதுமான வளங்கள் இல்லாத கிராமப்புறப் பாடசாலைகள் மூலம் கல்வி கற்கும் சாமானியர், சுதந்திரத்திற்குப் பிறகும் அதே பறிக்கப்பட்ட சுதந்திரத்துடன் வதைக்கப்பட்டனர்.

இந்த வீரியம் மிக்க முறைமையின் ஒட்டுமொத்த விளைவுகள் சுதந்திரத்திற்குப் பிறகு விரைவில் உணரப்பட்டன. தேர்தலுக்குப் பின் வரும் தேர்தல்கள் ஒரு ஆட்சியாளர்களை இன்னொருவருடன் மாற்றுவதற்கு வழிவகை செய்தன.

ஐக்கிய தேசியக் கட்சியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் ஒரே நாணயத்தின் இரு பக்கங்கள். சிறிய கொள்கை வேறுபாடுகளுடன், அரசியல் அலைக் கற்றையில் இரு பிரிவினரும் தங்கள் பழமையான வர்க்கம் மற்றும் பழங்குடியினரின் மரபுகளைப் பாதுகாத்து, துன்பப்படும் மக்களுக்கு கவனம் செலுத்தாமல் தொடர்ந்து பாதுகாத்து வந்தனர்.

நாட்டின் திசைகாட்டி அசையாமல் கிடந்தது அதன் ஆன்மிக மற்றும் பொருள் மதிப்பு மக்களுக்கு சேவை செய்வதன் அடிப்படையில் அளவிடப்படவில்லை. ஒரு தலைமுறைக்கு அடுத்தபடியாக ஊழல் தலைவர்களை உருவாக்கும் ஒரு முறைமை முழுமையின் ஒருங்கிணைந்த பகுதியாக மாறியது.

மற்றும் சாதாரண மனிதன் ஒரு சீரற்ற அல்லது சரிசெய்ய முடியாத தார்மீக திசைகாட்டிக்கு பழக்கமாகி விட்டான். இந்த ஊழலுக்குத் தலைவர்கள் மட்டும் பலியாகவில்லை, அரசியல்வாதிகளுக்குப் பதிலடி கொடுக்கும் வரை அவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யாத மக்களும், அந்த பூர்வ பாவிக்கு உரிய நேரத்தில் 'சந்தோசம்' கொடுத்து பலிகடா ஆனார்கள்.

2022 மார்ச் / ஏப்ரல் மாதத்தில் நாட்டின் பொருளாதார வாழ்க்கையின் சரிவு, அந்த சுருண்ட முறைமையை மாற்ற அச்சுறுத்தியது. 1990 க்குப் பிறகு பிறந்த தலைமுறையினர் நாட்டின் சுய அழிவை இன்னும் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. முப்பது வருடங்களாக பூர்விக மற்றும் இனப் போரில் சிக்கித் தவித்த இந்தத் தலைமுறையினருக்கு அமைதி, போரின் சொல்ல முடியாத அம்சங்களை விட பேரழிவை ஏற்படுத்தியது.

இனப் போர்களால் ஏற்படும் பிளவுகள் மற்றும் உட்பிரிவுகள் இந்தத் தலைமுறையினரால் தாங்கப்படக் கூடாது, மேலும் அவர்கள் தங்கள் முன்னோடிகளை பொருளாதார மற்றும் அரசியல் அநீதிக்கு எதிரான அனைத்தையும் உள்ளடக்கிய போருக்கான போராட்டத்தில் அவர்களை அரவணைத்து வடக்கு மற்றும் கிழக்கு சகோதரர்களை நடத்துவதன் மூலம் அவர்களுக்கு கல்வி கற்பிக்க ஆர்வமாக விரும்பினர்.

அரகலய -22 நம் மக்களுக்குக் கற்றுத்தந்த கொடூரமான ஆனால் தவறில்லாத பாடம் இதுதான்.

அரகலய -22 இன் உண்மையான விளைவுகள் இன்னும் உணரப்படாமல் இருக்கலாம். ஆனால் தற்போதுள்ள முறைமையின்

> தேசிய மக்கள் சக்தி அதன் அடையாளமாக திசைகாட்டியை தேர்வு செய்துள்ளது. தேசிய மக்கள் சக்தியின் கொள்கைகள் மற்றும் கொள்கைகளுக்கு ஒருவர் வாக்களிக்கும்போது, அவர் தனது சிறிய சிலுவையை திசைகாட்டிக்காகக் குறிக்க வேண்டும். எவ்வளவு முரண்பாடாக, எவ்வளவு அடையாளமாக, எவ்வளவு பொருத்தமானதாக இருக்கும்? திசைகாட்டி எப்படி தேசிய மக்கள் சக்தியின் சின்னமாக இருந்தது, எனக்குத் தெரியாது, உண்மையில் நான் அறிய விரும்பவில்லை. முக்கியமானது என்னவென்றால், அனைத்து தூசுகளும் படிந்தால், அனுரகுமார மற்றும் தேசிய மக்கள் சக்தி இன் தலைமை அவர்களின் சொந்த சின்னத்திற்கு தகுதியானதா என்பதுதான்.



மொத்தப் போதாமைகள் மற்றும் கடுமையான தோல்விகளை அம்பலப்படுத்துவதில் அதன் அழுத்தமான பகுத்தறிவு இறுதியில் அதிக எதிர்பார்ப்புகளின் அசாதாரண உணர்வையும், பழையவற்றிலிருந்து விடுதலையை அடைவதற்கான உடனடி உணர்வையும் ஏற்படுத்தியது.

அரகலய -22 இன் தெளிவான பாடங்களை இன்னும் கற்க வேண்டும். எவ்வாறாயினும், அந்த வகையில், இலங்கை மக்கள் சிலசமயம் தேசிய மக்கள் சக்தியைத் தவிர, எமது பண்டிதர்கள் மற்றும் அரசியல் தலைவர்களை விட முன்னணியில் இருப்பதாகத் தெரிகிறது.

இதர வார்த்தைகளில் கூறுவதானால், கடந்த ஏழெட்டு தசாப்தங்களில் அதிகாரத்தை மட்டுமின்றி, ஆட்சியின் நல்ல, கெட்ட, அசிங்கமான அம்சங்களில் மூழ்கியிருக்கும் எமது அனைத்து அரசியல் தலைவர்கள் மற்றும் அவர்களது அரசியல் கட்சிகளின் திசைகாட்டி பழுதுபார்க்க முடியாத அளவிற்கு உடைந்துள்ளதாக தெரிகிறது.

நாட்டின் திசைகாட்டி ஒரு பாதைக்கு வழிகாட்டியபோது, நம் தலைவர்கள் நம்மை எதிர்த் திசைக்கு அழைத்துச் சென்றனர். பெரும்பாலும், அந்தத் தவறான வழிகாட்டுதல் தவறான புரிதல் அல்லது அவர்கள் தரப்பில் இருந்து முழுமையான புறக்கணிப்பு காரணமாக இல்லை, இது நூறு சதவிகிதம் அவர்களின் திட்டமிட்ட, திட்டமிடல் மற்றும் சதித்திட்டத்தின் காரணமாக நாட்டை ஒரு திசையில் நிதி மற்றும் ஏனைய அவர்களின் தீவிர விருப்பப்படி சுரண்டக்கூடிய பொருள் வளங்கள்உள்ள திசையில் கொண்டு செல்லும்.

மறுபுறம், ஏ.கே.டி., சஜித், ரணில், கோத்தாபய அல்லது மகிந்த என அனைத்து அரசியல்வாதிகளும் மக்களுக்கு சேவை செய்ய வேண்டும் என்ற தூய்மையான நோக்கத்துடன் அதிகாரத்தை தேடுவதில்லை. அவர்கள் 'போதிசத்துவர்கள்' இல்லை என்றாலும், அடிப்படை உரிமைகளை வெட்கக்கேடான மீறல் செய்யப்படும்போது வேறு வழியைப் பார்க்க முடியாது.

எந்த ஒரு அரசியல்வாதியும் சாமானியர்கள் செலுத்தும் விலையில் அரசியலில் ஈடுபட்டு தங்களை வளப்படுத்திக் கொண்டது நிரூபிக்கப்பட்டால் தண்டனையிலிருந்து தப்பக் கூடாது.

அனுரகுமார மற்றும் தேசிய மக்கள்சக்தி மட்டுமே இன்று வாக்காளரால் விடுபட்டுள்ளது. ஆயினும்கூட, அவர்கள் பழைய மார்க்சியக் கோட்பாடுகள் மற்றும் ஆட்சி முறைகளை கடைப்பிடிப்பது இந்த நேரத்தில் அவர்களுக்கு சரியாக சேவை செய்யாது.

குலாக் தீவுக்கூட்டத்தில், அலெக்சாண்டர் சோல்ஜெனிட்சின் இவ்வாறு எழுதுகிறார்: 'சித்தாந்தம் - அதுவே தீய செயலை நீண்ட காலமாகத் தேடும் நியாயத்தை அளிக்கிறது. அதுவே சமூகக் கோட்பாடானது, அவனுடைய செயல்கள் அவனுடைய பார்வையிலும் மற்றவர்களின் பார்வையிலும் கெட்டதாகக் காட்டப்படுவதற்குப் பதிலாக நல்லவையாகத் தோன்ற உதவுகின்றன. அதனால் அவன் நிந்தைகளையும் சாபங்களையும் கேட்க மாட்டான். ஆனால் பாராட்டும் மரியாதையும் பெறுவான். சோல்ஜெனிட்சினின் சொற்களையும் எழுத்துக்களையும் புறக்கணிக்க முடியாது.

தேசிய மக்கள் சக்தியின் அரசியலுக்கான தூய்மையான அணுகுமுறையை வெளிப்படுத்தும் ஒரு காரணி அவர்களின் ஒளி ஊடுருவக்கூடிய மற்றும் வெளிப்படையான நேர்மை மற்றும் கல்வி ஆகும். மற்ற அனைத்து அரசியல் கட்சிகளும் நேர்மை மற்றும் கல்வி பற்றி தற்பெருமை காட்ட முடியாது.

கல்வி, முதல் சில அமைச்சரவைகளில் ஆதிக்கம் செலுத்தினாலும், குறிப்பாக டி.எஸ் இன் முதல், டட்லி மற்றும் ஜே.ஆரின் கடைசி அமைச்சரவை, நன்கு படித்தவர்களாகக் கருதப்பட்டவர்களால் முடிசூட்டப்பட்டது. மற்றும் அந்தத் துறையின் உயர்மட்ட நிலைகளை ஆக்கிரமித்துள்ளது. அவர்களின் இறுதி செயல்திறன் பச்சாதாபம் மற்றும் நாட்டின் உள்ளூர், பழமையான நிலைமைகளுடன் தொடர்பு கொள்ள இயலாமை.

இன்றைய அமைச்சரவை கூட முழுக்க முழுக்க ஏமாற்றுக்காரர்கள் மற்றும் பேராசை கொண்ட ஆண்களையும் பெண்களையும் உள்ளடக்கியது, அவர்களின் முதன்மை நோக்கமாக அரசியலில் நுழையும் போது, தங்களையும் தங்கள் குடும்பங்களையும், உதவியாளர்களையும் வளப்படுத்த வேண்டும். அவர்களின் அரசியல் மற்றும் தார்மிக திசைகாட்டி என்பது சுருள்கள் மற்றும் கம்பிகளின் ஒன்றிணைந்த தொகுப்பாகும், அவர்கள் அரசியலுக்கு வருவதற்கு முன்பே அது இருந்தது.

தேசிய மக்கள் சக்தி அதன் அடையாளமாக திசைகாட்டியை தேர்வு செய்துள்ளது. தேசிய மக்கள் சக்தியின் கொள்கைகள் மற்றும் கொள்கைகளுக்கு ஒருவர் வாக்களிக்கும்போது, அவர் தனது சிறிய சிலுவையை 'திசைகாட்டி'க்காகக் குறிக்க வேண்டும். எவ்வளவு முரண்பாடாக, எவ்வளவு அடையாளமாக, எவ்வளவு பொருத்தமானதாக இருக்கும்? திசைகாட்டி எப்படி தேசிய மக்கள் சக்தியின் சின்னமாக இருந்தது, எனக்குத் தெரியாது, உண்மையில் நான் அறிய விரும்பவில்லை. முக்கியமானது என்னவென்றால், அனைத்து தூசுகளும் படிந்தால், அனுரகுமார மற்றும் தேசிய மக்கள் சக்தி இன் தலைமை அவர்களின் சொந்த சின்னத்திற்கு தகுதியானதா என்பதுதான்.





ஐங்கரன்

# ஆழமான ஆபத்து

சீனாவின் நீர்மூழ்கிகளின் நடவடிக்கை தீவிரமடைந்து வருவது, தென்னாசிய பிராந்தியத்தில் மிகப்பெரும் இராணுவ சவாலாக மாறி வருகின்றது. சீனாவின் நீர்மூழ்கிகளின் எண்ணிக்கையும் திறனும் அதிகரித்து வருகிறது. அத்துடன் அணுவாயுத திறனை மாத்திரம் அதிகரிக்கவில்லை, தனது பிராந்தியங்கள் என சீனா கருதுபவற்றை பாதுகாக்க கூடிய அதன் திறனையும் அதிகரிக்கின்றது சீனா.

சீனா பூமர் எனும் நீர்முழ்கியை கடலுக்குள் அனுப்பியுள்ளது. இந்த நீர்மூழ்கி அணு ஏவுகணைகளை கொண்டிருக்கும் என அமெரிக்காவின் கடற்படை புலனாய்வு தெரிவித்துள்ளது.

**சீன நீர்மூழ்கி ஏவுகணைகள். உலக கடல் வல்லரசாக சீனா முயற்சி.**

## மீண்டும் பனிப்போரா ?

பனிப்போர்காலத்தில் அமெரிக்க - சோவியத் நீர்மூழ்கிகள் மத்தியில் இடம்பெற்ற போட்டி போன்ற ஒன்றை ஆசியாவில் சீனாவின் நீர்மூழ்கிகள் ஆரம்பித்து வைக்கலாம் என்பது கடற்படை நிபுணர்களின் கணிப்பாக உள்ளது. அக்காலப்பகுதியில் இரு நாடுகளும் தமது நீர்மூழ்கிகளை ஏனைய நாட்டை நோக்கி தாக்குவதற்கு ஏதுவாக கடலுக்கு அடியில் அனுப்புவது வழமையாக காணப்பட்டது. அதேபோன்று ஏனைய நாடுகளின் நீர்மூழ்கிகளை இனம்கண்டு அழிப்பதற்கான நீர் மூழ்கிகளையும் அனுப்பின. சோவியத்தின் வீழ்ச்சி அந்த போட்டியை முடிவிற்கு கொண்டு வந்தது. ஆனால் இன்று சீனா தனது கடலுக்கடியிலான பலத்தை அதிகரிக்க தொடங்கியுள்ளதை அடுத்து, அமெரிக்காவின் ஆசிய சகாக்கள் அதனை எதிர்கொள்ள தமது நீர்மூழ்கிகளின் பலத்தை அதிகரிக்கத் தொடங்கியுள்ளன.

சீனாவோ அல்லது அமெரிக்காவோ பனிப்போர்காலம் திரும்புவதை விரும்பவில்லை. அவர்களது பொருளாதாரங்கள் ஒன்றில் ஒன்று தங்கியுள்ளன. சந்தையை மையமாக வைத்து சிந்திக்கும் இன்றைய சீனா சர்வதேச புரட்சி குறித்து சிறிதளவும் சிந்திக்கவில்லை. தங்களது நீர்மூழ்கிகள் ஏனைய நாடுகளை அச்சுறுத்தவில்லை என தெரிவிக்கும் சீன அதிகாரிகள் தங்களுடைய பிரதேசத்தை பாதுகாப்பதற்கும், சர்வதேச நலன்களை விஸ்தரிப்பதற்குமே அவை என்கின்றனர்.

## இந்து சமுத்திரத்தில் சீன நீர்மூழ்கி:

இந்து சமுத்திரம் மற்றும் பசுபிக்கில் தமது நீர்மூழ்கிகள் சர்வதேச சட்டங்களை பின்பற்றுகின்றன என தெரிவிக்கும் சீனாவின் பாதுகாப்பு அதிகாரிகள், சகல தரப்புகளுடனும்



சிறந்த தொடர்பாடல்களை பேணுவதாகவும் குறிப்பிடுகின்றனர்.

சீனா தனது பாதுகாப்புக் கொள்கைகளை மாற்றாமல் தனது சர்வதேச கடமைகளை நிறைவேற்ற நீர்மூழ்கிகள் உதவுகின்றன என்கிறார் சீன நாட்டின் பாதுகாப்பு பேச்சாளர். எனினும், ஆசியாவில் தனது இராஜதந்திர மற்றும் இராணுவ வளங்களை குவிக்கும் தனது தந்திரோபாயத்தின் ஒரு பகுதியாக அமெரிக்கா தனது நீர்மூழ்கிகளை முன்னணிக்கு நகர்த்தியுள்ளது. அமெரிக்காவின் கடலுக்கடியிலான பலத்தின் 60 வீதம் பசுபிக்கிலேயே காணப்படுகின்றது. அமெரிக்கா தனது தாக்குதல் நீர்மூழ்கியை குவாமில் நிறுத்தியுள்ளது.

ஜப்பானில் ஒகினாவாவில் அமெரிக்கா ஆறு நீர்மூழ்கிகளை நிறுத்தியுள்ளது. அத்துடன் ரஷ்யாவின் நீர்மூழ்கிகளை கண்டறிவதற்கான திறனை அதிகரித்துள்ள அமெரிக்கா, சீனாவின் நீர்மூழ்கிகளை கண்டு பிடிப்பதற்காக கடலுக்கடியில் இயங்கும் ஆளில்லா கலங்கள் போன்ற தொழில் நுட்பங்களை பரிசோதனை செய்து வருகின்றது.

வேறு பல ஆசிய நாடுகளும் தமது நீர்மூழ்கி பலத்தை அதிகரிக்க திட்டமிட்டுள்ளன. பனிப்போர் காலத்தை விட தற்போது அப்பகுதியில் அதிகளவு நீர்மூழ்கிகள் காணப்படுகின்றன. இவற்றின் பாதுகாப்பே மிகப்பெரும் பிரச்சனையாகும். ஒரே கடற்பரப்பில் பல நீர்மூழ்கிகளை விடும்போது அவை மோதிக் கொள்வதற்கான சாத்தியக்கூறுகள் அதிகம் உள்ளன.

## சீனாவிடம் மிக வலுவான தாக்குதல் நீர்மூழ்கி:

சீனாவிடம் தற்போது மிக வலுவான தாக்குதல் நீர்மூழ்கி தொகுதியொன்று காணப்படுகின்றது. அவற்றில் 5 அணுவாயுத மாதிரிகள், பூமர்களும் காணப்படுகின்றன. சீன நீர்மூழ்கிகளின் வரலாறு, நீர்மூழ்கிகளை உருவாக்குவதற்கான சீனாவின் ஆர்வம் 1960 களிலேயே ஆரம்பமாகி விட்டது. 1000 வருடங்கள் ஆனாலும் அணுவாயுத நீர்மூழ்கியொன்றை உருவாக்குவோம் என்றார் மாவோ-சேதுங்.



1950 களிலிருந்து சீனா டீசல் நீர்மூழ்கிகளை பயன்படுத்தி வந்துள்ளது. ஆனால் அவை நீரிற்கு மேலாக அடிக்கடி வரவேண்டிய தேவை காணப்பட்டதால் அவற்றை இனம் காண்பது சுலபமாக காணப்பட்டது. அணுசக்தி நீர்மூழ்கிகள் வேகமானவை. நீண்ட காலம் கடலுக்குள் இருக்கக் கூடியவை.

1970 ஆம் ஆண்டு மாவோவின் பிறந்த நாளின் போது சீனா தனது முதலாவது அணுசக்தி நீர்மூழ்கியை வெள்ளோட்டம் விட்டது. 1988 இல் தனது கடலுக்கடியிலான ஏவுகணை பரிசோதனையை மேற்கொண்டது.

## உலக கடல் வல்லரசாக சீனா:

தென் ஜப்பானிலிருந்து பிலிப்பைன்ஸ் வரையும், வட ஜப்பானிலிருந்து இந்தோனேசியா வரையும் உள்ள அமெரிக்க படைகளால்






சீனா நெருக்கடியை எதிர்கொள்வதாக சீனா கருதுகிறது. சீனா தனது கடல் ஆதிக்கத்தை 2050 ற்குள் உலக கடல் வல்லரசாக்க வேண்டும் என முனைகிறது.

எனினும் இதுவரை சீனாவின் நீர்மூழ்கிகளின் திறன் அமெரிக்காவை நெருங்க முடியாதவையாக உள்ளன. அமெரிக்காவிடம் 14 பூமர்களும், 55 அணு தாக்குதல் நீர்மூழ்கிகளும் உள்ளன. எனினும் அமெரிக்காவின் கவலை இந்த நிலையை எவ்வாறு தொடர்ந்து காப்பாற்றுவது என்பதுதான்.

நிதி நெருக்கடி காரணமாக 2028 இல் அது தனது நீர்மூழ்கிகளின் எண்ணிக்கையை குறைக்க எண்ணியுள்ளது. பனிப்போர் சோவியத்தின் பொருளாதாரத்தை வீழ்த்திய விதத்தை நன்கு அறிந்துள்ள சீனா அமெரிக்காவிற்கு சமமாக மாறுவதற்கு நினைக்கவில்லை.

## ஹவாய் - அலாஸ்காவை தாக்கும் வல்லமை:

சீனாவின் இந்த பூமர்களில் காணப்படும் ஏவுகணைகள் கிழக்கு ஆசியாவிலிருந்து ஹவாய் மற்றும் அலாஸ்காவை தாக்கக்




கூடியவை. பசுபிக்கின் நடுப்பகுதியிலிருந்து அமெரிக்காவின் சில பகுதிகளை இலக்கு வைக்கக் கூடியவை என்பதை அமெரிக்க அதிகாரிகளே ஏற்றுக் கொள்கின்றனர்.

ஏனைய நாடுகளின் கடற்படைத் தளங்களுக்கு இந்து சமுத்திரப் பகுதியில் தடையற்ற பயணத்தை சீனா நீர்மூழ்கி மேற்கொண்டது என்பது மிக முக்கியமான விடயம். ஹவாயிலுள்ள அமெரிக்க கடற்படையின் பசுபிக் கடற்படை பிரிவு வரை தன்னால் சென்றுவர முடியும் என சீனா நிரூபித்துள்ளது. இது அமெரிக்காவை அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.

கடந்த வருடங்களில் உலக நாடுகளின் கவனம் சீனாவின் அதிகரித்து வரும் இராணுவத் தளபாடங்கள் குறித்து திரும்பியுள்ளது. விமானந் தாங்கி கப்பல்கள், அதிநவீன தாக்குதல் விமானங்கள் என அது தன்னை பலப்படுத்தியுள்ளது.

## நீர்மூழ்கிகள் ஏன் முக்கியம் ?

சீனாவிற்கு நீர்மூழ்கிகள் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த ஆயுதங்களாகும். ஒரு நீர்மூழ்கியே சீனாவின் வல்லமையை பறைசாற்றவும், தன்னுடைய வெறும் பிரசன்னம் மூலமாக ஏனைய நாடுகளை தடுத்து நிறுத்தவும் போதுமானது.

தாய்வான், அல்லது ஜப்பான், பிலிப்பைன்ஸ் போன்ற நாடுகளுடனான மோதலில் அமெரிக்கா தலையிடுவதை தடுப்பதற்கான தந்திரோபாயத்தின் ஒரு பகுதியே இந்த நீர்மூழ்கிகள் என அமெரிக்கா கருதுகின்றது.

அமெரிக்காவின் சகாக்களான ஜப்பானும், பிலிப்பைன்சும் சீனாவுடன் நிலப்பகுதிக்கான தகராறில் இன்னமும் சிக்கியுள்ளன.

## அமெரிக்க தலையீட்டை தடுக்கும் தந்திரோபாயம் :


சீனாவின் பூமர் நீர்மூழ்கிகளே அமெரிக்காவை கடலிலிருந்து மேற்கொள்ளப்பட கூடிய ஏவுகணை தாக்குதல் குறித்து சிந்திக்க தூண்டியுள்ளது. அதனை எதிர்கொள்வது குறித்து அமெரிக்கா திட்டமிட்டு வருகின்றது.

அமெரிக்காவின் நீர்மூழ்கிகளையும், சர்வதேச அளவில் பயணம் செய்யக் கூடிய அதன் திறமையையும், உலகின் பல பகுதிகளில் அமெரிக்காவால் செல்வாக்கு செலுத்தக் கூடியதாக உள்ளதையும் சீனா பல வருடங்களாக அவதானித்திருக்க வேண்டும்.

சீனாவின் நீர்மூழ்கிகள் உலகில் கடல், ஆகாயம் மற்றும் தரையிலிருந்து அணுவாயுத தாக்குதல்களை மேற்கொள்ள கூடிய மூன்று நாடுகளில் ஒன்றாக சீனாவை மாற்றியுள்ளது. அமெரிக்காவும், ரஷ்யாவும் மற்றைய இரு நாடுகளாகும்.

## சீனா நீர்மூழ்கி ஏவுகணை - ஆழமான ஆபத்து:

ஆழமான கடற் பகுதியூடாக பயணம் செய்யக்கூடிய அணுவாயுத நீர்மூழ்கியை கொண்டுள்ள நாடுகளின் பட்டியலில் இணைய வேண்டுமென்ற சீனாவின் நீண்ட நாள் கனவு சாத்தியமாகி விட்டது.






# கோட்டாவின் புத்தகம்

கோட்டபாய ராஜபக்ஷ அண்மையில் 'என்னை ஜனாதிபதி பதவியில் இருந்து அகற்றுவதற்கான சதி' (The Conspiracy to oust me from the Presidency) என்ற தலைப்பில் நூல் ஒன்றை வெளியிட்டிருக்கிறார். ஆங்கிலத்திலும் சிங்களத்திலும் எழுதப்பட்டிருக்கும் அந்த நூலை இலங்கையின் முக்கியமான நூல் நிலையங்களில் பெற்றுக்கொள்ள முடியும் என்று அவர் கடந்த வாரம் வெளியிட்ட ஊடக அறிக்கையில் அறியத் தந்திருக்கிறார். கொழும்பில் அரசியல்வாதிகளையும் இராஜ தந்திரிகளையும் அழைத்து பெரும் ஆரவாரத்துடன் நூல் வெளியீட்டு வைபவத்தை நடத்துவதை அவர் தவிர்த்திருக்கிறார்.

உள்நாட்டு, வெளிநாட்டு ஊடகங்கள் இந்த நூலுக்கு பெரும் முக்கியத்துவம் கொடுப்பதை காணக் கூடியதாக இருக்கிறது. ஆனால், இலங்கையில் மக்கள் மத்தியில் பெரிய பரபரப்பை நூல் ஏற்படுத்தி இருப்பதாகக் கூறமுடியாது.

இலங்கையில் இதுகால வரையில் பதவியில் இருந்த நிறைவேற்று அதிகார ஜனாதிபதிகளில் மக்கள் கிளர்ச்சியின் விளைவாக அதிகாரத்தைத் துறக்க நிர்ப்பந்திக்கப்பட்ட முதல் ஆளான கோட்டபாய, நூலுக்கு வேறு தலைப்பைக் கொடுத்திருந்தால் சிலவேளை கூடுதல் கவனத்தை ஈர்த்திருக்க முடியும்.

சதி முயற்சி என்பது ராஜபக்ஷர்கள் நெடுகவும் கூறிவருகின்ற ஒன்று என்பதால் நூல் ஒரு பழைய கதை என்று பலரும் கருதவும் இடமிருக்கிறது. சதிக் கோட்பாடுகளைப் புனைவது ராஜபக்ஷ சகோதரர்களுக்கு கைவந்த கலை. 2015 ஜனாதிபதித் தேர்தலில் தோல்வியடைந்த மஹிந்த ராஜபக்ஷ தன்னை தோற்கடித்தது இந்திய புலனாய்வுப் பிரிவான 'றோ' தான் என்று பகிரங்கமாகவே கூறினார்.






இலங்கையில் முன்னென்றும் இல்லாத வகையில் இரு வருடங்களுக்கு முன்னர் தங்களை ஆட்சியதிகாரத்தில் இருந்து விரட்டிய 'அறகலய' மக்கள் கிளர்ச்சியை உள்நாட்டு, வெளிநாட்டு சக்திகளின் சதி என்று ராஜபக்ஷர்கள் நெடுகவும் கூறிவருகிறார்கள். படுமோசமான பொருளாதார நெருக்கடிக்குக் காரணமான, ஊழல் தலைவிரித்தாடிய தங்களது தவறான ஆட்சிமுறைக்கு எதிராகவே மக்கள் தன்னியல்பாக வீதிகளில் இறங்கி கிளர்ச்சி செய்தார்கள் என்பதை ராஜபக்ஷர்கள் ஒருபோதும் ஏற்றுக் கொள்வதில்லை.

கோட்டபாயவுக்கு முன்னர், ராஜபக்ஷர்களின் அதிவிசுவாசிகளில் ஒருவராக இருந்து பிறகு அமைச்சர் பதவி பறிக்கப்பட்டதன் காரணமாக அவர்களை விட்டு வெளியேறிய தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்சவும் 'ஒன்பது மறைக்கப்பட்ட கதைகள்' (Nine The Hidden Story) என்ற நூலை கடந்த வருடம் வெளியிட்டு மக்கள் கிளர்ச்சிக்குப் பின்னணியில் வெளிநாட்டுச்சதி இருந்ததாகக் குற்றஞ்சாட்டினார்.

உள்நாட்டுப் போரின் முடிவுக்குப் பிறகு கோட்டபாய அரசியலில் இறங்குவதற்கான ஒரு அச்சாரமாக 2012 ஆம் ஆண்டில் பத்திரிகையாளர் சி.ஏ. சந்திரப்பிரேமா 'கோட்டாவின் போர்; இலங்கையில் தமிழ்ப் புலிகளின் பயங்கரவாதம் ஒழிப்பு (Gota's war; The crushing of Tamil Tiger terrorism in Sri Lanka) என்ற நூலை எழுதி வெளியிட்டார். அந்த நூல் மஹிந்த ராஜபக்ஷ ஆட்சியில் பாதுகாப்புச் செயலாளராக இருந்த கோட்டபாயவுக்கே போர் வெற்றிக்கான முழுப் பெருமையையும் உரித்தாக்கும் நோக்கில் எழுதப்பட்டது.

நீண்ட கால மௌனத்தைக் கலைத்து கோட்டபாய தற்போது தனது நூலை வெளியிட்டிருப்பது, மீண்டும் அரசியலுக்கு வருவதற்கான களத்தை அமைப்பதில் முதல் அடியெடுத்து வைப்பாக இருக்கலாம் என்ற ஊகங்களும் ஒருபுறம் கிளம்புகின்றன.

சர்வதேச சக்திகளின் அனுசரணையுடன் முன்னெடுக்கப்பட்ட ஆட்சிமாற்ற நடவடிக்கையின் விளைவாகவே அதிகாரத்தில் இருந்து தான் இறங்க வேண்டி வந்தது என்று கோட்டபாய நூலில் விபரிக்கிறார். ஆட்சிக் கவிழ்ப்பு சதி பற்றிய தனிப்பட்டதும் நேரடியானதும் அனுபவத்தின் விளக்கம் என்று நூலை அவர் வர்ணிக்கிறார். எந்த நாட்டினதும் பெயரைக் குறிப்பிடுதை அவர் தவிர்த்திருக்கிறார்.

சீனாவுக்கும் ஏனைய நாடுகளுக்கும் இடையிலான புவிசார் அரசியல் போட்டியே தனது வீழ்ச்சிக்குப் பொறுப்பு என்பது அவரது நிலைப்பாடு. 2006 ஆம் ஆண்டுக்குப் பிறகு சீனாவின் நிதியுதவியுடன் முன்னெடுக்கப்பட்ட உட்கட்டமைப்புத் திட்டங்கள், இலங்கையில் புவிசார் அரசியல் போட்டிப் போக்கு ஒன்றைக் கொண்டு வந்ததன் விளைவே தனது அரசியல் வீழ்ச்சி என்பது அவரது தர்க்க நியாயம்.

வெளிநாட்டுச்சதி இருக்கவில்லை என்று எவராவது கூறுவார்களேயானால் அவர்கள் உண்மையில் பத்தாம் பசலிகளாகவே இருக்கமுடியும் என்று வேறு அவர் கூறுகிறார்.

நூலின் நோக்கம் குறித்து அதை வாசிக்காமேயே சுருக்கமாக விளங்கிக் கொள்ளக்கூடியதாக கோட்டபாய கடந்த வாரம் வெளியிட்ட அறிக்கை அமைந்திருந்தது.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரில் நாம் வெற்றி பெற்ற நாளில் இருந்து இலங்கையில் கடுமையான வெளிநாட்டுத் தலையீடு தொடங்கிவிட்டது. 2019 நவம்பரில் நான் ஜனாதிபதியாக தெரிவான நேரம் தொடக்கம் என்னை அதிகாரத்தில் இருந்து அகற்றும் நோக்குடன் உள்நாட்டு, வெளிநாட்டு சக்திகள் செயற்படத் தொடங்கிவிட்டன.

நான் பதவியேற்ற உடனடியாகவே இலங்கையிலும் உலகம் முழுவதும் கொவிட் - 19 பரவத் தொடங்கிவிட்டது. அதைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளில் எனது இரண்டரை வருட பதவிக் காலத்தையும் செலவிட வேண்டி ஏற்பட்டது. தடுப்பூசி இயக்கத்தின் மூலமாக அந்த பெருந்தொற்று நோயை 2022 மார்ச் மாதமளவில் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்ததை அடுத்து பொருளாதாரம் மீட்சிபெறத் தொடங்கியதும் என்னை ஜனாதிபதி பதவியில் இருந்து அகற்றுவதற்கான நடவடிக்கைகளை

> **சர்வதேச சக்திகளின் அனுசரணையுடன் முன்னெடுக்கப்பட்ட ஆட்சிமாற்ற நடவடிக்கையின் விளைவாகவே அதிகாரத்தில் இருந்து தான் இறங்க வேண்டி வந்தது என்று கோட்டபாய நூலில் விபரிக்கிறார். ஆட்சிக் கவிழ்ப்பு சதி பற்றிய தனிப்பட்டதும் நேரடியானதும் அனுபவத்தின் விளக்கம் என்று நூலை அவர் வர்ணிக்கிறார். எந்த நாட்டினதும் பெயரைக் குறிப்பிடுதை அவர் தவிர்த்திருக்கிறார்.**




சதிகாரச் சக்திகள் தொடங்கி விட்டன.

இன்று இலங்கையில் வெளிநாட்டுத்தலையீடும், உள்நாட்டுஅரசியல் வெளிச் சக்திகளினால் சூழ்ச்சித்தனமாகக் கையாளப்படும் போக்கும் கசப்பான உண்மையாகி விட்டது. இலங்கை சுதந்திரமடைந்ததற்குப் பின்னர் முதல் அறுபது வருடங்களில் இத்தகைய ஒரு நிலை காணப்படவில்லை. என்னைப் பதவியில் இருந்து அகற்றுவதற்கான அரசியல் முயற்சிகள், சுதந்திரம் பெற்ற பிறகு தேர்தல்கள் மூலமாக அமைதியான முறையில் மாத்திரம் ஆட்சி மாற்றங்களைக் கண்டுவந்த இலங்கையின் அரசியலில் புதிய போக்கைக் கொண்டு வந்துவிட்டன.

அதனால் 2022 ஆம் ஆண்டின் நிகழ்வுகள் நாட்டின் எதிர்காலத்துக்குப் பாரதூரமான விளைவுகளைக் கொண்டுவரும் ஆபத்து இருக்கிறது. சர்வதேச அனுசரணையுடனான ஆட்சிமாற்ற நடவடிக்கை ஒன்றின் நேரடியான, தனிப்பட்ட அனுபவத்தை விளக்கும் இந்த நூல் இலங்கையர்களுக்கு மாத்திரமல்ல, வெளிநாட்டவர்களுக்கும் அக்கறைக்கு உரியதாக இருக்கும் என்கிறார் கோட்டபாய.

அறகலய பற்றிய வியாக்கியானம்

கோட்டபாயவின் நூலில் மிகவும் முக்கியமான பகுதிகள் என்று ஊடகங்கள் தெரிந்தெடுத்து கடந்த இரு தினங்களாக வெளியிட்டவற்றை அடிப்படையாகக் கொண்டதாகவே இந்தக் கட்டுரை அமைகிறது. ‘அறகலய’ மக்கள் கிளர்ச்சி குறித்து அவர் எழுதிய பகுதிகளை பல ஊடகங்கள் மேற்கோள் காட்டி கருத்துக்களைத் தெரிவித்திருக்கின்றன.

அறகலயவுடன் தொடர்புடைய சகல போராட்டங்களையும், குறிப்பாக கொழும்பில் நடைபெற்ற போராட்டங்களை, தொடர்ந்தும் தான் அதிகாரத்தில் இருந்தால் சிறுபான்மைச் சமூகங்களின் நலன்களுக்குப் பாதகமான முறையில் சிங்கள பௌத்தர்கள் பலமடைந்து விடுவார்கள் என்ற பயத்தின் காரணமாக முன்னெடுக்கப்பட்டவை என்று அவர் கூறுகிறார்.

அறகலய அதன் முதல் நாளில் இருந்தே சிங்களவர்களின், குறிப்பாக சிங்கள பௌத்தர்களின் நலன்களுக்கு விரோதமானதாக அமைந்திருந்ததாகவும் வெளிநாட்டு சக்திகளின் ஆதரவைக் கொண்டிருந்ததாகவும் அவர் குறிப்பிடுகிறார்.

மக்களின் அவலங்களுக்கு காரணமாக இருந்த பொருளாதார நெருக்கடிக்கு மூன்று ராஜபக்ஷ சகோதரர்களும், மத்திய வங்கியின் இரு ஆளுநர்கள் உட்பட அவர்களின் அரசாங்கத்தில் முக்கிய பதவிகளை வகித்த சில உயரதிகாரிகளுமே பொறுப்பு என்று 2023 நவம்பர் 14 உயர்நீதிமன்றம் தீர்ப்புக் கூறிய போதிலும், அந்த நெருக்கடிக்கு தனது அரசாங்கம் பொறுப்பு என்பதை கோட்டபாய நூலில் ஒத்துக் கொள்ளவேயில்லை.

செய்ததற்கு இரங்கி பச்சாதாபம் கொள்கிற பக்குவத்தை அவர் வெளிக்காட்டவில்லை. பாதிக்கப்பட்ட ஒரு ஆளாகத் தன்னைக் காட்சிப்படுத்தும் அவரின் முயற்சியாகவே நூல் அமைந்திருக்கிறது எனலாம்.

**அறகலய பற்றி அவர் எழுதிய பகுதிகள் வருமாறு;**

‘2022 ஏப்ரில் 9 கொழும்பு காலிமுகத்திடலில் அறகலய தொடங்கி போராட்டக்காரர்கள் கூடாரங்களை அமைத்து ‘கோட்டா கோ கம’ என்று பிரகடனம் செய்ததை அடுத்து ஊடகங்களில் சில விமர்சகர்கள் பொதுவான குறிக்கோள் ஒன்றுக்காக சகல இனக்குழுக்களையும் மதங்களையும் அறகலய ஒன்றிணைத்திருக்கிறது என்று கூறினார்கள். எனது அரசாங்கத்துக்கு எதிராக ஒன்றிணைந்த இளைஞர்கள், யுவதிகள் இனவாதத்தைத் தோற்கடித்து விட்டதாகவும் அவர்கள் குறிப்பிட்டார்கள்.

ஆனால், காலிமுகத்திடல் அறகலயவில் கூடி நின்றவர்கள் யார் என்பதை எவரும் உண்மையில் ஆராய்ந்து பார்த்தால் அவர்கள் எந்த வகையிலும் எனக்கு எதிரான பிரிவுகளைச் சேர்ந்தவர்களே என்பதை தெளிவாகப் புரிந்து கொள்ள முடியும்.

அறகலயவில் சிறுபான்மைச் சமூகங்களின் பிரதிநிதித்துவத்தை பெருமளவில் காணக்கூடியதாக இருந்தது. ஏனென்றால், அங்கு வருவதற்கு சிறுபான்மைச் சமூகங்களைத் தூண்டிய காரணிகள் இருந்தன. விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரில் நாம் வெற்றி பெற்ற நாளில் இருந்து நான் தமிழர்களுக்கு எதிரானவனாகவே கருதப்பட்டேன்.

ஒற்றையாட்சி அரசுக்கு (Unitary state) பதிலாக ஐக்கிய இலங்கைக்கு (United Sri Lanka) கோரிக்கை விடுக்கும் புலம்பெயர் தமிழர்களின் நிகழ்ச்சி நிரலை அறகலயவில் தெளிவாகக் காணமுடிந்தது. இது சமஷ்டி அரசொன்றை வேண்டி நிற்பவர்களின் நீண்ட காலக் கோரிக்கையாக இருந்து வருகிறது. அதனால் காலி முகத்திடல் போராட்டங்களின் போது ஜனாதிபதி செயலகத்தின் சுவர்களில் அந்த சுலோகங்கள் காட்சிப் படுத்தப்பட்டன.

2012ஆம் ஆண்டில் பொதுபல சேனாவின் தோற்றம் மற்றும் அந்த அமைப்பில் எனக்கு ஈடுபாடு இருந்ததாக கிளம்பிய சந்தேம் காரணமாக நான் முஸ்லிம்களுக்கு எதிரானவனாகவும் நோக்கப்பட்டேன். கொவிட் - 19 பெருந்தொற்றின் விளைவாக சடலங்களை எரிப்பது தொடர்பில் பிரச்சினை கிளம்பிய போது நான் முஸ்லிம்களுக்கு எதிரானவன் என்று ஏற்கெனவே இருந்த எண்ணம் மேலும் வலுவடைந்தது.

தமிழர்களினதும் முஸ்லிம்களினதும் வாக்குகள் என்னை எதிர்த்துப் போட்டியிட்ட வேட்பாளருக்கே பெருமளவில் கிடைத்த போதிலும், 2019 ஜனாதிபதித் தேர்தலில் நான் அதிகாரத்துக்கு தெரிவு செய்யப்பட்டேன். பதவியேற்பதற்கு சிங்கள பௌத்தர்களுக்கு முக்கியமான புனிதத் தலமான ருவான்வெலிசேய வளாகத்தையே தெரிவுசெய்தேன். பதவியேற்ற பிறகு நான்




நிகழ்த்திய உரையில் சிங்கள பௌத்தர்களின் வாக்குகளினாலேயே தெரிவு செய்யப்பட்டதாக கூறியது பல்வேறு வியாக்கியானங்களுக்கு வழிவகுத்தது.

தமிழ், முஸ்லிம் சமூகங்கள் பல்வேறு காரணங்களுக்காக என்னை எதிர்ப்பதற்கு அறகலயவுக்கு வந்தன. இதை சகல இடங்களிலும் குறிப்பாக கொழும்பில் இடம்பெற்ற போராட்டங்களில் தெளிவாகக் காணக்கூடியதாக இருந்தது. நான் தொடர்ந்தும் அதிகாரத்தில் இருந்தால் சிறுபான்மைச் சமூகங்களுக்கு பாதகமான முறையில் சிங்கள பௌத்தர்கள் பலமடைந்து விடுவார்கள் என்ற பயமும் அவர்களைத் தூண்டியிருக்கக் கூடும்.

வெளிநாட்டு நிதியுதவியைப் பெறுகின்ற, அரசாங்க சார்பற்ற தன்னார்வ நிறுவனங்களின் தாராள போக்குடைய அரசியல் செயற்பாட்டாளர்கள், சமூக ஊடகச் செயற்பாட்டாளர்கள் மற்றும் ஐக்கிய மக்கள் சக்தி, ஜனதா விமுக்தி பெரமுன, ஐக்கிய தேசிய கட்சி மற்றும் முன்னரங்க சோசலிஸ்ட் கட்சி என்று பல்வேறு எதிர்க்கட்சிகளும் அறகலயவில் பங்கேற்றன.

காலிமுகத்திடலில் ஐக்கிய தேசிய கட்சிக்கு 17 கூடாரங்கள் இருந்ததாக அந்தக் கட்சியின் முக்கிய உறுப்பினர் ஒருவரின் தகவல் மூலம் அறியமுடிந்தது. கிரிக்கெட் வீரர்கள், அவர்களின் மனைவிமார், நடிகர் நடிகைகள் என்று பல்வேறு தரப்பினரும் அங்கு நின்றார்கள்.

நூலின் முன்னுரையில் நான் சுட்டிக் காட்டியதைப் போன்று ஒரு புறத்தில் சிங்கள பௌத்தர்களின் நலன்களுக்கும், மறுபுறத்தில் சிங்களவர்களும் பௌத்தர்களும் அல்லாத சகல பிரிவினரின் நலன்களுக்கும் இடையிலான ஒரு போட்டியின் விளைவாகவே நான் அதிகாரத்துக்குத் தெரிவு செய்யப்பட்டேன். கத்தோலிக்கத் திருச்சபையுடன் நான் அதுவரையில் உன்னதமான உறவைப் பேணிவந்த போதிலும், 2021ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியில் இருந்து அவர்களும் எனக்கு எதிராகத் திரும்பினர்.

எரிபொருள், சமையல் எரிவாயு வரிசைகளையும் மருந்து வகைகள் மற்றும் அத்தியாவசிய பாவனைப் பொருட்களுக்கு நிலவிய தட்டுப்பாடுகளையும் இல்லாமற் செய்து மக்களின் இடர்பாடுகளை தணிப்பதுதான் அறகலயவின் குறிக்கோள் என்று ஒரு எண்ணம் எவருக்காவது இருந்திருந்தால் அது வெறும் மருட்சியே.

அறகலயவில் பங்கேற்றவர்களுக்கு பல்வேறு வித்தியாசமான குறிக்கோள்களும் முன்னுரிமைகளும் இருந்தன. அறகலய என்பது அதன் முதல் நாளில் இருந்தே சிங்களவர்களின், குறிப்பாக சிங்கள பௌத்தர்களின் நலன்களுக்கு பாதகமானதாகவே அமைந்திருந்தது. பெருமளவுக்கு அதே குறிக்கோள்களைக் கொண்ட வெளிநாட்டுச் சக்திகள் அறகலயவுக்கு ஆதரவளித்தன என்கிறது அது.

## பெரும்பான்மை இனவாத அணிதிரட்டல்

கோட்டபாயவின் இந்த விளக்கம் மீண்டும் பெரும்பான்மையினவாத அணி திரட்டலின் மூலம் மாத்திரமே தங்களால் அரசியலில் செல்வாக்கான நிலைக்கு வரமுடியும் என்ற ராஜபக்ஷர்களின் உறுதியான தீர்மானத்தின் ஒரு தெளிவான வெளிப்பாடாகும்.

தங்களுக்கு எதிரான அரசியல் செயற்பாடுகளை அவர்கள் மிகவும் சுலபமாகவே வெளிநாட்டுச் சதி என்று கூறிவிடுவார்கள்.

அறகலய போராட்டம் தொடங்கிய நோக்கம் தெளிவானது. ஆனால், அமைதி வழியில் முன்னெடுக்கப்பட்டு முழு உலகத்தினதும் கவனத்தை இலங்கை நோக்கி திருப்பிய அந்தப் போராட்டத்தில் அரசியல் புரட்சியொன்றுக்கான பல பரிமாணங்கள் காணப்பட்டன.

பரந்தளவிலான வெகுஜனப் போராட்டமாக அறகலய மாறியதும் பல்வேறு அரசியல் சக்திகள் அதற்குள் ஊடுருவி வன்முறை வழியில் திசை திருப்பியதே அதற்கு எதிரான அடக்குமுறை நடவடிக்கைகளை அரசியல் அதிகார வர்க்கம் நியாயப்படுத்துவதற்கு வசதியான சூழ்நிலையை உருவாக்கிக் கொடுத்தது.

அத்துடன், முறையான அரசியல் கோட்பாட்டின் வழிகாட்டலும் தலைமைத்துவமும் இல்லாத மக்கள் போராட்டங்களுக்கு நேரக்கூடிய கதிக்கு ஒரு அண்மைக்காலப் படிப்பினையாகவும் அறகலய அமைந்தது.

ஆனால், சிங்கள மக்கள் தங்களுக்கு எதிராக இவ்வளவு விரைவாக கிளர்ந்தெழுவார்கள் என்று கனவிலும் நினைத்துப் பார்த்திருக்காத ராஜபக்ஷர்களினால் அதைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை. விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரை முடிவுக்குக் கொண்டு வந்ததற்காக சிங்கள சமுதாயம் என்றென்றைக்கும் தங்களுக்கு விசுவாசமாக இருக்க வேண்டும் என்றும், இலங்கையின் ஆட்சியதிகாரம் தங்களது ஏகபோக உரித்து என்றும் ஒரு எண்ணத்தை அவர்கள் வளர்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

> அறகலய பற்றிய வியாக்கியானம் கோட்டபாயவின் நூலில் மிகவும் முக்கியமான பகுதிகள் என்று ஊடகங்கள் தெரிந்தெடுத்து கடந்த இரு தினங்களாக வெளியிட்டவற்றை அடிப்படையாகக் கொண்டதாகவே இந்தக் கட்டுரை அமைகிறது. அறகலய மக்கள் கிளர்ச்சி குறித்து அவர் எழுதிய பகுதிகளை பல ஊடகங்கள் மேற்கோள் காட்டி கருத்துக்களைத் தெரிவித்திருக்கின்றன.



> தனது வீழ்ச்சிக்கு வெளிநாட்டுச் சதியே காரணம் என்று கூறும் கோட்டபாய அவர் அதிகாரத்துக்கு வருவதற்காக சிறுபான்மைச் சமூகங்களுக்கு எதிரான சுலோகங்களை முன்வைத்து, மக்கள் மத்தியில் குரோதங்களை வளர்த்து, சிங்கள மக்களின் வாக்குகளை அமோகமாகப் பெறுவதற்கு கடந்த ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னதாக தீவிரமாக முன்னெடுக்கப்பட்ட நச்சுத்தனமான பிரசாரங்களும் கூட ஒரு அரசியல் சதிதான் என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும் என்று அரசியல் அவதானியொருவர் தெரிவித்த கருத்து மிகவும் கவனிக்கத்தக்கது.

தங்களது செயற்பாடுகளை விமர்சனமின்றி சிங்களவர்கள் ஆதரிக்க வேண்டும் என்று ராஜபக்ஷர்கள் எதிர்பார்த்தார்கள்.

அதில் தங்களுக்குக் கிடைத்த தோல்வியை நிவர்த்தி செய்து மீண்டும் அதிகாரத்துக்கு வருவதற்கு ராஜபக்ஷர்களுக்கு வெளிநாட்டுச் சதி என்ற பிரசாரத்தையும் சிறுபான்மைச் சமூகங்களுக்கு எதிரான அரசியலையும் தவிர வேறு மார்க்கம் இல்லை. மக்கள் கிளர்ச்சியை, சிங்கள பௌத்தர்களின் நலன்களுக்கு எதிரானது என்ற கோட்டபாயவின் கருத்து அந்தச் சமூகத்தின் விவேகத்தை அவமதிப்பதாகும்.

ஊழல் முறைகேடுகளையும் அதிகார துஷ்பிரயோகம் மற்றும் தவறான ஆட்சியையும் மூடி மறைப்பதற்கு இனிமேலும் பெரும்பான்மை இனவாத அணிதிரட்டலுக்கு இடமளித்தால் இலங்கைக்கு எதிர்காலமே இல்லை.

ராஜபக்ஷர்கள் அந்த அணிதிரட்டலை ஏற்கெனவே ஆரம்பித்துவிட்டார்கள். ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் செல்வாக்கை மீளக்கட்டியெழுப்பும் முயற்சிகளை முன்னெடுக்கும் ராஜபக்ஷ குடும்பத்தின் அரசியல் வாரிசு நாமல் ராஜபக்ஷ கிராமங் கிராமமாக விகாரைகளுக்குச் சென்று பிக்குமாரைச் சந்தித்து வருகிறார். சிங்கள பௌத்தர்களிடம் ராஜபக்ஷர்களின் இந்த இனவாத அணிதிரட்டல் முயற்சி மீண்டும் எடுபடுமா என்பதை அடுத்த தேர்தல் ஒன்றின் மூலமாக மாத்திரமே தெரிந்துகொள்ளக் கூடியதாக இருக்கும்.


தனது வீழ்ச்சிக்கு வெளிநாட்டுச் சதியே காரணம் என்று கூறும் கோட்டபாய அவர் அதிகாரத்துக்கு வருவதற்காக சிறுபான்மைச் சமூகங்களுக்கு எதிரான சுலோகங்களை முன்வைத்து, மக்கள் மத்தியில் குரோதங்களை வளர்த்து, சிங்கள மக்களின் வாக்குகளை அமோகமாகப் பெறுவதற்கு கடந்த ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னதாக தீவிரமாக முன்னெடுக்கப்பட்ட நச்சுத்தனமான பிரசாரங்களும் கூட ஒரு அரசியல் சதிதான் என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும் என்று அரசியல் அவதானியொருவர் தெரிவித்த கருத்து மிகவும் கவனிக்கத்தக்கது.

இன்றைய புவிசார் அரசியல் நிலைவரங்களை நோக்கும்போது நாடுகளின் உள் விவகாரங்களில் வல்லாதிக்க நாடுகள் அவற்றின் மூலோபாய நலன்களுக்காக தலையிடும் போக்கு அதிகரித்து வருகிறது. ஆனால், அவ்வாறான தலையீடுகளுக்கு வசதியான சூழ்நிலைகளை ஆட்சியாளர்களே காரணமே தவிர மக்கள் ஏற்படுத்துவதில்லை.

இன்றைய இலங்கை நிலைவரத்தை நோக்கும்போது வரவிருக்கும் தேசிய தேர்தல்களில் வெற்றிபெறுபவர்கள் யார் என்பதை நாட்டு மக்கள் மாத்திரம் தீர்மானிக்கக் கூடியதாக இருக்கும் என்று சொல்ல முடியாமல் இருக்கிறது. வல்லாதிக்க நாடுகள் அவற்றின் நலன்களை பாதுகாத்துக் கொள்வதற்காக வெவ்வேறு அரசியல் கட்சிகளை தங்கள் செல்வாக்கிற்கு உட்படுத்தும் வியூகங்களை வகுக்கின்றன என்பது ஒன்றும் இரகசியமானது அல்ல. கோட்டாபயவின் நூல் குறித்த பல்வேறு விமர்சனங்கள் தொடர்ச்சியாக வரும் என்று எதிர்பார்க்கலாம்.

இது இவ்வாறிருக்க, ரணில் விக்கிரமசிங்க ஐக்கிய தேசிய கட்சியின் தன்னந்தனி உறுப்பினராக நாடாளுமன்றத்தில் இருந்துகொண்டு எவ்வாறு ஜனாதிபதியாக வந்தார் என்ற கதையை நூலாக விரைவில் வெளியிட இருப்பதாக கட்சியின் தவிசாளர் நாடாளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்தன அறிவித்திருக்கிறார். அவர் ஏற்கெனவே ஜனாதிபதியைப் பற்றி பத்திரிகைகளில் வெளியான கேலிச் சித்திரங்களை தொகுத்து ஒரு நூலாக கடந்த வாரம் வெளியிட்டிருந்தார்.

அதிகாரத்தை விட்டு ஓடிப்போனவர் தனது கதையை வெளியிட்ட கையோடு அவரின் இடத்துக்கு அதிகாரத்துக்கு வந்தவரின் கதையும் வரவிருக்கிறது. வாசிப்போம்.



# பெண் என்னும் பொக்கிஷம்



நாணம் கொண்டு
பூமி பார்த்த பெண்ணே! - நீ
வானம் அளக்க
உனை
வளைத்து கொள்ளும்
வழியின் திறவுகோல்
உன்
வலிகளின் வலிமை தானோ..?

தேயிலை தேசத்தின்
எம் தேசமாதாக்களே..!!
நீங்கள் தேடி பெறா வெற்றி
இங்கு தேடல் பொறியில் கூட
நாங்கள் பொறிப்பதில்லை..!
அங்கும் நீங்களே
சாதனை வடிவிலான
தலைப்பு செய்திகள்.....!!

தாயாய்
தலைமுறைகளை
பிரசவிக்கும் நீ
பூமி
ஆள வந்த சாமியின்
நகல்
எனும் நன்னுரை
உரைக்க ஓர் நற்கவி இங்கே..!

ஆண்களின் அத்தனை
சாதனை களத்திலும்
சாதாரணமாய்
தன் தடம் பதிக்கும்
சாதனை பெண்ணே! - நீ
சாதிக்கவே பிறந்த
சாகா வரம் தான்...!!

உன்
உயரிய பரமாணங்கள்
உலகின்
காப்பியங்கள் காணா
கதாபாத்திரங்கள்...!
காவியங்கள் பேச மறந்த
கதை கருக்கள்..!
வரலாறுகள் பொதிக்க மறந்த
கல்வெட்டுக்கள்..!!

மகளாகி
தந்தை வரம் தருகிறாள்..
மனைவி எனும் மந்திரத்தில்
ஆணை கணவனாக்கி
மனை ஆள்கிறாள்...

எதனாலும்.. எவராலும்..
நிரப்ப முடியா உருவில்
தாயாகி அன்னை வடிவில்
அகிலம் எல்லாம் ஆள்கிறாள்...

இவள் உண்மையில்
உலகின் பொக்கிஷம்...
கின்னஸ் சாதனையின்
உன்னதம்...
இவளை
போற்றி வாழ்த்துவதில்
வரிசை கட்டும் கவிகளில் நான்
நன்றி மிக்கவள்..

**கவிநிலா**



# சர்வதேச துறைகளில் பெண்கள்

21 ஆம் நூற்றாண்டில் மாறிக் கொண்டிருக்கும் அதீத தொழில்நுட்ப மாற்றங்களுடன் கூடிய இன்றைய காலகட்டத்தில், உலகில் மனிதனைப் படைக்கும் சக்தி சொரூபமாகவும், கண்ணில் பட்ட தெய்வமாகவும், வாழும் கடவுளாகவும் நம் முன்னோர்களால் என்றும் பெண்கள் போற்றப்பட்டு வருகின்றனர்.

கலை, அரசியல், கல்வி, பொருளாதாரம், கலாசாரம், விளையாட்டு, விஞ்ஞானம், கண்டுபிடிப்பு, வணிகம், சட்டம் முதலான பலதுறைகளில் வெவ்வேறு பதவிகளில் தங்களுக்கான அங்கீகாரத்தை தாபித்து, ஆண்களுக்கு சரிநிகராக சர்வதேச துறைகளில் பெண்கள் தனக்கென உறுதியானதும், நிலையானதும், கௌரவமானதுமான இடங்களைப் பிடித்துள்ளனர்.

கந்தசாமி அபிலாஷ்
BEd (EUSL), HND in English, NCEnglish, MEd (EUSL)

இன்று பெண்ணடிமை ஒழிந்து நாடு கடந்து, கடல் கடந்து பல்வேறு கோணங்களில் ஆகாய விமானம் ஓட்டுவது, புகையிரத இயந்திரம் இயக்குவது, அறிவியல் ஆராய்ச்சியில் சிறந்து விளங்குவது, கணணித் துறையில் புரட்சிகரமான சாதனைகளை நிகழ்த்துவது என்று பெண்கள் முத்திரை பதிக்காத துறைகளே இல்லை என வியக்கும் அளவிற்கு சிறந்து விளங்குகிறார்கள்.

இப்பொழுது சட்டங்கள் ஆள்வதும் பட்டங்கள் வெல்வதுமான பாரதியின் புதுமைப் பெண்கள் உருவாகிக் கொண்டிருப்பது மட்டுமின்றி குடும்பம், பதவி, கௌரவம், பாரம்பரியம் என அனைத்தையும் பேணி வருகிறார்கள். பெண்களே நாட்டின் கண்கள், நம்மை பெற்றவள் பெண், நமது சந்ததியை பெற்றுக் கொடுப்பவள் பெண், மனித வாழ்வில் தாய், மனைவி, மகள், சகோதரி என பல பாத்திரங்களில் நல்ல உறவாக இருப்பவளும் பெண். கங்கா, யமுனா, காவேரி என புண்ணிய நதியாக இருப்பவளும் பெண்.

சர்வதேச வளர்ச்சிப் பாதையில் சமுதாயத்தை அழைத்து செல்லும் பெண்கள் பாதுகாப்போடு நடத்தப்பட வேண்டியது அவசியமாகும். இதற்காக, பெண் கல்வி, பெண்களுக்கு அதிகாரமளித்தல் மற்றும் அவர்களது நல்வாழ்வை மேம்படுத்தும் பொருட்டு உலகளாவிய ரீதியில் பல்வேறு நிகழ்வுகள் மற்றும் முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இலங்கையில், 1978 ஆம் ஆண்டு முதல் மகளிர் தினக் கொண்டாட்டம் இடம்பெற்று வருவதோடு, அதன் பின்னர் ஒவ்வொரு வருடமும், வெவ்வேறு கருப்பொருளை மையப்படுத்தி கொண்டாட்டம் இடம்பெற்று வருகிறது. இலங்கை தற்போது பல்வேறு சமூக மற்றும் பொருளாதார சவால்களை எதிர்கொண்டுள்ள போதிலும், நாட்டிலுள்ள பெண்கள் தொடர்ச்சியாக வலிமை மற்றும் மீளெழுச்சித் தன்மையை வெளிப்படுத்தி முன்னோக்கி பயணிப்பதன் மூலம், மரியாதையையும் பாராட்டையும் பெறுகின்றனர்.

அந்த வகையில், இவ்வருட மகளிர் தினமானது இலங்கைப் பெண்களின் குறிப்பிடும்படியான சாதனைகளை கௌரவிக்கும் பொருட்டு ‘பெண்களில் முதலீடு செய்யுங்கள். முன்னேற்றத்தை துரிதப்படுத்துங்கள்’ எனும் கருப்பொருளின் கீழ் கொண்டாடப்படுகின்றது.

பாலின சமத்துவத்தைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதும், பெண்களின் சாதனைகளைக் கொண்டாடுவதும், நேர்மறையான மாற்றத்திற்காக வாதிடுவதுமே இந்த நாளின் நோக்கமாக உள்ளது. உலகெங்கிலும் உள்ள பெண்களின் பங்களிப்பை அங்கீகரித்து, அனைத்துப் பெண்களையும் உள்ளடக்கி சமத்துவமான சமூகத்தை நோக்கிச் செயற்பட இது ஒரு வாய்ப்பாகும்.

உலகளாவிய இயக்கத்தில் இணைந்து, பெண்களின் உரிமைகள் மற்றும் அதிகாரமளித்தலுக்கு ஆதரவளிக்க நடவடிக்கை எடுக்கும் வகையில் ஐக்கிய நாடுகள் சபையால் இத்தினம் பிரகடனம் செய்யப்பட்டுள்ளது. புவிசார் அரசியல் மோதல்களுடன் நாட்டில் நிலவும் வறுமை நிலைகள் மற்றும் பருவநிலை மாற்றத்தின் அதிகரித்து வரும் தாக்கங்கள் வரை





பல நெருக்கடிகளை உலகம் எதிர்கொள்கிறது.

பெண்களுக்கு அதிகாரம் அளிக்கும் தீர்வுகளால் மட்டுமே இந்த சவால்களை எதிர்கொள்ள முடியும். பெண்களில் முதலீடு செய்வதன் மூலம் நாம் மாற்றத்தைத் தூண்டலாம். மேலும், அனைவருக்கும் ஆரோக்கியமானதும், பாதுகாப்பானதுமான சூழ்நிலைகளை ஏற்படுத்திக் கொடுப்பதுடன் பெண்களை சமமான உலகத்தை நோக்கி நகர்த்துவதன் மூலம் மாத்திரமே சமூக மாற்றத்தை துரிதப்படுத்தலாம். 2030 ஆம் ஆண்டிற்குள் 342 மில்லியனுக்கும் அதிகமான பெண்கள் மற்றும் சிறுமிகள் தீவிர வறுமையில் வாழலாம் என ஐ.நா அறிக்கை குறிப்பிடுகிறது. பெண்களின் தேவைகளுக்கேற்ப முன்னுரிமைகள் பரிசீலிக்கப்படுவதை உறுதிசெய்ய, ஒவ்வொரு நாட்டு அரசாங்கமும் கட்டாயமாக பெண்களின் பாலினம் சார்ந்த நிதியுதவிக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும்.

அத்துடன் நாட்டுப் பெண்களின் அத்தியாவசிய சேவைகளையும், சமூகப் பாதுகாப்பிற்கான பொதுச் செலவினங்களை அதிகரிக்க வேண்டும். ஊதியம் மற்றும் ஊதியம் பெறாத பராமரிப்புப் பணியின் மூலம் உலகெங்கிலும் உள்ள பொருளாதாரத்திற்கு பெண்கள் செய்யும் முக்கிய பங்களிப்பை ஒவ்வொருவரும் மதிப்பது மட்டுமன்றி அங்கீகரிக்கவும் வேண்டும்.

ஏனெனில் ஆண்களைக் காட்டிலும் பெண்கள் மூன்று மடங்கு அதிக நேரத்தைச் சம்பளமில்லாத பராமரிப்புப் பணிகளில் செலவிடுகின்றனர். மேலும், இந்தச் செயற்பாடுகளுக்கு குறித்த தொகை ஒதுக்கப்பட்டால் அவர்கள் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 40 சதவீதத்திற்கும் அதிகமாகக் கணக்கிடப்படுவர். பெண்களில் முதலீடு செய்வது, பாலின சமத்துவத்தை ஊக்குவிப்பது முதலான செயற்பாடுகள் சமுதாயத்தில் உள்ள அனைவருக்கும் வளமான எதிர்காலத்தை உருவாக்குகிறது.

இலங்கையில் பெண்களுக்கான அதிகாரமளித்தல் மற்றும் தலைமைத்துவத்தைக் கொண்டாடும் வகையில், இலங்கையின் பெண்கள் தொழில் மற்றும் வர்த்தக சம்மேளனம் (WCIC) மகளிர் தலைமைத்துவ மன்றத்துடன் இணைந்து இவ்வருடத்தில் பல செயற்திட்டங்களை வழங்கத் தயாராகி வருகிறது. இது “InspireInclusion & Count Her In‘ எனும் கருப்பொருளில் மார்ச் 14, 2024 இல் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

மேலும், கொழும்பு ஜப்பான் அரசாங்கம் இணைந்து ஐ.நா பெண்களின் ஆதரவுடன் 2023- 2027 காலப்பகுதியில் பெண்கள், அமைதி மற்றும் பாதுகாப்பு தொடர்பான அதன் முதல் தேசிய செயற்திட்டத்தை (WPS) இலங்கை ஏற்றுக்கொண்டுள்ளது.

பெண்கள் மீது காட்டப்படும் பாகுபாடு என்பது மனிதஉரிமை மீறல்களில் ஒன்றாக கருதப்படுகிறது. இந்தப் பாகுபாடு பெண்கள் மீது சுமத்தப்படும் மாபெரும் தடையாகும். பெண்களின் துணையுடனே தான் பல சமூக, பொருளாதார, அரசியல் பிரச்சினைகள் தீர்க்கப்படுகின்றன என்பது மறுக்க முடியாத உண்மையாகும். அமைதியான குடும்பச் சூழல், பொருளாதார வளர்ச்சி, சீரான முன்னேற்றத்திற்கு பெண்களின் பங்களிப்பு ஒவ்வொரு குடும்பம் முதல் சர்வதேச சமூகம் வரையும் தேவைப்படுகிறது.

சர்வதேச அமைதி மற்றும் பாதுகாப்புத் துறைகளை வலுப்படுத்த பெண்களின் பங்கு தேவைப்படுகிறது. அந்தவகையில் மேரி கியூரி, புளோரன்ஸ் நைட்டிங்கேல், ஔவையார், அன்னை தெரேசா, ராணி லக்ஷ்மிபாய், சாவித்ரிபாய் பூலே, ஆனந்திபாய் ஜோஷி சரோஜினி, நாயுடு விஜய லட்சுமி பண்டிட், கமலாதேவி சட்டோபாத்யாய், நீதிபதி அன்னாசாண்டி, சுசேத்தா கிரிப்லானி, கிட்டூர் சென்னம்மா, பூலான் தேவி, அனுலாதேவி, இந்திராகாந்தி, கல்பனா சாவ்லா என சாதனைப் பெண்களின் பட்டியல் நீண்டு கொண்டே செல்கின்றது எனலாம்.

சர்வதேச ரீதியில் பல்துறைகளிலும் பெண்களின் சாதனைகள் போற்றத்தக்கது. காவல் துறை, சட்டத்துறை, அரசியல் துறை, தகவல் தொடர்புத்துறை, மருத்துவத் துறை, போக்குவரத்துத் துறை, விளையாட்டுத் துறை, வணிகத் துறை உட்பட அனைத்து துறைகளிலும் இன்று பெண்கள் உயர் பதவிகளை வகித்து திறம்பட செயல்படுகின்றனர்.

போக்குவரத்து துறையிலும் பெண் ஓட்டுனர்கள் வந்துவிட்டனர். வேளாண்மை துறையிலும் பெண்கள் பங்களிப்பு உள்ளது சிறப்புக்குரியதாகும். குடும்பப் பெண்கள் தங்கள் வீட்டுக் கடமைகளை முடித்துவிட்டு பகுதி நேர வேலைக்கு சென்று கணவரின் கஷ்டத்தில் பங்கெடுக்கின்றனர்.

விளையாட்டுத் துறைகளிலும் பெண்கள் பங்கேற்று நாட்டிற்கு பதக்கங்களை பெற்றுத் தந்துள்ளார்கள். அண்மையில் இலங்கையில் உலக சாதனை படைத்த தமிழ் சிறுமி நேரடியாக நுவரெலியா மாவட்டத்தில் மஸ்கலிய தோட்டத்திலிருந்து பொலிஸ் நிலையம் வரை நடந்து சென்று உலகசாதனை படைத்துள்ளார்.

BBC 100 Women 2020 அறிக்கையில் சைவாணி பில்கிஸ் மானசி ஜோசி, ரிதிமா பாண்டே முதலாக 100 பெண்களின் பெயர்ப் பட்டியல் வெளியிடப்பட்டு அவர்கள் சாதனையாளர்களாகவும் அறிவிக்கப்பட்டனர். உலகை மாற்றிய சக்தி வாய்ந்த நூறு பெண்களின் பட்டியலில் அறிவியல் புலத்தில் மிக அரிதான சாதனை படைத்தவராக மேரி கியூரி அம்மையார் குறிப்பிடத்தக்கவர். சிறுவயதில் இலங்கைச் சிறுமி ஒருவர் உலக சாதனை புத்தகத்தில் இடம் பிடித்துள்ளார். பிரித்தானியாவில் கிறிஸ்டியனில் நடைபெற்ற 11வது MTM Younger Achievers விருது விழாவில் 15 வயது மதிக்கத்தக்க யெனிலி பினாரா இச்சாதனையை நிகழ்த்தினாள்.

அதேபோல் திருமதி உலக அழகி போட்டியில் இலங்கைப் பெண்ணான கெரோலின் ஜூலி தேர்வு செய்யப்பட்டார். அவ்வாறே 2020 ஆம் ஆண்டுக்கான திருமணமான உலக அழகி





கிரீடத்தை சம்மந்திக்கா குமாரசிங்க 'ஆசியாவின் திருமதி அழகி' பட்டத்தை வென்றார். 2019 ஆண்டில் முதல் ஐந்து அழகி பட்டங்களை வென்று கறுப்பினப் பெண்கள் சாதனை படைத்துள்ளனர். அறிவியலில் சாதனை படைத்த ஏழு இந்தியப் பெண் விஞ்ஞானிகள் பெண்ணினத்தின் வரலாற்றை மாற்றி அமைத்துள்ளார்கள். அறிவியலில் எட்ட சாத்தியம் இல்லாதவைகளாக கருதப்பட்ட உச்சத்தையும் பெண்கள் எட்டியுள்ளனர். நோபல் பரிசு வென்றது முதல் நாசாவிற்கு செல்வது வரையிலும் தங்களது பெயர்களை தடம் பெறச் செய்துள்ளனர்.

ஆணாதிக்கத்துக்கு மத்தியிலும் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப பிரிவுகளில் சாதனையும் படைத்துள்ளனர். ரிது கரிதால், சந்திரிமா சாஹா போன்றோர் இஸ்ரோ, INSA நிறுவனங்களில் உயர் பதவி வகித்து புதிய திட்டங்களை செயற்படுத்தி சாதனை படைத்தும் வருகின்றனர்.

அந்த வகையில் உலகில் ஏவுகணைப் பெண் என அழைக்கப்பட்டு அக்னி - 4 ஏவுகணைத் திடட் இயக்குனராக கடமையாற்றும் 56 வயதான டெசி தாமஸ் என்பவர் 'ஏவுகணை முனைவர்' பட்டம் பெற்றுள்ளார்.

இந்தியாவின் ராக்கெட் பெண்மணி என அழைக்கப்பட்ட சந்திராயன்-2 திட்டத்தின் வெற்றிக்கு மிகப்பெரிய பங்களிப்பு வகித்தவராக ரிது அரிதால் என்ற இந்தியப் பெண் விஞ்ஞானி 'மங்கள்யான்' திட்ட உதவி இயக்குனராகப் பணியாற்றி தலைசிறந்த விஞ்ஞானி விருது பெற்றவராவார்.

அதேபோல் சந்திராயன்-2 திட்டத்தின் இயக்குனராக கடமையாற்றி 2006 ஆம் ஆண்டில் சிறந்த பெண் விஞ்ஞானி விருதைப் பெற்றவராக முத்தையா வனிதா சாதனை படைத்துள்ளார். குழந்தைகளை தாக்கும் வைரஸ் நோய்க்கிருமிகளை அழிப்பது பற்றிய ஆராய்ச்சியில் ஈடுபட்ட முதல் விஞ்ஞானி என்ற சாதனையை பெற்றவராக சுகன்தீப் காங் என்பவர் பெண்களின் சாதனை வரலாற்றில் இடம் பிடித்துள்ளார்.

அதேபோல், அந்தாண்டிக்காவில் உறை பனிச் சூழலில் 403 நாட்கள் செலவிட்டு உறை பணியில் அதிக நாட்கள் தங்கிய முதல் பெண் விஞ்ஞானி என்ற பெருமையை 56 வயதான மங்களாமணி என்பவர் பெற்றுள்ளார். இவர் இப்பணிக்கு தெரிவு செய்யப்பட முன் இத்தகைய பணிச் சுழலுக்கு பரீச்சயம் இல்லாதவர் என்பது குறிப்பிடத்தக்கது.

புளூட்டோவை ஆய்வு செய்ய நாசா அனுப்பிய நியூ ஹாரிசன் என்கின்ற விண்கலத்தில் இருந்து தகவல் சேகரிப்புக்கான சிப் மற்றும் அல்காரிதம் உருவாக்கும் பொறுப்பை மேற்கொண்ட பெண் விஞ்ஞானியாக காமாட்சி சிவராம கிருஷ்ணன் வரலாற்றில் இடம்பிடித்துள்ளார். மேலும் இவர் இந்திய தேசிய அறிவியல் அகாடமியில் முதல் பெண் தலைவராக 85 ஆண்டுகளுக்கு பின் தெரிவு செய்யப்பட்ட முதல் பெண் தலைவராக வரலாற்றில் இடம்பிடித்துள்ளார்.

இவ்வாறு சகல துறைகளிலும் பெண்கள் சர்வதேச ரீதியில் வயது, பால், அந்தஸ்து, பரம்பரை, மதம், குடும்பச்சூழல் என்பவற்றைத் தாண்டி சாதனைகளைப் படைத்து வருகின்றனர்.

2023 மார்ச் 08 ஆம் திகதி, இலங்கையில் உள்ள பெண்களை வலுவூட்டுவதற்கு குறிப்பிடத்தக்க நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ள இலங்கை ஜனாதிபதியின் பங்குபற்றுதலுடன் இந்நிகழ்வு பத்தரமுல்லையில் இடம்பெற்றது. இலங்கைப் பெண்களின் கருணையையும், நேர்த்தியையும் சர்வதேச அளவிலும், தேசிய அளவிலும் சாதனைகளை வெளிப்படுத்திய மூன்று ஒப்பற்ற பெண்களுக்கு விருது வழங்கப்பட்டது. இவ்வுலகிற்கு ஒவ்வொரு பெண்களும், ஒவ்வொரு ஆணின் வளர்ச்சிக்கும், அவனது வெற்றிக்கும் உறுதுணையாக இருக்கிறார்கள்.



சாதனைப் பெண்கள் ஏனைய பெண்களுக்கு மட்டுமல்ல, ஆண்களுக்கும் கூட சிறந்த முன்மாதிரிகளாகவே உள்ளனர். ஆயிரம் கவிஞர்கள் பெண்ணியம் பேசினாலும், பல்வேறு தடைகளைத் தாண்டியே பெண்கள் சமனிலை பெற வேண்டியிருக்கிறது. உடல், உள, சமூக ரீதியான வன்முறைகளால் பாதிக்கப்படுவதை தடுத்து பெண்களின் பாதுகாப்பை உறுதிசெய்ய உதவும் சட்டங்கள், விதிகள், கொள்கைகள் சர்வதேச செயலொழுங்கில் உயிர்பெற வேண்டும்.

கல்வி, சுகாதாரம் போன்ற துறைகளில் இலங்கைப் பெண்கள் கணிசமான முன்னேற்றங்களை அடைந்துள்ள நிலையிலும், அமைச்சுகள், திணைக்களங்கள், அமைப்புக்கள் என பல இயங்கு நிலையில் இருந்தும் பெண்களின் உரிமைகள் இன்னும் மறுக்கப்படுவதையும், அவர்களின் நற்பெயருக்குக் களங்கம் ஏற்படுத்தப்பட்டு வருவதையும் காண முடிகிறது.

பெண்களின் முன்னேற்றம் நாட்டின் எதிர்காலத்திற்கும், ஜனநாயக சமுதாயத்தை தோற்றுவிப்பதற்கும் அவசியமாகிறது. நாட்டின் வறுமையை முடிவுக்குக் கொண்டு வரும் முயற்சியில் பெண்களின் முன்னேற்றமே பேசும் பொருளாக உள்ளது. கொவிட் தொற்றுநோய், புவிசார் அரசியல் மோதல்கள், காலநிலைப் பேரழிவுகள் மற்றும் பொருளாதாரக் கொந்தளிப்பு ஆகியவற்றின் தாக்கமானது 2020 ஆம் ஆண்டிலிருந்து 75 மில்லியன் மக்களைக் கடுமையான வறுமைக்குள் தள்ளியுள்ளது.

இயந்திரமயமான சமுதாயத்தில் பெண்கள் தங்களை பாதுகாத்துக்கொள்ள அனுபவ அறிவையும் பெற வேண்டும். ஒவ்வொரு குடும்பத்திலும் பிள்ளைகளின் பிறப்பு முதல் பெண்களின் முக்கியத்ததுவத்தை ஒவ்வொரு பெற்றோரும் தம் பிள்ளைகளிடத்தில் விதைக்க வேண்டும்.

பெண்களின் பாதுகாப்பு, உரிமை, சுதந்திரம், கௌரவம், அங்கீகாரம் என்பனவற்றை உறுதிசெய்து கொள்வதற்கு விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். அதாவது பெண்கள் பாதுகாப்புச் சட்டம், போக்சோ சட்டம், நிகழ்நிலை காப்புச் சட்டம் போன்ற சட்டங்கள் பற்றிய விழிப்புணர்வுகளை தாண்டி, இச்சமூகத்தில் வாழும் ஒவ்வொரு ஆணும் பெண்களின் முக்கியத்துவத்தை உணர்ந்து தன்னில் ஒருவராக எப்பொழுது உணர்கின்றார்களோ அன்றுதான் குடும்பத்தில், சமூகத்தில், நாட்டில் பெண்களின் பிரச்சினைகள் நீங்கி புரட்சிகரப் பெண்களின் மறுமலர்ச்சி உதயமாகும்.



சர்வதேச மகளிர் தினம்

ஐங்கரன் விக்னேஸ்வரா

# பெண் விடுதலைக்காக போராடிய பாலஸ்தீன ஈழப் பெண் கவிஞர்கள்

அனைத்துலக பெண்கள் தினமான மார்ச் 8 வெறுமனே பெண்களை புகழ்ந்து களி கொள்ளும் நாள் மட்டுமல்ல. சர்வதேச பெண்கள் தினமான மார்ச் 8 உழைக்கும் பெண்கள் தமது அடிப்படை உரிமைக்காக போராடி இரத்தம் சிந்திய நாளாகும்.

பெண் விடுதலைக்காக தமிழ் பெண் கவிஞர்களின் படைப்புக்கள் நீண்ட காலமாக ஓங்கி ஒலித்தது. அதற்கு ஒப்பாக பாலஸ்தீனபெண் கவிஞர்களின் கவிதைகள் விடுதலைக்கு உயிர்ப்பூட்டும் வரிகளாக இருப்பதைக் காணலாம்.

### கவிதை பேராயுதமாக போராயுதமாக:


ஈழத்து போர்க்கால இலக்கியப் பரப்பில் பாலஸ்தீனக் கவிதைகள் பெரும் தாக்கத்தினை உருவாக்கியுள்ளன. ஏனெனில் இரு போராடும் மக்களும் அரசின் ஆக்கிரமிப்புக்கு, அடக்குமுறைக்கு எதிராக கிளர்ந்தெழுந்தவர்கள். துப்பாக்கிகளைக் காட்டிலும் கவிதை ஆட்சியாளர்களை, அடக்குமுறையாளர்களை கலங்கடிக்கும் பெரும் போராயுதமாக ஓர் காலத்தில் விளங்கியது.

இஸ்ரேல் ஆக்கிரமிப்பில் பல பாலஸ்தீன பெண் கவிஞர்களை சிறையில் அடைத்து வைத்து, அவர்களின் கவிதைகளை தடை செய்தனர். ஆண் கவிகளுக்கு இணையாக பெண் கவிகளும் போரியல் கவிதைகளை சிறப்பாக யாத்தனர். அவர்களின் கவிதைகள் தமிழிலும் மொழி பெயர்க்கப்பட்டன.

### பாலஸ்தீன பெண் கவிஞர்கள்:

எத்தனை காலம் சென்றாலும் இக் கவிஞைகளின் படைப்புகள் உயிர் வாழும். ஏன் எனில் அக்கவிதைகளின் மூச்சொலி இன்னமும் அடங்கவில்லை. என்றும் உயிர்ப்பாய் விடுதலை நோக்கி முகாரி பாடிக் கொண்டே இருக்கும்.

வரலாற்று ரீதியில் பாலஸ்தீனத்துக்கு என்று செறிவான





இலக்கிய மரபு உண்டு. மிக நுட்பமான இலக்கண வரம்புக்கு உட்படுத்தப்பட்ட கவிதை வடிவங்கள், நாடகங்கள், நாவல்கள் பாலஸ்தீனத்தில் படைக்கப்பட்டுள்ளன. ஆனால் 1948ஆம் ஆண்டு இஸ்ரேல் தோற்றம் பெற்ற போது பாலஸ்தீன இலக்கிய வாழ்வு திடீரென்று மூச்சை இழந்தது.

ஆயினும் துண்டிக்கப்பட்ட உயிர் மூச்சு மீள சுவாசித்தது. போரின் தோல்வி, தோழர்களின் இழப்பு,



சிறைக்காவல், சித்ரவதைக்கூடம், சிறுவர்கள் மீதான தாக்குதல், ஐக்கிய நாடுகள் சபையின் பாராமுகம், தாயகம் மீதான ஏக்கம் என கவிதையின் பாடுபொருள்கள் பாலஸ்தீனத்தில் மீள உயிர் பெற்றன.

பாலஸ்தீன எழுத்தாளர்கள் பலரின் எழுத்துலகின் மையத்தில் பாலஸ்தீனப் பேரழிவு தெளிவாக வெளிப்பட்டு உள்ளது. ஏதிலிகளாக்கப்பட்ட, குடிபெயர்ந்த, ஊனமாக்கப்பட்ட மக்களின் வாழ்வில் விழும் துயரப் பெருநிழலை பல்வகைப்பட்ட இலக்கிய வடிவங்களையும் புனைவு வகைமைகளையும் கையாண்டு உலகின்முன் சித்தரிக்க இவர்கள் முயற்சி செய்துள்ளனர்.

## ஈழப்பெண் கவிஞர்களின் வீரவரலாறு

புறநானூற்றை விஞ்சிய வீரம் படைத்த ஈழப்பெண் கவிஞர்களின் படைப்புக்கள் வரலாற்றின் பக்கங்களில் முழுமையாக பதியப்படாவிடினும் களமாடி, தியாகித்த மங்கையரைதமிழ் கூறும்உலகம் ஒரு போதும் மறவாது. போர்க்கள இலக்கியத்தின் பெருமைக்கு சான்றாக அவர்களின் படைப்புகளே இலக்கிய சாட்சியங்களாக பகர்கின்றன.

அடுப்போடு வாழ்ந்த பெண்கள் நெருப்பாய் எழுந்த சர்வதேச பெண்கள் தினமான மார்ச் 8 உழைக்கும் பெண்கள் தமது அடிப்படை உரிமைக்காக போராடி இரத்தம் சிந்திய நாளாகும். அரசியல், சமூக, பொருளாதார உரிமைகள் பெற வேண்டி போராடிய பெண்களின் தினமே மார்ச் 8.

அநீதி என்றால், அறம் தவறினால் அடங்காதே, அதனை எதிர்த்து போராடு என்பதை போதிப்பது தான் தமிழ் இலக்கியங்களின் அடிப்படை கோட்பாடாக அமைகிறது. தமிழ் மொழி எப்போதுமே பெண்களை உயர்த்தியே கொண்டாடுவதை காப்பியங்களிலும், காவியங்களிலும் காணலாம்.

## தமிழ் இலக்கியத்தில் பெண்கள்:

உலகம் முழுவதுமே பெண்களை அடிமைப் படுத்தி வைத்திருந்த கால கட்டத்தில் பெண்களை மேன்மை மிகு பொக்கிஷமாக போற்றிப் புகழ்ந்தது தமிழ் காப்பியங்கள். ஆண்டாண்டு காலமாக பெண்களை போற்றிப் புகழ்ந்து கொண்டாடியது நம் தமிழ் இலக்கியங்களே ஆகும்.

உலக மொழிகளின் தாய் என்று கூறிக் கொள்ளும் கிரேக்கத்தில் கூட 7 பெண்கள் தான் அக்காலத்தில் இருந்தனர். ஆனால் சங்க காலத்திலேயே, 47 பெண் எழுத்தாளர்களைக் கொண்டது உலகிலேயே தமிழ் சமூகம் மட்டும்தான்.

சங்க தமிழ் இலக்கியங்களில் புலியை, யானையை விரட்டிய பெண்களின் வீரமும் போருக்குத் தன் கணவன், மகன் என ஒருவர் பின் ஒருவராக அனுப்பி வைத்த பெண்களின் வீரமும் விதந்து போற்றப்பட்டுள்ளன. பெண்கள் போர்க்களத்தில் போரில் ஈடுபடுத்தப்பட்டமை பற்றிய குறிப்புக்கள் இல்லை. யுத்தம் நிறைவுற்ற பின் போரில் புண்பட்ட வீரர்களை, கணவனை காவல் செய்யும் செய்த வரலாறும் உண்டு.

புற நானூற்றை மிஞ்சிய வடிவமாய்மனோ தைரியத்தையும் விடுதலை வேட்கையையும் கைவிடாத வீர உணர்வும் தைரியமும் மிக்கவர்களாக தம்மை இனங்காட்டுவதோடு, தமது சுயத்தையும் நம்பிக்கையையும் இழக்காதவர்களாக ஈழப் பெண் போராளிக் கவிஞைகள் மிளிர்ந்துள்ளனர்.

இப் பெண் போராளிகளின் படைப்புக்களில் தாம் எவருக்கும் அடங்கி, அடிமைப்பட்டுப் போகாத, இலக்கை அடைவதையே நோக்காகக் கொண்ட, தமது சுயத்தை இழக்காத தன்மையை அவதானிக்க முடிகின்றது.

உலகம் முழுவதுமே பெண்களை ஒடுக்கி வைத்திருந்த கால கட்டத்தில் பெண்களை மேன்மை மிகு பொக்கிஷமாக போற்றிப் புகழ்ந்தது தமிழ் சமூகம்.

பிற்கால ஈழப்போராட்ட களத்தில் பெண் போராளிக் கவிஞைகளாக பலராலும் அதிகம் அறியப்பட்ட, அடையாளப் படுத்தப்பட்ட கவிஞைகளான அம்புலி, ஆதிலட்சுமி, கஸ்தூரி, வானதி, பாரதி, அலையிசை, மலைமகள், தூயவள், நாமகள், சூரியநிலா, சுதாமதி, தமிழவள், காந்தா, ஜெயா, கலைமகள், கனிமொழி, ஞானமதி, புரட்சிகா, நகுலா, நாதினி, பிரேமினி, பிரமிளா, ரூபிமார்க்கட், தயாமதி, சிரஞ்சீவி, கிருபா போன்றோரின் கவிதைகளும் தமிழ் மண்ணின் வீரத்தை பரணிக்கு பறை சாற்றுகின்றன.







பவானி



மார்ச் 08

# மகளிர் தின வாழ்த்துக்கள்

மூலை முடுக்கெல்லாம்
ஒலிக்கிறது!
கேட்பதற்கு
மகிழ்வாகத்தான் இருக்கிறது!
போராடிப் பெற்ற
சுதந்திரமல்லவா?

பெண்ணாகப் பிறந்திட
மாதவம்
செய்ய வேண்டும்
எனப் புகழ்வதும்,
சக்தியின் சொரூபம்
என ஆராதிப்பதும்
நதியும் புவியும்
பெண்கள் நாமத்தில் என்பதும்
மகிழ்ச்சிதான்!!

மகளிர் தினமான
இன்று
எத்தனை எத்தனை பெண்கள்
இடருடன்,
இயம்பிட மொழியின்றி
இன்னல் படுகிறார்.
யார் அறிவார்?

தெருவில் சிறு சண்டை
எட்டிப்பார்த்தால்
தான் வந்த வழியை
இழிவாக பேசி
மகிழும் மூடர்கள்..

மூடர்கள் என்பதா
இவர்களை
மூளையில்லாதவர்கள்



என்பதா?
வளர்ப்பில் தவறா
வளர்ந்ததால் தவறா?
பொறுத்தும்
பார்த்தோம்
பொறுமையுடனும் போனோம்.

நெஞ்சம் கனக்கிறது
நிம்மதியாய் உறங்க
முடியவில்லை!
உலகில்
எங்கோ ஓரிடத்தில்
நிமிடத்துக்கு நிமிடம்
நடந்திடும்
பாலியல் வன்கொடுமை
உறைய வைக்கிறது!!

மொட்டாக மலரும் முன்னே
கருகிப் போனமலர்கள்
ஆயிரம்.



# மகளிர் தின வாழ்த்துக்கள்

ஆயிரத்தில் ஒருத்தியாய்
சின்னஞ் சிறுமி ஆர்த்தி
நீயும் இணைந்தாயா?

என்ன கொடுமைகளை
உச்சமாய் அனுபவித்தாய்?
சீ!! கணநேர சுகத்துக்காய்
கொடியவர் கையில்
குழந்தை நீ கருகினாயே!

கஞ்சாவும் போதையும்
ஏற்றிய கயவனே
பிஞ்சின் அழுகுரல்
கேட்கவில்லையா?

பேரக் குழந்தையாய்
பார்க்க வேண்டிய
மழலையை
கொடூரமாய்
வன்புணர்ந்தாய் கிழவனே

பரிதாபமாக
கதறிய பிஞ்சின்
மரண ஒலி கேட்டும்
இரங்காத இதயமற்றவரே.

'மீடியாக்கள்'
ஆயிரம் தடவை பேசினாலும்,
மக்கள் பிரளயமாக
பொங்கி எழுந்தாலும்,
ஒவ்வொரு தனி மனிதனும்
உணராவிடில்
இதனை
ஒழித்திட இயலாது

கணநேர
காமப்பசிக்கு அடிமையாகி
பெற்ற பிள்ளையை
கெடுப்பதில் தொடங்கி
பிஞ்சுக் குழந்தை வரை
நினைக்கவே முடியவில்லை!

வயிற்றில் மகவை



சுமந்து பெற்றால்
மட்டும் போதாது
பேணி வளர்த்திடவும்,
ஆண் பெண்
சமத்துவமும் பண்பாடும்
புகட்டி அறிவோடு
வளர்த்திடவும் வேண்டும்.

பெண் குழந்தை
பெற்றவர்கள்
பயமின்றி வாழ
வேண்டும்!
காமுகர்களின்
கடைசி வேட்டை
ஆர்த்தியோடு போகட்டும்!!

பெண்களே உங்கள்
விழிகள் நெருப்பை
பொழியட்டும்!
பூலான் தேவிகள்
புதிது புதிதாய் பிறக்கட்டும்!!

அன்று கொண்டாடுவோம்
உண்மையான
மகளிர் தினத்தை..!



# 'புதிய வாழ்வு' அமைப்பின் நிறுவுனர் புனிதாவுடன் ஒரு செவ்வி

**வணக்கம். உங்களை அறிமுகம் செய்து கொள்ளுங்கள்..**

வணக்கம். எழுநிலம் பத்திரிகை ஆசிரியர், நிர்வாகம் மற்றும் வாசகர்களுக்கு எனது அன்புகலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

எனது பெயர் திருமதி புனிதவதி நடனேஸ்வரன், புதிய வாழ்வு நிறுவனத்தின் ஸ்தாபகரும், புதியவாழ்வு நிறுவனத்தின் அனைத்து செயல்பாடுகளுக்கும் பொறுப்புக் கூற வேண்டியவளாயும் இருக்கின்றேன், கத்தியன்றி, யுத்தமின்றி, இரத்தம் சிந்தாமல் ஒரு அழகான, அமைதியான தேசத்தை உருவாக்குவதற்கு முயற்சி செய்யும் புத்திஜீவிகளுடன் இணைந்து, நாமும் பயணிப்பதே எமது நிறுவனத்தின் நோக்கம்.

இதற்காக பல்கலைக்கழக மாணவர்கள், மற்றும் உயர் நிலையில் இருக்கும் பல கல்விமான்களை உள்வாங்கி கல்வி, பொருளாதாரம், வேலை வாய்ப்புக்கள், விவசாயம், கலை பண்பாட்டைக் கட்டி எழுப்புவது, நாம் வாழும் காலத்திலே நலமாக வாழ்ந்து மாற்றுத் திறனாளிகள் ஆக்கப்பட்டவர்களை, அவர்களின் திறமைகளைக் கண்டறிந்து, அந்தத் திறமைகளின் ஊடாக அவர்களை வெளிக் கொணருவது, மற்றும் பராமரிப்பு வசதிகள் குறைவால் படுக்கைப் புண்களோடு வாழ்வோருக்கு தங்குமிட வசதி, பராமரிப்பு போன்றவற்றை எமது நிறுவனத்தினூடாக மேற்கொள்வது..

மற்றும் வடக்கு, கிழக்கு, மலையக மக்களுக்கிடையிலான ஒற்றுமையைப் பேணுவது, வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவது போன்றவற்றைச் செய்வதே எமது முதன்மையான நோக்கம் ஆகும்.

**? உங்கள் தொண்டு நிறுவனம், அதன் செயற்பாடுகள் பற்றி மேலும் விளக்க முடியுமா?**

ஆம், வடக்கு, கிழக்கு, மலையகத்தில் உள்ள பல்கலைக்கழக மாணவர்களை இணைத்து, அவர்களுக்கு ஊடாக அவர்கள் வாழும் மாவட்டங்களில் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சனைகளை கண்டறிகின்றோம். அவற்றில் அவசரமான, அவசியமான தேவைகளைக் தேர்ந்தெடுத்து தீர்மானங்கள் எடுக்கப்படுகிறது.

பின்னர் அவை மாணவப் பிரதிநிதிகளுக்கு ஊடாகவே பூர்த்தி செய்யப்படுகிறது. இதன் மூலம், மண்ணையும் மக்களையும் நேசிக்கக்கூடிய ஒரு இளம் சமுதாயத்தை உருவாக்குவதுடன், தேவையற்ற வழிகளில் செல்லும் இளைஞர்களை வசப்படுத்தி, வழிப்படுத்தி அழிவில் இருந்து காப்பாற்ற எம்மால் ஆன முயற்சிகளை எடுப்பதை முக்கிய நோக்காகக் கொண்டுள்ளோம்.

**? இந்த நிறுவனத்தை ஆரம்பிக்க உந்து சக்தியாக இருந்தது எது?**

போர்முடிவுக்கு வந்த பின்னர் எமது நாட்டுக்குச் சென்று நான் பார்த்த காட்சிகள் என்னை வருத்தின. எனது சகோதரி வவுனியாவைத்தியசாலையில் தாதியாக கடமையாற்றிக் கொண்டிருந்தார். அவர் மூலம் மதிப்பார்ந்த அருட்தந்தை விமல் அவர்கள் எனக்கு அறிமுகமானார். அவரின் வேண்டுகோளுக்கு அமையவே சில சேவைகளை ஆரம்பித்தேன்.

பின்னர் அது படிப்படியாக வளர்ச்சி அடைந்தது. முதலில் பராமரிப்பு இல்லத்தை உருவாக்கினேன். பின்னர்




கல்வி, வாழ்வாதாரம், சுயதொழில் ஊக்குவிப்பு, விளையாட்டு, கலை கலாச்சார முன்னேற்ற ஏற்பாடுகள் என சேவைகள் தொடர்ந்து கொண்டே செல்கின்றன.

**? புதிய வாழ்வு நிறுவனத்தின் இன்றைய வளர்ச்சி நிலை என்ன? எமது வாசகர்களிடம் நீங்கள் சொல்ல விரும்புவது என்ன?**

*2016 இல் இலங்கையில் பதிவுசெய்து, ஒரு பராமரிப்பு இல்லத்தை ஆரம்பித்ததோடு தொடங்கிய நிறுவனம், இன்று இங்கிலாந்திலும் கனடாவிலும் சட்டப்படி பதிவு செய்யப்பட்டிருக்கிறது. இந்த இடங்களில் நிதிதிரட்டி சேவைகள் செய்து கொண்டிருக்கும் அதே நேரம் அமெரிக்கா, அவுஸ்திரேலியா, நோர்வே போன்ற நாடுகளிலும் பதிவு செய்வதற்கான ஆயத்தங்களைச் செய்து கொண்டிருக்கின்றேன்.*

*இதன் முக்கிய நோக்கம் ஒவ்வொரு நாட்டிலும் உள்ள எமது இயக்குனர்களிடமும் ஒவ்வொரு துறையை ஒப்படைப்பதற்காகவே. உதாரணமாக பாராமரிப்பு இல்லம் மற்றும் வேலைவாய்ப்புகளை உருவாக்கல், சுயதொழில் ஊக்குவிப்பிற்கு ஊடாக உருவாக்கிய கைத்தொழில் உற்பத்திகளுக்கான சந்தை வாய்ப்புக்களை உருவாக்கும் பொறுப்பானது பதிவு செய்யப்பட்ட இலண்டன் நிறுவனத்தினுடையது. இதற்கான முழு ஒத்துழைப்பையும் எமது இயக்குனர்கள் அர்ப்பணிப்போடு செய்கின்றனர்,*

*அதே போன்று நோர்வே நாட்டு இயக்குனர்களிடம் வடக்கு, கிழக்கு, மலையக மாணவர்களின் கல்வி முன்னேற்றம் மற்றும் கலை பண்பாட்டைக் கட்டிவளர்க்கும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளது.*

*கனடா நாட்டு இயக்குனர்களிடம் சுய கைத்தொழிலை ஊக்குவிக்கும் திட்டங்கள் மற்றும், தொழிற்சாலைகள் அமைத்தல், வேலை வாய்ப்புக்களை உருவாக்கல், விவசாய கட்டமைப்புக்களை உருவாக்கி ஊக்குவித்தல் மொத்தத்தில் பொருளாதார வளர்ச்சியில் பெரிய மாற்றத்தை உண்டாக்குதல் என்பன ஒப்படைக்கப் பட்டுள்ளன.*

*அமெரிக்கா, அவுஸ்திரேலியா இயக்குனர்கள் (இது வரை பதிவுகள் மேற்கொள்ளப் படவில்லை என்றாலும் இயக்குனர் தெரிவுகள் முடிவடைந்து இயங்கத் தொடங்கிவிட்டனர்.) பெண் தலைமைத்துவ குடும்பங்களின் தேவைகளை அறிந்து அவர்களுக்கான வேலை வாய்ப்புக்களை உருவாக்கல், குழந்தைகளின் கல்வி மேம்பாட்டை உருவாக்கல் மற்றும் சிறுவர் சேமிப்புத் திட்டங்களை ஊக்குவித்து , பெண்கள் குழந்தைகளுக்கு ஆதரவாக செயல்படல் போன்ற திட்டங்களை செயற்படுத்துவார்கள்.*
























இது போன்ற திட்டங்களை ஏற்கனவே வகுத்து அவற்றில் ஓரளவு முன்னேற்றமும் கண்டுள்ளேன். இவற்றை அடுத்த கட்டத்திற்குக் கொண்டு செல்ல மக்களின் ஆதரவு தேவை.

**பராமரிப்பு இல்லம்தான் எமது தாய் நிறுவனம். புதிய வாழ்வு நிறுவனமாக பதிவு செய்யப்பட்ட அனைத்து நாடுகளிலும் இருந்து எமது நிறுவனத்திற்கான, அதிலும் குறிப்பாக எமது பராமரிப்பு இல்லத்திற்கான உதவிகளை பல வழிகளிலும் கோரி நிற்கிறோம்.**

இந்தப் பதிவைப் பார்க்கும் வாசகர்களே! எமது புதிய வாழ்வு நிறுவனத்தோடு இணையுங்கள். 150 இற்கும் மேற்பட்ட பல்கலைக்கழக மாணவர்கள் எம்மோடு பயணிக்கின்றனர். அதே போன்று வெளிநாடுகளிலும் எம்மோடு சேர்ந்து பயணிக்க பல்கலைக்கழக மாணவர்கள் சிலர் இணைந்துள்ளனர், எல்லோருமாகக் கைகோர்த்து எமது அழகான தேசத்தைக் கட்டியெழுப்புவோம். எனக்குப் பின்னராக எமது நிறுவனத்தை கட்டியெழுப்ப என்னோடு ஆரம்பத்தில் இருந்தே பயணிக்கும் மதிப்பார்ந்த தம்பி திரு. தர்மலிங்கம் பிரபாகரன் அவர்களை நியமித்துள்ளேன். அனைத்து இயக்குனர்களும் மக்களின் தேவையறிந்து, எனது சிந்தனைக்கு வடிவம் கொடுக்க ஒற்றுமையாகக் கைகோர்த்ததே எனக்கு கிடைத்த பாரிய வெற்றி. எமது பணிகள் தொடரும்.



**'விழ விழ எழுவோம்.**
**எழுகையில் நிமிர்வோம்.**
**ஒதுங்க மாட்டோம்'**

இதுவே எமது நிறுவனத்தின் வாசகம். நன்றி.



நவின்

# சிரிப்பும் சிந்தனையும் தெறிக்கும் சிரித்திரன்

> தாயக மண்ணில் இலக்கியப் பணி ஆற்றிய சிரித்திரன் சுந்தர் மார்ச் 3, 1996 இல் மறைந்த நாள் நினைவாக பிரசுரமாகிறது. தாயக மண்ணில் இலக்கியப்பணிக்கு ஆற்றிய அளப்பரிய சேவைக்காக தேசியத்தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்களால் மாமனிதர் விருதுவழங்கிக் கௌரவிக்கப்பட்டவர் சிரித்திரன் சுந்தர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது

நாற்பது வருடங்களுக்கு மேலாக கேலிச்சித்திரத்துறையில் தனது ஆளுமையைச்செலுத்திய சிரித்திரன் சுந்தர் பதினைந்து ஆயிரத்திற்கு மேற்பட்ட கேலிச் சித்திரங்களைத் தீட்டியுள்ளார். 'செய் தொழில் தெய்வம், சிரிப்பே சீவியம்' என்பதைத் தாரக மந்திரமாகக் கொண்டு கலை இலக்கிய வானில் பறந்து திரிந்தவர் சிரித்திரன் சுந்தர் என அழைக்கப்படும் மாமனிதர் சிவஞானசுந்தரம். மார்ச் 3, 1924 இல் பிறந்த அவர் மார்ச் 3, 1996 இல் மறைந்தார்.

கேலிச் சித்திரங்கள், பகடிக் கட்டுரைகள் மற்றும் நடைச் சித்திரங்கள் என்பன சிரித்திரனில் சுவைபட இடம்பெற்றன. சிரித்திரன் சுந்தரின் கேலிச் சித்திர நாயகர்களான சவாரித்தம்பர், சின்னக்குட்டி, மைனர் மச்சான், மயில்வாகனத்தார் போன்றவர்கள் வரலாற்றுப் புகழ்பெற்றவர்கள். 'மகுடி பதில்கள்' என்னும் தலைப்பில் சுந்தர் எழுதிய கேள்வி பதில்கள் என்றும் புகழ்பெற்றது.

### சிரித்திரனும் - சிரிப்பும் சிந்தனையும்:

சிரித்திரன் 1963ஆம் ஆண்டில் சி. சிவஞான சுந்தரம் அவர்களால் யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்ட நகைச்சுவை இதழ். அவரின் மறைவு வரை 32 ஆண்டு காலம் தொடர்ந்து வெளிவந்து சாதனை படைத்தது. சிரித்திரன் சஞ்சிகை மூலம் பல எழுத்தாளர்கள் அறிமுகப் படுத்தப்பட்டார்கள். வெறும் சிரிப்புச் சஞ்சிகையாக மட்டுமல்லாமல் சிரிப்புடன் சிந்தனையையும் தூண்டும் பல சிறந்த ஆக்கங்களைப் பிரசுரித்தவர் சுந்தர்.


சிந்தனைச் சிறப்பாலும், கேலிச் சித்திரங்கள், கருத்தோவியங்கள் போன்ற படைப்புக்களாலும் ஈழத்துத் தமிழ் இலக்கியத்தில் சிரித்திரன் சஞ்சிகை தனியிடத்தைப் பெற்றது. அவரது படைப்புகள் மண்வாசனை உள்ளவையாகவும், பாத்திரங்கள் யாழ்ப்பாணப் பேச்சு வழக்குத் தமிழைச் சுவையாகப் பேசுபவையாகவும் விளங்கின.

தமிழ் மக்களிடையேயுள்ள சாதி வேறுபாடுகள் போன்ற பிற்போக்குத் தனங்கள், மூடக் கொள்கைகளை நகைச்சுவையாக - ஆனால், உறைப்பாகக் குத்திக்காட்டி நையாண்டி செய்தார் சிரித்திரன் சுந்தர்.

### சிரித்திரனில் 'சவாரித்தம்பர்':

சிரித்திரன் சுந்தர் கொழும்பில் இருந்து வெளிவந்த தினகரனில் முதலில் கேலிச்சித்திரக்காரராக (Cartoonist) பணிபுரிந்தார். அக்காலத்தில் 'தினகரன்' பத்திரிகையில் ஆசிரியராக இருந்த க. கைலாசபதியின் அழைப்பை ஏற்று அப்பத்திரிகையில், சுந்தர் 'சவாரித்தம்பர்' என்ற தொடரை வரையத் தொடங்கினார். சவாரித்தம்பர் வாசகரிடையே அமோக வரவேற்பைப் பெற்றது. சவாரித்தம்பருக்காகத் தினகரனை வாங்கியோரும் பலர்.

சவாரித்தம்பர் என்பவர், அக்காலத்தில் கரவெட்டியில் வாழ்ந்துகொண்டிருந்த - முற்போக்கு எண்ணங்கொண்ட






ஒரு பெரியார். வண்டில் சவாரி செய்வதில் வல்லவர். சுந்தர் அவரோடு நன்கு பழகியவராக இருந்தார்.

அந்தக் கேலிச் சித்திரங்களை அவர் படித்து, சிவஞானத்தின்ரை வேலை நல்லாயிருக்கு என்று சொல்லிச் சிரித்து மகிழ்ந்தவராம். சவாரித்தம்பர் பாத்திரத்தைக் கண்ணியமான பாத்திரமாகவே சுந்தர் படைத்துவந்தார்.

அதில் வந்த சின்னக்குட்டி, பாறி மாமி பாத்திரங்களும் கரவெட்டியில் வாழ்ந்தவர்களே. தினகரன் வார மஞ்சரியில் 'மைனர் மச்சான்', 'சித்திர கானம்' ஆகிய கேலிச் சித்திரத் தொடர்களையும் சுந்தர் வரைந்தார். சிரித்திரனை 1963-ல் ஆரம்பித்தார் சுந்தர். சிரித்திரன் இதழ்கள் 1970 வரை கொழும்பு பண்டாரநாயக வீதி சுதந்திரன் அச்சகத்திலும், 1970 முதல் 1971 வரை டாம் வீதியில் குமரன் அச்சகத்திலும் அச்சிடப்பட்டன. 1971 முதல் யாழ்ப்பாணம் பிரவுண் வீதியில் ஸ்ரீலங்கா அச்சகத்தில் இருந்து வெளிவரத் தொடங்கின.

1971 நவம்பர் முதல் சிரித்திரனின் சொந்த அச்சகத்தில் இருந்து வெளியாகியது. போர்க்கால சூழலில் 1995 -ல் யாழ்ப்பாணத்தில் இருந்து இடம்பெயர்ந்தபோது சிரித்திரன் இதழ் நிறுத்தப்பட்டது. அடுத்த ஆண்டே ஆசிரியர் சிவஞானசுந்தரம் மறைந்தார். மொத்தம் 32 ஆண்டு காலம் தொடர்ந்து சிரித்திரன் வெளிவந்தது.


## எரிக்கப்பட்ட சிரித்திரன் :

ஈழத்துத் தமிழ் இலக்கியத்தில் சிரித்திரன் சஞ்சிகை சிந்தனைச் சிறப்பால் தனக்கென தனியிடத்தை பெற்று இருந்தது. ஆயினும் துயரமிகு நிகழ்வாக சிரித்திரன் அச்சகமும் அலுவலகமும், ஆசிரியரின் நூலகச் சேமிப்பும் 1987-இல் இந்திய அமைதிப்படையால் தீவைத்து எரிக்கப்பட்டன.

சிரித்திரன் இதழாசிரியரின் மகள் வாணி சுந்தர் பதிவுகளின் படி, சிரித்திரன் அலுவலகம் இந்திய அமைதிப்படையினர் தங்குமிடமாக ஆக்ரமிக்கப்பட்டது என்ற தகவல்களையும் அவர் வெளிக் கொணர்ந்தார்.

## 1995 யாழ்ப்பாண இடப்பெயர்வு:

யாழ்ப்பாணத்தில் 1995-ன் போர்க்கால மாபெரும் இடப்பெயர்வு வரையில் வெளிவந்த சிரித்திரனின் முழு ஆயுள் காலமான 32 ஆண்டுகளில் மொத்தம் 318 இதழ்கள் வெளிவந்தன. சிரித்திரன் சுந்தரின் 'கார்ட்டுன் ஓவிய உலகில் நான்' என்ற சுயசரிதை நூலின் முன்னுரையில் பிரபல எழுத்தாளர் செங்கை ஆழியான் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். 1963 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட 'சிரித்திரன்' சஞ்சிகை திரு சிவஞானசுந்தரம் அவர்களின் மறைவு வரை 32 வருடகாலம் தொடர்ந்து வெளிவந்து சாதனை படைத்தது.




சிரித்திரன் ஆசிரியர் நினைவு மலரில் சிரித்திரன் வரலாற்றை எழுதும் செங்கை ஆழியான் தமிழில் முழுக்க முழுக்க கேலிச் சித்திரத்துக்காக வெளிவந்த ஒரே இதழ் சிரித்திரன் என்று பெருமையுடன் கூறியுள்ளார்.

பல எழுத்தாளர்களையும் அறிமுகம் செய்த சிரித்திரன் புதுக் கவிதைகளையும் சிறுகதைகளையும் தொடர் கதைகளையும் வெளியிட்டது. சிரித்திரன் சஞ்சிகை மூலம் புகழ் பெற்ற பல எழுத்தாளர்கள் இன்று உலகில் பலர் பவனி வந்து கொண்டிருக்கிறார்கள். திக்குவல்லை கமால், திக்கவயல் தர்மகுலசிங்கம் (சுவைத்திரள் ஆசிரியர்), காசி ஆனந்தன், யாழ் நங்கை ஆகியோர் சிரித்திரனில் எழுதிய ஆரம்பகால எழுத்தாளர்கள். எஸ். அகஸ்தியர், டானியல் அன்ரனி, சுதாராஜ், அமிர்தகழியான், நவாலியூர் சச்சிதானந்தன், தெளிவத்தை ஜோசப் என பலருக்கு களம் அமைத்துக் கொடுத்தது சிரித்திரன்.

மலையகப் படைப்பாளி ராகுலனின் 'ஒய்யப்பங் கங்காணி', செங்கை ஆழியானின் 'ஆச்சி பயணம் போகிறாள்', 'கொத்தியின் காதல்' ஆகிய புகழ்பெற்ற படைப்புகள் சிரித்திரனால் வெளியிடப்பட்டன.

அத்துடன் காசி ஆனந்தனின் இலட்சியத் தாகம் மிகுந்த 'மாத்திரைக் கதைகள்' பிரசித்தமானவை. குடாரப்பூர் சிவா 'நடுநிசி' என்ற மர்மக் கதையை எழுதினார். மாஸ்டர் சிவலிங்கத்தின் 'விண்ணுலகத்திலே' எனும் சிறுவர் கதை, அ. ந. கந்தசாமியின் கதைகள் போன்றவை இவற்றுள் சில சிரித்திரனால் வெளியிடப்பட்ட படைப்புகள்.

மலையகப் படைப்பாளி ராகுலனின் 'ஒய்யப்பங் கங்காணி' அன்றைய அரசியல்வாதிகளை உலுக்கியது. செங்கை ஆழியானின் 'ஆச்சி பயணம் போகிறாள்', 'கொத்தியின் காதல்' ஆகியன புகழ் பெற்றவை.








## 'பிளித்ஸ்' ஆங்கிலச் சஞ்சிகையில் :

சிவஞானசுந்தரம் அவர்களது கேலிச் சித்திரம் முதன்முதலாக, இந்தியாவில் ஏராளமான வாசகர்களைக் கொண்ட - 'பிளித்ஸ்' (Blitz) என்னும் ஆங்கிலச் சஞ்சிகையில் வெளியானது. தொடர்ந்து கரஞ்சியா ஆசிரியராக இருந்த 'கொஞ்ச்' சஞ்சிகையிலும், அவரது கேலிச் சித்திரங்கள் பல வெளிவந்தன. அதன்மூலம் பிரபல கேலிச் சித்திரக் கலைஞர்களான போல் தாக்கரே, ஆர். கே. லக்ஷ்மணன் ஆகியோருடன் அறிமுகம் ஏற்பட்டு, அவர்களுடன் கேலிச் சித்திரம் பற்றி உரையாடி வந்தார்.

இதன்பின் அவர் இலங்கை வந்து, அரசாங்க கட்டடத் திணைக்களத்தில் படவரைஞராகப் பணிபுரிந்து வந்தார்.

சிரித்திரன் சுந்தர் என்றவுடனே முகத்தில் புன்னகை அரும்பும். நெற்றியில் சிந்தனைக் கோடுகள் வரைபடமாகும். 'மகுடி பதில்கள்' என்று மகுடமிட்டு சுந்தர் எழுதிய கேள்வி பதில்கள் ஒரு காலத்தில் பத்திரிகை உலகில் பலராலும் பேசப்பட்டு வந்தது.

புதுப் புதுத் தலைப்புகளில் சிந்தனைத் துளிகளைத் தீட்டி, சிரித்திரனை அவர் அழகுசெய்தார். 'பல்லி சொன்னதும் செய்தி சொன்னதும்', 'சிரித்திரன் டயறி', 'ஜோக்கிறட்டீஸ்' முதலியவற்றை உதாரணங்களாகக் கூறலாம். 'மிஸ்டர் அன் மிஸ்ஸிஸ் டாமோடிறன்', 'மகுடி பதில்கள்' என்பன சிரித்திரனுக்குரிய சிறப்பு முத்திரைகள் ஆகும். அவர் சுகயீனமுற்று - ஒரு கையும் ஒரு காலும் வழங்க முடியாத நிலையிலும் தொடர்ந்து எழுதினார். கேலிச் சித்திரங்கள் தொடர்ந்து வரைந்தார்.

சிரித்திரன் நகைச்சுவைகளை மாத்திரம் தாங்கி வரவில்லை. தரமான சிறுகதைகள், குறுநாவல்கள், இலக்கியக் கட்டுரைகள், கலைஞர்களுடனான நேர்காணல்கள் முதலிய ஆக்கங்களும் அதனை அழகுசெய்தன. சிரித்திரன் நேர்காணல்கள் அடங்கிய நூலினை, 'தேன்பொழுது' என்ற பெயரில் சுந்தர் வெளியிட்டார். வேறு ஆக்கங்களும் பல நூலாக வெளியிடப்பட்டுள்ளன.





'சிரித்திரன் சித்திரக் கொத்து' என்ற கேலிச் சித்திரத் தொகுதியை, 1989 ஆம் ஆண்டு சுந்தர் வெளியிட்டார். 'மகுடி பதில்கள்', 'கார்ட்டூன் உலகில் நான்' ஆகிய நூல்களும் வெளிவந்துள்ளன.

தாயக மண்ணில் இலக்கியப் பணிக்கு ஆற்றிய அளப்பரிய சேவைக்காக தேசியத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்களால் மாமனிதர் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டவர் சிரித்திரன் சுந்தர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

## சிரித்திரன் மீள்பதிப்பு:

சிரித்திரன் இதழ் Centre for Creativity and Innovation நிறுவனத்தால் மீளவும் புதுப்பொலிவுடன் அச்சிலும், இணையத்திலும் பதிப்பிக்கப்பட்டு 2021 ஜனவரி முதல் யாழ்ப்பாணத்தில் இருந்து உலகெங்கும் கிடைக்கக்கூடிய வகையில் வெளியிடப்பட்டு வருகின்றது. siriththiran.com எனும் இணைய விலாசத்திலிருந்து தற்போது வெளிவருகிறது.





பாகம்: 02

பவானி

# இடப்பெயர்வும் நானும்

ஒருவாறாக அன்றைய இடப்பிரச்சனை தீர்ந்தது. அன்றிரவு, எம்மோடு கூட எம்மை அழைத்து வந்த அயலவரின் தரப்பாள் கொட்டகையில் நாம் தங்கினோம். விடியற்காலையில் எங்கோ கிபீர் தாக்குதலும், எறிகணைத் தாக்குதலும், தொடர்ச்சியாக சற்று தூரத்தில் கேட்டன. பொழுது புலருகின்ற நேரத்தில் சத்தம் கேட்டதால், எல்லாரும் எழும்பி பங்கருக்குள் போனார்கள். எங்கோ கிளிநொச்சிப் பக்கம் சத்தம் கேட்பதாக பேசிக் கொண்டோம்.

நான் அங்கிருந்த ஒரு பெரிய பாலை மரத்தின் கீழுள்ள பற்றைகளை துப்பரவாக்கினேன். அந்த நேரம் அங்கு வந்த பெண், நான் ஏதோ அவரது காணியை அடாத்தாக பிடித்து விட்டது போல, அதைத் தொடாதே, இதை அதுல வைக்காதே என்று கூறியதுடன், பிள்ளைகளையும் மனிதாபிமானம் பார்க்காது தீண்டத் தகாதவர் போல நடந்து கொண்டார்.

நாம் என்ன இவர்கள் வளவில் விரும்பி வந்தா தங்குகிறோம்? நாங்களும் எமது வீட்டில் சோலையாக இருந்த கனிதரும் மரங்களையும், நாம் தவழ்ந்து விளையாடிய மண்ணையும் விட்டு, காலத்தின் பிடியில் கட்டுண்டு வந்திருக்கிறோம். ‘அட! தனிய ஒரு பெண் இரண்டு பிள்ளைகளோட கஷ்டப்படுது.. இருந்திட்டு போகட்டுமே..’ என்று நினைக்கவில்லை.

வலிகளைத் தாங்கிப் பழகினாலும், இதுவரை எவருமே என்னை சினந்து பேசியதில்லை. நான் மிகவும் கஷ்டப்பட்டு அழுகையை அடக்கிக் கொண்டேன். என் பிள்ளைகளுக்கு நான் மட்டுமே நம்பிக்கை. அதை உடைக்கக் கூடாது.

ஒருவாறாக கொட்டில் போட்டு, பக்கத்தில் பங்கரும் வெட்டி, மண் மூடைகள் அடுக்கியாச்சு. நிமிட நேரத்தில் இவற்றை சொல்லி விட்டேன். ஆனால், இவற்றை செய்வதில் உள்ள கஷ்டம் அந்த வலிகளை அனுபவித்தவர்களால் மட்டுமே உணரமுடியும்.

நான் வேலைக்கு செல்லும் வேளைகளில் கிபிர், எறிகணைத் தாக்குதல் நடைபெற்றால், சத்தம் கேட்டதும், பங்கரிற்கு ஓட வேண்டும் என்று பிள்ளைகளிடம் கூறினேன். பிள்ளைகள் இருவரும் எமது சங்கத்திற்கு அருகே உள்ள பாடசாலைக்கு சென்றார்கள். அங்கும் நிம்மதியாக படிக்க முடியவில்லை. எனவே வட்டக்கச்சி இடப்பெயர்வுடன் படிப்பும் தடைப்பட்டது. மாறி மாறி வரும் கிபிரும், எறிகணைத் தாக்குதலும் ஒரு நிம்மதியற்ற வாழ்கையை தந்தது.

எனது மகன் பங்கரில் குதிக்கும் போது வலதுகை மணிக்கட்டில் முறிவு ஏற்பட்டு விட்டது. அப்போது கிளிநொச்சி வைத்தியசாலையும் இடம் பெயர்ந்து வேறு இடத்தில் இயங்கியது. கிபிர் தாக்குதல்களிலிருந்து தப்புவதற்காக செஞ்சிலுவை அடையாளம் ஆஸ்பத்திரி கூரையின் மேல் பெரிதாக போடப்பட்டிருந்தது. காயக்காரர்களினால் வைத்தியசாலை நிரம்பி வழிந்தது. அங்கிருந்த காயம் பட்டவர்களுடன் ஒப்பிடும் போது மகனின் காயம் பெரிதாகத் தோன்றவில்லை. ஆனாலும், அவன் வலியினால் அழுது கொண்டிருந்தான்.

சிறு குழந்தை முதல் வயோதிபர்கள் வரை வேறுபாடு இன்றி காயமடைந்திருந்தவர்கள் வைத்தியசாலையில் இருந்தார்கள். அவர்களின் முனகல் சத்தமும், அழுகையும் அங்கு ஒரு சோக சூழலைத் தந்தது. குண்டுத் தாக்குதலினால் எரிகாயங்களுடன், ஒரு சிறு பெண்குழந்தை இருந்தது. என்னவென்று சொல்வது? பார்த்து அனுபவித்த வலி பாரமாக இப்போதும் கண்ணீர் வருகிறது.

இக் கால கட்டத்தில் இறந்தவர்களுக்கான சமய கடமைகளை செய்ய முடிந்தது. இத் தொடரை தொடர்ந்து வாசிக்கும் போது ஏன் இப்படிச் சொன்னேன் என்பது விளங்கும். எனது மகனுக்கு எக்ஸ்ரே எடுக்காமல் குத்துமதிப்பாக மாக்கட்டு போட்டு அனுப்பி விட்டார்கள். மகனின் கை வடிவாக பொருந்தவில்லை. அதனால் அவனுக்கு இப்போதும் அந்த வலி உண்டு. பாரங்கள் தூக்க முடியாது. அன்றைய சூழலில் அது சரியானதே.

தெய்வங்கள் நடமாடுவதாய் கதைகளில் கேட்டிருப்போம். ஆனால் மருத்துவ ஊழியர்கள் அனைவரும் தெய்வமாக நடமாடினார்கள். கொரோனா காலத்தில் பணிபுரிந்த மருத்துவர்களை விடவும் அன்று அந்தச் சூழலில் பணியாற்றியவர்கள் போற்றப்பட வேண்டியவர்களே. அவர்களுக்கு இத் தருணத்தில் நான் நன்றி கூறுகின்றேன்.

தொடர்ச்சியான எறிகணைத் தாக்கு



தலும், கிபிர் தாக்குதலும் நடந்து கொண்டே இருந்தது. மக்களும் மெது, மெதுவாக நகர்ந்து கொண்டிருந்தார்கள். வட்டக்கச்சி காணி உரிமையாளர் ஏதோ வழியாக புலம்பெயர் தேசத்திற்கு புறப்பட்டு சென்றுவிட்டார். அதன்பின் நாம் அங்கு சில நாட்களே தங்கியிருந்தோம். தொடர்ச்சியான எறிகணை வீச்சு, கிபிர் தாக்குதல் என நாம் நம் அன்றாட கடமைகளை கூட செய்ய முடியாமல், நித்திரையின்றி நிம்மதியின்றித் தவித்தோம்.

இடப்பெயர்வுகள் அதிகரித்தமையால், என்னுடைய வேலை தொடர்பாகவும் தொடர் வேலை இருந்து கொண்டே இருந்தது. சன நடமாட்டம் அதிகம் உள்ள இடங்களிலேயே கிபிர் தாக்குதல் அதிகமாக காணப்படும். நாம் அதற்கேற்றவாறு நிவாரணங்களை துரிதமாக வழங்கி, அனுப்பி விடுவோம்.

மீண்டும் சங்கம் இடம்பெயர முடிவு செய்து மூங்கிலாறு செல்வதாக தீர்மானிக்கப்பட்டது. அதற்கான காணி தெரிவு செய்யப்பட்டு, தற்காலிக களஞ்சிய அறை அமைக்கும் பணி நடைபெற்றது. நாமும் செல்ல வேண்டும் என்பதால், மூங்கிலாறிலுள்ள காணியில் கொட்டில் போட இடம் ஒன்று எடுத்தேன். நமது பொருட்களுடன் மூங்கிலாறு செல்ல வேண்டிய சூழல் ஏற்பட்டது. நமது சங்க பாரவூர்திகள் ஓய்வின்றி சங்க உடமைகளை ஏற்றின.

எனக்கு எமது சங்க நெறியாளர் உறுப்பினர் உதவ முன் வந்தார். மிகவும் நேர்மையும், உண்மையும் உள்ள நல்ல மனிதர். அவரை நினைவு கூருவதில் மகிழ்வடைகிறேன். இவரது தம்பி சாள்ஸ் அன்ரனி சிறப்பு தளபதியாக இருந்து வீரச்சாவை தழுவியவர். (லெப் கேணல் சேகர்).

ஒரு நாள் காலை பத்துமணியளவில், வீட்டு பொருட்கள் அனைத்தையும் ஏற்றி, அதன்மீது நானும் பிள்ளைகளுமாக ஏறி இருக்க எமது பயணம் ஆரம்பமானது. வழி நெடுகிலும் எம்மைப் போலவே பலர் இடம் பெயர்ந்து போய்க் கொண்டிருந்தார்கள். எனவே நாமும் அந்த நெரிசலில் சிக்கி ஊர்ந்து கொண்டிருந்தோம். வட்டக்கச்சியிலிருந்து கல்மடு செல்ல கிட்ட தட்ட 5 மணி நேரம் பிடித்தது. கல்முனையை அண்மித்த போது, எமது உழவு இயந்திர பெட்டியின் சில்லு காற்று போய்விட்டது. உடனே அண்ணா உழவு இயந்திரத்தை நிறுத்தி, எங்களை இறங்க வேண்டாம் என்று கூறி, சில்லைக் கழற்றிக் கொண்டு சென்றார்.

டயர் வழுவழுப்பாக காணப்பட்டது. பொருளாதாரத் தடை காரணமாக டயர்கள் வரவில்லை. நாம் உழவு இயந்திரப் பெட்டியில் இருந்தோம். எங்கோ தொலைவில் எறிகணைத் தாக்குதல் கேட்ட வண்ணம் இருந்தது. ஒருவாறாக டயர் ஒட்டி வர, மீண்டும் நாலு மணி போல எமது பயணம் தொடங்கியது. நாம் கல்மடுவிலிருந்து விசுவமடுவுக்கு செல்லும் வயற் பாதை ஊடாகச் சென்று கொண்டிருந்தோம்.

எமது போதாத காலமோ என்னவோ தெரியவில்லை. வாய்க்கால் பாலத்தில் ஏறும் போது மீண்டும் டயர் வெடித்து விட்டது. சரி நமக்கு சோதனை தான் என எண்ணினேன். அண்ணா டயரை கழற்றிக் கொண்டு வந்த வாகனமொன்றில் ஏறி விசுவமடு சந்திக்குச் சென்று விட்டார். நாம் தொடர்ந்து இருந்து வந்தமையால் கால் வலித்தது. இறங்கி நின்றோம். பரந்த வெளி என்பதால் கொஞ்சம் பயமாக இருந்தது. பிள்ளைகள் இருவரும் இறங்கி, வேலி ஓரமாக ஒதுங்கி விட்டு வந்தார்கள். இந்த ஒதுங்கல் என்பது அவசர தேவைக்கானது. ஆனால் என்னால் அப்படிச் செய்ய முடியவில்லை. அந்தப் பாதையூடாக மக்கள் போவதும், வருவதுமாக இருந்தார்கள். இருட்டினால் மட்டுமே எதுவும் செய்ய முடியும். இதனை நான் இங்கு குறிப்பிடும் போது என்ன இதுவென்று யோசிக்கலாம்.

பெண்கள் இடப் பெயர்வில் நிறைய கஷ்டங்களை அனுபவித்தார்கள். இதனை இத்தோடு விட்டு விடுவோம். இதனை அடுத்த அத்தியாயத்தில் விரிவாக சொல்கிறேன்.

அங்குதான் நிறைய வலிகளை அனுபவித்தோம்.வேலி ஒரமாக ஒதுங்கிய பிள்ளைகள் வரவும், மேலே கிபிரின் ஒலி மிக அருகே கேட்டது. பயந்த பிள்ளைகள் ‘அம்மா’ என அலறியபடி வாய்க்காலில் குதித்து விட்டார்கள். நான் பதறிப் போனேன். நான் ‘அது இங்கு இல்லை தூரத்தில் வெளியே எங்கோ.. பயப்படாமல் வெளியே வாருங்கள் என்றேன். இருவரும் நனைந்த கோழிக்குஞ்சுகளாக ஓடி வந்து என்னை அணைத்துக் கொண்டார்கள். பிள்ளைகளின் தவிப்பு, பயம் என்பன மனதை பிசைந்து ஏதோ செய்தது. பின் இருவரும் உடை மாற்றிக் கொண்டனர்.

நாம் நின்ற இடத்துக்கு அருகாமையில் ஒரு உறவினர் தங்கியிருந்தார். அவர் எங்களை கண்டதும் வேற ஒருவரை பொருட்களுக்கு காவலுக்கு விட்டு எம்மைக் கூட்டிச் சென்றார். இரவு உணவை சாப்பிட்டு செல்லும்படி கூறினார். உதயண்ணனும் டயர் ஒட்டிக் கொண்டு வந்து விட்டார். நாங்கள் இருந்த அவ்வீட்டருகே வாகனத்தை நிற்பாட்டினார்.



சாப்பிட்டு முடித்து புறப்பட இருட்டி விட்டது. ஆறரை ஏழு மணியிருக்கும். மீண்டும் பயணம் ஆரம்பமானது.

இலேசாக மழை தூற ஆரம்பித்தது. அட! நாம் படும் கஷ்டத்தில் மழை வேறு என இயற்கையின் மீதும் கோபம் வந்தது. உதயண்ணாவும் என்னை விட்டு விட்டு திரும்பிப் போக வேண்டும். அவரைக் காணாமல் அவரது குடும்பமும் தேடும். ஏனெனில் எமது இன்றைய சூழ்நிலையில் எதுவும் யாருக்கும் எப்போது வேண்டுமென்றாலும் நடக்கலாம் என்ற நிலையில் நாங்கள் இருந்தோம்.

**தொடரும்....**




# தென்மராட்சி தமிழரின் சாதனை

# தென்னிலங்கையில் உலக சாதனை படைத்த நாயகன்



யாழ்ப்பாணம் தென்மராட்சியைச் சேர்ந்த 60 வயதான செல்லையா திருச்செல்வம் தனது தாடியாலும் தலை முடியினாலும் ஏஷ் பட்டா ரக வாகனத்தை 1000 மீற்றர் தூரம் வரை இழுத்து உலக சாதனை நிகழ்த்தியுள்ளார். செல்லையா திருச்செல்வம் தனது தாடியால் ஏஷ் பட்டா ரக வாகனத்தை ஏற்கனவே இழுத்து பல சாதனைகளை நிகழ்த்தியுள்ளார்.

கொழும்பு காலி முகத்திடலில் 1000 மீற்றர் தூரத்திற்கு வாகனத்தை தனது தாடியாலும் முடியாலும் இழுத்து உலக சாதனையை நிகழ்த்துவதே திருச்செல்வத்தின் நோக்கமாக இருந்தது. அதற்கமைய 1550 கிலோ கிராம் எடையுடைய ஏஷ் பட்டா ரக வாகனத்தை 500 மீற்றர் தாடியாலும், 500 மீற்றர் தலை முடியாலும் இழுத்து திருச்செல்வம் அந்த உலக சாதனையை நிகழ்த்தினார்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் ஏற்பாட்டில் கொழும்பு காலி முகத்திடலில் இந்த நிகழ்வு நடைபெற்றது. டக்ளஸ் தேவானந்தா மற்றும் உலக சாதனை புத்தக நிறுவனப் பிரதிநிதிகள் இந்த சாதனை நிகழ்வை ஆரம்பித்து வைத்தனர்.

இந்த நிகழ்வை Cholan Book of World Record (CBWR) நிறுவனத்தின் பிரதிநிதிகள் நேரடியாக அவதானித்து திருச்செல்வத்தின் சாதனையை அங்கீகரித்து, பதக்கத்தையும் விருதையும் பட்டயத்தையும் வழங்கினர்.

## 60 வது வயதில் சாதனை நாயகன்

சாதனை நாயகனான செல்லையா திருச்செல்வம் (60) கடந்த பத்தாண்டுகளாக தனது




தலைமுடியாலும், தாடியாலும் வாகனங்களை இழுப்பது, தனது உடலின் மீது வாகனத்தை ஓடவிடுவது போன்ற சாதனைகளை நிலைநாட்டி வருகிறார்.

60 வயதான சாதனை நாயகன் அண்மையில் சாவகச்சேரி பஸ் நிலையத்தின் அருகில் 1550 கிலோ எடையுள்ள வாகனத்தை 1500 மீற்றர் தூரம் வரை 45 நிமிடங்களில் இழுத்து சாதனை படைத்துள்ளார்.

இம்முறை செல்லையா திருச்செல்வத்தின் சாதனை சோழன் உலக சாதனைப் புத்தகத்தில் இடம்பிடித்து தமிழர்களுக்கு பெருமையைத் தேடிக் கொடுத்துள்ளது.







# யாழ்ப்பாணத்தில் விசித்திர விளையாட்டு இல்லம்

இலங்கையர்களின் ஒட்டுமொத்த கவனத்தினையும் திசை திருப்பிய சம்பவமாக யாழ்ப்பாணம் - நடேஸ்வரா கல்லூரியின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி அமைந்துவிட்டது. இக் கல்லூரியின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி அதிபர் பா.பாலகுமார் தலைமையில் இடம்பெற்றது.

பாரதி, வள்ளுவர், கம்பர் என மூன்று இல்லங்கள் வகைப்படுத்தப்பட்டு போட்டிகள் இடம்பெற்றன. இதில் பாரதி இல்லம் 696 புள்ளிகளைப் பெற்று முதலாம் இடத்தை தனதாக்கிக் கொண்டது. இந்த வெற்றிக்கு அவர்களின் இல்லத்தின் அலங்கரிப்பும் ஓர் காரணியாகும்.

இல்ல அலங்கரிப்பில் இலங்கை போக்குவரத்து சபையினரின் பொறுப்பற்ற செயல்பாடுகளினால் ஏற்படும் விபத்தினை தத்ரூபமாக காட்டியிருந்தனர். பாரதி இல்லம் இந்த இல்லத்தினை வடிவமைத்து முதலாம் இடத்தை



தனதாக்கிக் கொண்டது. அரச பேருந்து ஒன்று விபத்துக்குள்ளான மாதிரியை அலங்கரித்து அனைத்து பார்வையாளர்களையும் கவர்ந்து ஈர்த்ததுடன், மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் விதமாகவும் அமைந்திருந்தது.

காங்கேசன்துறை- யாழ்ப்பாணம் 769 வழித் தடங்களில் பயணிக்கும் அரச பேருந்து ஒன்று நடைபாதையில் மாணவர் ஒருவரை மோதி தள்ளுவதை சித்தரிக்கும் முகமாக இல்லம் அமைக்கப்பட்டுள்ளது. பொறுப்பற்ற சாரதிகளால் பலியாகும் உயிர்கள் பொறுப்பற்ற சாரதிகளால் இவ் விபத்துக்கள் இடம்பெறுவதை மாணவர்கள் சுட்டிக்காட்டியிருந்தனர்.

இலங்கையில் வீதி விபத்துக்களினால் உயிர் இழப்புகள் அண்மைக் காலமாக அதிகரித்திருப்பதை கடந்த சில நாட்களில் ஏற்பட்ட விபத்துச் சம்பவங்கள் படம்பிடித்து காட்டுகின்றன. இதனால் நாளொன்றுக்கு சராசரியாக 05 நபருக்கு மேற்பட்டவர்கள் உயிரிழப்பதாக ஆய்வுகள் சுட்டிக்காட்டுகின்றது. சாரதியின் கவனக் குறைவே பெரும்பாலும், வீதி விபத்துக்கு முக்கிய காரணமாக அமைகின்றது.

சாரதிகள் விழிப்பாக இருக்க வேண்டிய ஒரு நேரம் இதுவாகும் என்பதை வித்தியாசமாக எடுத்துக்காட்டிய யாழ்ப்பாணம் நடேஸ்வரா கல்லூரியின் பாரதி இல்லத்திற்கு மக்கள் மத்தியில் பாராட்டுக்கள் குவிந்து வருகின்றன.



மகாராஷ்டிராவின் பூனாவில் ஒரு தினக்கூலி ஒருவர் தன் மனைவியை பிரசவத்திற்காக ஆஸ்பத்திரியில் சேர்த்தார். பிரசவம் சிஸேரியன் ஆனது. எவ்வளவு ஃபீஸ் ஆகுமோ தெரியலையே. வீட்டை அடமானம் வைத்து விடலாம் என்று நினைத்தார்.

''டாக்டர் சார், என்ன குழந்தை?

உங்களுக்கு 'தேவதை' பிறந்திருக்கு''என்றார்.

'ஃபீஸ் எவ்வளவு?'

'தேவதைகள் பிறந்தால் நான் ஃபீஸ் வாங்குவதில்லை' என்றார்.

'ஐயா நீங்க தெய்வம்' என்று காலில் விழுந்தார் அந்த மனிதர்.

பூனாவில் டாக்டர் கணேஷ் ராக் என்பவர் 10 வருடங்களாக பெண் குழந்தை பிறந்தால் ஒரு பைசா கூட வாங்குவதில்லை. இதுவரை 1000 இற்கும் மேற்பட்ட இலவச பிரசவம் பார்த்து விட்டார்.

'நான் மல்யுத்த வீரராக வேண்டும் என்று தான் நினைத்தேன். ஆனால் என் அம்மா, நீ மருத்துவராகி பெண் தேவதைகளைக் காப்பாற்று என்றார்' என்று பெருமையோடு சொல்கிறார்.

BBC, லண்டன் நிறுவனம் "Unsung Indian'' என்று இவரைப் பற்றி கட்டுரை வெளியிட்டு பாராட்டியுள்ளது! நல்ல மனதுள்ள இந்த வைத்தியரை எவ்வளவு பாராட்டினாலும் தகும்.





# உயர்ந்த மனிதன்

# வணல்

## கொற்றவை

இருவருக்குமே மனதில் இருந்த பயம் குறைந்து கொஞ்சம் நிம்மதியாக இருந்தது. ஆனந்தனும் வெண்ணிலாவும் பேசிக்கொண்டே வெளியில் வந்தார்கள். திடீரென்று வெண்ணிலா ஆனந்தனின் கையைப் பிடித்துக் கொண்டாள்.

''அப்பா! அம்மாவுக்கு சுகமில்லை என்று நீங்கள் எவ்வளவு வேதனைப்பட்டனீங்கள்..? நான் ஒருநாளும் உங்களை இப்பிடிப் பார்க்கேல்லை ரெண்டு நாள்ளை திடீரெண்டு வயசு போனமாதிரி ஆகீட்டீங்கள்.. இப்ப, அம்மாவுக்கு பிரச்சனை இல்லை எண்டு சொல்லீட்டினம் தானே. வருத்தப்படாதேங்கோ அப்பா. நான் உங்களோட இருக்கிறன். கெதியில அம்மாவும் வந்திடுவா என்ன? இனி யோசிக்க வேண்டாம்..''

ஒரு கெஞ்சுதலுடன் ஆனந்தனைப் பார்த்தாள் வெண்ணிலா. ஒரு சின்னப் பெண் பெற்ற தாயைப்போல அரவணைத்து ஆறுதல் சொல்வது உண்மையிலேயே மனநிறைவைத் தந்தது ஆனந்தனுக்கு. கண்களைத் துடைத்துக் கொண்டான் அவன்.

''சரி....! இங்கயே நிக்காமல் வீட்டுக்கு போவம் அங்க ஆயிரம் வேலை காத்துக் கிடக்கு...''

அந்த நேரம்தான் பாடசாலையில் இருந்து வெண்ணிலாவின் ஃபோனுக்கு மெசேஜ் வந்தது.

''அப்பா...! பள்ளிக்கூடத்தில இருந்துதான் வந்திருக்கு. என்னை வரட்டாம்...''

'பெற்றோரில ஒராளையும் கூட்டி வரட்டாம்...'

'என்னவாக இருக்கும்? ஏதும் பிரச்சனையோ.?'''

கையோட அங்க போவம்... பள்ளிக்கூட விசயத்தில தாமதம் பண்ணக் கூடாது..'' ஆனந்தன் சொல்ல, இருவருமாக பாடசாலைக்கு புறப்பட்டனர்.

வெண்ணிலா மட்டுமல்லாமல் வேறு சிலரும் அந்த நேரத்தில் அங்கு பெற்றோருடன் வந்திருந்தனர்.

''சாதாரண தரப் பரீட்சை வருது. தெரியும்தானே. '' பிள்ளையள் கடுமையாப் படிக்க வேணும். கொரோனா காலத்தில பெரிசா கட்டுப்பாடுகள் ஒண்டும் இருக்கேல்லை. இனி அப்பிடி இல்லை கொரோனாவுக்கு முந்தின காலம் மாதிரி நிறையக் கெடுபிடியள். சோதனைப் பேப்பரும் கடுமையாத்தான் இருக்கும் படிப்பில கவனம் செலுத்தி நிறைய உழைக்க வேணும். அப்பதான் நல்ல பெறுபேறுகள் கிடைக்கும்.

நாங்கள் கொஞ்சக் கொஞ்சப் பேரா பிள்ளையளையும் பெற்றோரையும் கூப்பிட்டு பிள்ளையளின்ரை குறை நிறையளைக் கதைக்கிறம்... எல்லாப் பிள்ளையளோடையும் கதைக்கிறம்.... ''முதல்ல வெண்ணிலா...! யார் உங்க




## அங்கம்: 18

ளோட வந்தது? அப்பாவா? ரெண்டுபேரும் பிறின்சிபல் ரூமுக்குள்ளை வாங்கோ!''

அவரைத் தொடர்ந்தனர் வெண்ணிலாவும் ஆனந்தனும்.

''வெண்ணிலா படிப்பில கெட்டிக்காரி. பழக்க வழக்கங்களிலயும்தான். பள்ளிக்கூடத்துக்கு நல்ல பெறுபேறு எடுத்துக் குடுப்பா என்று நாங்கள் எல்லோரும் எதிர்பார்க்கிறம். இப்ப கொஞ்ச நாளா அவவின்ரை கவனம் கொஞ்சம் சிதறியிருக்கு... ஏன்...? உங்களுக்கு தெரியுமோ?''

ஆனந்தனிடம் வினவினார் உதவித் தலைமை ஆசிரியர். வீட்டின் நிலைமையை ஆனந்தன் எடுத்துரைத்தான். அவர்கள் புரிந்து கொண்டார்கள்.

''வெண்ணிலாவின் பள்ளிக்கூட வரவும் அண்மையில கொஞ்சம் குறைஞ்சிருக்கு. இது படிப்பையும் பாதிக்கும். இன்றையில இருந்து வெண்ணிலா 'ஸ்ரடி லீவில' இருக்கலாம். இடையில 'ரெஸ்ற் ரைம் ரேபிள்' வந்தவுடனை அறிவிப்பம். வந்து வாங்கிக் கொண்டு போங்கோ. வெண்ணிலா..! முதலிலேயே வாழ்த்துகள் சொல்லுறம். நல்லா படிச்சு சோதனை எழுத வேணும் என்ன?''

என்னவோ ஏதோ என்று பயந்தவர்களுக்கு கிடைத்த சாதகமான ஆலோசனைகள் நிறைவாக இருந்தது.

''பிள்ளை! பிறின்சிபல் நல்லா சொல்லீட்டார் எண்டு சந்தோசமா இருந்திடக் கூடாது... என்ன? பள்ளிக்கூடம் போகாமல் இருந்த நாளையில படிப்பிச்ச பாடங்களை



நீ நல்லாப் படிக்க வேணும். ஏதும் விளங்கேல்லை எண்டால் உடனை ரீச்சருக்கு ஃபோன் பண்ணி கேட்கலாம் என்று சொன்னது ஞாபகம் இருக்கல்லோ...? இனி உன்ரை கவனம் எல்லாம் படிப்பிலதான் இருக்க வேணும். நீ நல்ல பெறுபேறு எடுக்கிறதுதான் அம்மாவை சந்தோசப்படுத்தும்.... என்ன?''

''நீங்கள் கவலையே படவேண்டாம் அப்பா...! என்ரை இலட்சியமே நல்லாப் படிச்சு, நல்ல வேலை எடுத்து உங்களையும் அம்மாவையும் தாங்கு தாங்கென்று தாங்கிறதுதான். இப்பவே சொல்லிப் போட்டன் அப்பா! நான் வேலைக்குப் போன உடனை நீங்கள் வேலையள் எல்லாத்தையும் விட்டிடோணும்.... சரியோ....?''

இருவரும் வீட்டை அடைந்தனர். உண்மையில் வீட்டில் அன்றைக்கு எந்த வேலையும் இருக்கவில்லை. நேற்றைய தினமே காவேரி அத்தனை வேலைகளையும் நேர்த்தியாக முடித்திருந்தாள். சாப்பாட்டையும் இன்றைக்கும் சேர்த்து செய்து வைத்ததால் அந்த வேலையும் இல்லை. வேகாத வெயிலில் போன களைப்புத் தீர எலுமிச்சை பானகம் செய்தாள் வெண்ணிலா. பின்னர், சோதனைக்குப் படிப்பதற்காக தான் ஒரு 'ரைம் ரேபிள்' தயாரித்து அதன்படி படிக்கப் போவதாக உட்கார்ந்து விட்டாள்.

வளவுக்குள் விழுந்து கிடந்த தென்னோலைகளை நனையப் போட்டான் ஆனந்தன். ஏற்கனவே நனையப் போட்டிருந்தவற்றை வெளியே இழுத்து கிடுகு பின்னி முடிக்கவும் நான்கு வீடுகள் தள்ளி இருக்கும் லட்சுமிப் பாட்டி வரவும் சரியாக இருந்தது. வந்தவுடனே சாந்தியைப்பற்றி குசலம் விசாரித்தா அவ.

''பெட்டை எங்கை...? படிக்கிறாளே...? சோலியில்லாத பெட்டை. சாந்திக்கு அவள் நல்ல உறுதுணை .. அது சரி.. இன்னும் கிடுகு பின்னக் கிடக்கே..? நான் சும்மாதானே இருக்கிறன் சேர்ந்து பின்னுவம்.''

''இல்லை ஆச்சி... இவ்வளவுந்தான்... முடிஞ்சுது ... கிடுகுகள் சேர்ந்திட்டுது. ஆரும் கேட்கிற மாதிரித் தெரியேல்லை... அதுகும் ஒரு யோசனை....''

''ஏன்ரா அப்பு கவலைப்படுறாய்? எல்லாரும் மதில் கட்டுறதில்லை... இந்த வெயிலுக்கு குளிர்ச்சியா கொட்டில் போடுற ஆக்களும் இருக்கினம்.. வரும்.. அவதிப்படாதை.''

மிச்சமாக இருந்த எலுமிச்சை பானகத்தை ஆச்சிக்கு ஊற்றிக் கொடுத்தான் ஆனந்தன். மதிய வாக்கில் இப்படி வந்து சாந்தியோடு பேசுவதும், அவளுக்கு சின்னச் சின்ன உதவியள் செய்வதும், மாமர நிழலில் இளைப்பாறுவதும் ஆச்சிக்கு வழமைதான்.

ஆச்சியின் வாய் முகூர்த்தமோ என்னவோ சுப்பிரமணி ஐயா கூப்பிட்டார்.

தம்பி வசந்தன்! எங்கின நிக்கிறீர்? வீட்டுப் பக்கம் வர ஏலுமோ? அலுவலா நிக்கிறீரோ?


''இல்லையில்லை. வீட்டிலதான் நிக்கிறன். வாறன். எப்ப வர?''

''இப்பவே வாருமன்... வரேக்கை ஒரு நூறு நூத்தம்பது கிடுகு கொண்டு வரேலுமோ....? வீட்டில கிடக்கோ...? ட்ரைக்ரர் அனுப்பி வைக்கிறன்...''

ஆனந்தனுக்கு மகிழ்ச்சியாக இருந்தது. அரைமணி நேரத்தில் ட்ரைக்ரர் வந்து விட்டது. லட்சுமிப் பாட்டி வெண்ணிலாவுக்குத் துணையாக இருக்க, கிடுகுகளின் மேல் சைக்கிளைத் தூக்கிப் போட்டுக் கொண்டு வேலைக்குப் புறப்பட்டு விட்டான் ஆனந்தன்.

சுப்பிரமணியத்தாரின் வளவு பச்சைப்பசேல் என்று இருந்தது கண்ணுக்கு குளிர்ச்சியாக இருந்தது. காலையிலேயே மோட்டர் போட்டு இறைந்திருக்கிறார்கள் போலும். அடிக்கிற வெயிலுக்கு நிலம் அவ்வளவு குளிர்மையாக இருந்தது. ட்ரைக்ரர் ஓட்டி வந்தவரும் ஆனந்தனுமாகச் சேர்ந்து அவ்வளவு கிடுகுகளையும் வளவின் பின்புறத்தில் இறக்கி வைத்தனர். அது சரி எதற்கு இவ்வளவு கிடுகுகள்?

வீட்டின் வடக்குப் புறமாக விலாட்டு மா மரங்களின் கீழே புதியதான ஒரு கட்டுமானம் தொடங்கப்பட்டிருந்தது வியப்பாக இருந்தது. வட்ட வடிவில் நடுவில் உயர்ந்த தூணுடன், அரைச் சுவருடன் இருந்தது கொட்டில். கூரை மட்டும் வேயப்படவில்லை. சுற்றுலா விடுதிகளில் இருப்பதுபோல பெரிதாகவும், அழகாகவும், இயற்கையுடன் இணைந்து காற்றோட்டமாக இருந்தது கொட்டகை. கூரை





வேலையும் முடிய அம்சமாக இருக்கும்.

அது சரி, இராசமணி அம்மாவுக்கு இப்படி செலவுகள் செய்வது பிடிக்காதே அப்புறம் எப்படி?

''என்ன வேலை எண்டு சொன்னீங்கள் எண்டால் தொடங்கீடலாம். வேலி ஏதும் விழுந்திட்டுதோ?'' ஆரம்பித்த ஆனந்தனை இடைமறித்தார் சுப்பிரமணியத்தார்.

''வசந்தன்! அங்க பாரும். இது கட்டினதுக்குப் பிறகு நீர் இந்தப்பக்கம் வரேல்லை இல்லையோ?'' அந்தக் கொட்டகைக்கு ஓடு போடப் போறன் என்று நினைக்கிறீரோ? அதுதான் இல்லை. அதைத்தான் நீர் இப்ப வேயப்போறீர். நான் கிடுகு எடுத்துத் தந்து உமக்கு உதவி செய்யிறன். வசந்தன்! ஒண்டு தெரியுமோ? உம்மைப்போல அழகாகவும் கலை நயத்தோடையும் நேர்த்தியாயும் கொட்டில் வேயுற ஆளை நான் காணேல்லை. எண்டைக்கிருந்தாலும் நீர்தான் இந்த வேலையைச் செய்ய வேணும் எண்டு காத்துக்கொண்டு இருந்தனான்.

''பெரியவரின்ரை நேர்த்தியும் வளர்ப்பும் உம்மில தெரியுது... ம்ம் எல்லாம் போச்சு...'' மூச்சு விடாமல் புலம்பித் தள்ளினார் சுப்பிரமணி ஐயா.

''இருந்த காலம் மட்டும் எங்கடை பிள்ளையளும் அவையளோட சேர்ந்து நாட்டுக்காக போடுவினம் எண்டு புறணி பாடிக் கிடந்தம். இப்ப இல்லை எண்டதுக்குப் பிறகுதான் அருமை தெரியுது. எங்கடை பொற்காலம் வராதோ எண்டு எல்லாரும் ஏங்கிக் கிடக்கிறம். இப்ப அழுது புலம்பி என்ன ஆகப்போகுது? விடுங்கோ...'' சொல்லியபடி வெளியில் வந்தா இராசமணி. மன வருத்தம் குரலில் அப்பட்டமாகத் தெரிந்தது.

அதிர்ச்சிக்கு மேல் அதிர்ச்சி. இந்த அம்மாவா இப்படிக் கதைக்கிறது? சுப்பிரமணி ஐயா எங்களுக்கு சின்னச் சின்ன உதவிகள் செய்தவர். எந்த இடத்திலும் எங்களை விட்டுக் கொடுத்ததில்லை. எப்போதும் ஆதரவாகத்தான் பேசுவார். அவருக்கு ஊருக்குள் ஒரு செல்வாக்கு இருக்கு. அந்த செல்வாக்கும் சேர்ந்துதான் ஊர்மக்கள் பெரியவருக்கு பக்க பலமாக இருந்தனர்.

இராசமணி அம்மா வேறு விதம். நாங்கள் செய்வது சரி என்று தெரிந்தும் அதைக் காட்டிக் கொள்ள மாட்டா. எப்போதும் எங்களில ஏதோ ஒரு குறை கண்டுபிடிச்சு புறணி பாடுவா. எங்கள் ஆட்களைக் கண்டால் காணும், முகம் கடுகடுவென்று ஆகி விடும். உபசரிப்புக்கு குறைவிருக்காது. ஆனால், அதில் மனப்பூர்வமான அன்பிருக்காது.

அவர்களுக்கு மூன்று பையன்கள். அவர்களை எங்கள் கண்களிலேயே காட்டமாட்டா. அவர்களும் அம்மா பிள்ளைகள். ஊர் நடப்பை பொருட்படுத்தாமல் எந்தப் பொறுப்போ நாட்டுப்பற்றோ இல்லாமல் இருந்தார்கள். இங்கு மக்கள் பிரச்சனையில் தவிக்க, எதுகுமே செய்யாமல் சும்மா இருந்த தன்னுடைய பிள்ளைகளை 'ஆமி தேடுறான்' என்று ஒருவாறு வெளிநாடுகளுக்கு அனுப்பி வைத்து விட்டுத்தான் ஓய்ந்தா இராசமணி அம்மா.

போர் ஓய்ந்த பின்னர் கூட எங்களவர்கள் யாருடனும் அவ ஒட்டி உறவாடுவதில்லை. பொருளாதார உதவி கேட்டு விட்டால் என்ன செய்வது என்று அவ எச்சரிக்கையாக இருப்பது எல்லோருக்குமே அப்பட்டமாகத் தெரியும். அப்படிப்பட்டவரா இப்படிப் பேசுவது? என்ன நடக்கிறது இங்கே..?

''வசந்தன்! இப்பவே தண்ணி வென்னி ஏதும் தரட்டோ? இல்லாட்டி கொஞ்சம் கழிச்சோ?''

அவ வசந்தன் என்று கூப்பிடுவதும் புதிதுதான்.

''இப்ப வேண்டாம். வேலை கொஞ்சம் ஓடட்டும். பிறகு குடிக்கிறன்.''

ஆனந்தன் வேலையில் இறங்கி விட்டால் கண்ணும் கருத்துமாக இருப்பான். கூரையில் பாதிக்கு மேல் வேய்ந்த பின்னர்தான் தேநீர் குடிக்கவே இறங்கினான். குடில் உண்மையிலேயே அழகாக வந்து கொண்டிருந்தது. முழுவதுமாக வேய்ந்து விட்டால் ஓய்வெடுக்க ஒரு அருமையான இடம்.

தேநீரும் தட்டை வடையும் அருமையாக இருந்தது. அவன் மதியச் சாப்பாட்டை மறந்து விட்டான். வெண்ணிலா சாப்பிட்டாளோ என்னவோ, சாந்திக்கு இப்ப எப்படி இருக்கோ என்று யோசனை ஓடியது. இந்த வேலையை இன்றைக்கே முடித்து விட வேண்டும். அப்போதுதான் காலையில் சாந்தியைப் பார்க்கப் போகலாம்.

அவர்கள் தேநீர் அருந்திக் கொண்டிருந்தபோது கேற் கிரீச்சிட்டது. சுப்பிரமணி ஐயாவின் வீட்டிற்கு அடுத்த வீட்டுக்காரர் சிவராமன் உள்ளே வந்தார். அவரின் சொந்த இடம் காங்கேசன்துறைக்கு பக்கத்தில். ஊரை விட்டு ஓடிவந்து இத்தனை வருடங்களின் பின்னர் முதன் முதலாக விடுவிக்கப்பட்ட தனது சொந்த நிலத்தைப் பார்க்கப் போயிருந்தார்.

''மனுசன் என்ன கதையோடை வருது எண்டு தெரியேல்லையே...''

சுப்பிரமணி ஐயா சொன்னார். ஆனந்தன் குடிலில் ஏறி விட்டான். சிவராமன் என்ன சொல்லப் போகிறார் என்று அறிய மூன்று பேரும் ஆவலாக இருந்தார்கள்.

''ச்சை... ஏன்தான் போனன் எண்டு வந்திட்டுது.''

**தொடரும்...**

# மகளிர் நாள் பேச்சாளர்

கார்த்தி

பார்க்கப் பார்க்க எரிச்சலாக வந்தது ராகவனுக்கு. காலையில் எழுந்து தலைகூட வாரவில்லை. அங்குமிங்கும் அரக்கப் பார்க்க நடந்து கொண்டிருந்தாள் ராகினி.

''ஏண்டி! காலையில தலை வாரக் கூடவா உன்னால முடியேல்லை? அப்படி என்னத்தை வெட்டி முறிக்கிறாய்..? ஏதோ உத்தியோகத்துக்குப் போற ஆக்கள் மாதிரி உனக்கு அப்பிடி என்ன வேலை? '' 'நோட்புக்' கும் கையுமாக உட்கார்ந்திருந்த ராகவன் கேட்டான்.

இன்று, பக்கத்தில் நான்கைந்து ஊர்களுக்கு பொதுவாக இருக்கும் மண்டபத்தில் சர்வதேச மகளிர் தின விழா நடத்த தடபுடலாக ஏற்பாடு நடக்கிறது. மாதர் சங்கங்களும் உள்ளூர் வாசிகசாலைகளும் இணைந்து இந்த விழாவை நடத்தப் போவதாக சொல்லியிருக்கிறார்கள். ராகவன் ஒரு நல்ல அரச உத்தியோகத்தில் இருப்பவன், வளர்ந்து வரும் இளம் எழுத்தாளன், சமுதாய அக்கறை உள்ளவன் என்று அவனையும் மதித்து ஒரு பேச்சாளராக அழைத்திருக்கிறார்கள்.

'எல்லோரையும் அசந்து போகச் செய்யிற மாதிரி ஒரு பேச்சைத் தயார் பண்ணலாம் என்றால் வரவே மாட்டுதாமே! எழுதி எழுதிக் கிழிச்சுப் போட்டதுதான் மிச்சம் இதுக்குள்ள இந்தத் தரித்திரம் வேற... குறுக்க மறுக்கை நடந்து மனுசரை வெறுப்பேத்திக்கொண்டு.'

கணவன் காலையிலேயே நல்ல 'மூட்' இல் இல்லை என்பதை எரிந்து விழும் அவன் குரலில் இருந்தே புரிந்து வைத்திருந்த ராகினி,



''இல்லை...! வெயில் ஏற முதல் தோச்ச உடுப்புகளைக் காயவிட்டால் ஒரு வேலை முடிஞ்சிடும் எண்டு பார்த்தன்....'' தணிந்த குரலில் சொன்னாள்.

''ஓ..!! ஓகோ எண்டானாம்.! வேலை வெட்டி இல்லாமல் வீட்டுக்கை கிடக்கிற உனக்கு அப்பிடி நேரத்தை மிச்சம் பிடிச்சு என்ன செய்யப்போறய்?

ஆ... ஒருக்கா சொல்லு ...''

என்ன செய்வது என்று தடுமாறி நின்றாள் ராகினி. பதில் சொன்னாலும் கோபப்படுவான், பேசாமல் நின்றாலும் ஊமைக்கோட்டான் என்று திட்டுவான்.

''ஏண்டி.! ஒரு வாய் தேத்தண்ணி தா எண்டு கேட்டு எவ்வளவு நேரம்? தொண்டைத் தண்ணி வத்திப் போச்சு. தருவியோ மாட்டியோ? கோபமாக ஒலித்த குரல் அவளுக்கு விடுதலையை வாங்கித் தந்தது.

''ஆ... இப்ப வந்திட்டன் அத்தை! ஒரு நிமிசத்தில கொண்டு வாறன் குரல் கொடுத்தவாறே குசினியை நோக்கி விரைந்தாள் ராகினி. நல்ல வேளையாக அடுப்பில் வைத்திருந்த பால் பொங்கி ஊற்ற முதலே வந்துவிட்டாள். இப்ப பால் விக்கிற விலையில அதுக்கும் ஒரு மண்டகப்படி விழுந்திருக்கும்.

தேநீரை வாங்கிய அத்தை ராகினியை ஏற இறங்கப் பார்த்தாள்.

''காலங் காத்தால அவன்ரை வாயில விழாம உன்னால இருக்கேலாதோ? என்ன பிள்ளை நீ? அவனே எல்லா நாளும் ஓடி ஓடி உழைச்சிட்டு இண்டைக்குத்தான் வீட்டில இருக்கிறான்.... என்னத்தைத்தான் உன்னை வளர்த்து விட்டிருக்கிறாவோ உன்ரை அம்மா....''

பதிலேதும் கூறாமல் குசினிக்கு விரைந்தாள் ராகினி. அவளும் படித்து வேலை செய்தவள்தான். கட்டடக் கலைஞர் அலுவலகத்தில் கிளார்க் வேலை. அதுவும் கொழும்பில். கை நிறைய சம்பளம். ஆள் பார்க்க சுமாராக இருந்தாலும் பழகுவதற்கு இனிமையானவள். இதனால் அவளைக் கண்டவுடன் யாருக்கும் பிடித்துப் போய்விடும் என்ற நிலைமை இருந்தது இந்த வீட்டிற்கு வாழ்க்கைப்பட்டு வரும் வரைக்கும். 'செய்யும் வேலையில நேர்த்தி வேணுமெண்டால் ராகினியைப் பாருங்கோ' என்பதாகத்தான் அவளிற்கு ஒரு நல்ல பெயர் இருந்தது.

பையன் வங்கியில் உத்தியோகம் பார்க்கிறான்... நல்ல எதிர்காலம் இருக்கிறது தமக்கை கலியாணம் செய்து வேறு ஊரில் இருக்கிறா. மாமனார் மாமியார் மட்டும் தான். பிக்கல் பிடுங்கல் இல்லை என்று

சந்தோஷமாக அவளை இங்கு கட்டிக் கொடுத்தார்கள்.

இங்கும் எவரையும் கெட்டவர்கள் என்று சொல்லிவிட முடியாது. மாமனார் ஒரு அப்பிராணி. மாமியார் என்ன சொல்ல வந்தாலும் உடனே தலையாட்டி விடுவார். என்ன..? அவளுடைய கணவனுக்கும் மாமியாருக்கும் தான் நாக்கிலே கொடுக்கு. சமயாசமயத்தில் கொட்டிக் கொண்டு இருப்பார் கள். கணவனின் தமக்கையோ வேறு ஊரில் இருக்கிறாள் என்றுதான் பெயர். கிழமைக்கு இரண்டு தடவைகள் இங்கு வந்துவிடுவாள். பிள்ளைகள் இல்லை. அது பிரச்சனையும் இல்லை. அவளுக்கும் அப்படியொன்றும் வயதாகவில்லை.

ஆனால், அவளின் குணம்தான் எப்படிப்பட்டது என்று வரையறுக்க முடியவில்லை. சமயங்களில் அவளுக்கு ஒரு உற்ற தோழி போல இருப்பாள், தன் உள்ளக் கிடக்கைகளை அவை எவ்வளவுதான் கேவலமானவையாக இருந்தாலும் பகிர்ந்து கொள்வாள். சில சமயங்களில் அவளைக் கண்டு கொள்ளவே மாட்டாள். போகும்போது தாயாரிடம் ஏதாவது போட்டுக் கொடுத்துவிட்டு போய்விடுவாள். அப்படியொரு இரண்டும் கெட்டான் ரகம். ஆனால், ஆபத்தில்லாதவள்.

யோசனையில் மூழ்கியிருந்த ராகினி நேரத்தைப் பார்த்த தும் பதைத்துப் போனாள். இன்று ஞாயிற்றுக் கிழமை. கண வன் வீட்டில் நிற்கும் நாள். ராஜ உபசாரத்தை எதிர்பார்ப்பான் அவன். விரைவாக தோசை வார்த்து, சம்பலும் சாம்பாரும் வைக்க வேண்டும். அத்தைக்கு இட்லி வார்க்க வேண்டும்.

அது ஒரு குணம். மகன் தோசை என்றால் அத்தை இட்லி என்பாள். கணவனுக்கு சாம்பார் மட்டும் போதும் என்றால் தனக்கு கெட்டிச் சட்னி வேணும் என்பதில் தீர்மானமாக இருப்பாள் அத்தை. சில சமயங்களில் ராகினிக்கு சிரிப்புத் தான் வரும். தன்னுடைய 'மாமியார்' என்ற பிடியை தக்க வைத்துக் கொள்வதாக அவளுக்குள் ஒரு நினைப்பு. மாமனார் வேறு ரகம். அவரிடம் சாப்பாடு தீர்ந்து விட்டது என்று சொல் லிப் பாருங்களேன். அதற்கும் சரி என்று தலையாட்டுவார். இதனால் மாமனார் கேட்காவிட்டாலும் பார்த்துப் பார்த்துக் கவனிப்பாள் ராகினி.

காலைச் சாப்பட்டுக் கடை முடிந்து விட்டது. இனி, மதிய உணவுக்கு தயார்ப்படுத்த வேண்டும். 'அப்பப்பா!! எவ்வளவு வேலைகள் கண்முன்னே விரிந்து கிடக்கின்றன? இரண்டு கைகள் போதாது. இந்த நேரத்தையாவது யாராவது நாளொன் றுக்கு முப்பது மணித்தியாலங்கள் ஆக்கினால்தான் என்ன?






மதியத்துக்கு இளம் ஆட்டின் இறைச்சியில் ஒரு கறியும் ரசமும் வைக்க வேண்டும். குறைந்தது நான்கு மரக்கறிகளா வது வைக்க வேண்டும். கைகள் பரபரவென்று காய்கறிகளை வெட்டின.

''எனக்கு ஒரு தேத்தண்ணி கொண்டா ராகினி! அம்மா வையும் ஒருக்கா சூப் ஏதும் வேணுமோ எண்டு கேட்டுக் குடு.''

''இந்தா...! எதிர்பார்த்தபடி ஓடர் வந்திட்டுது.'' ஏற்கெ னவே தயார்ப்படுத்தி வைத்திருந்த சூப்பை சுட வைத்து ஒரு கிண்ணத்தில் ஊற்றினாள் ராகினி. நல்ல தடிப்பாக சுடச்சுட ஒரு நேநீரும் போட்டுக் கொண்டு போனாள். அவள் போன போது இருவரும் வெளி விறாந்தையில் இருந்தார்கள். கொடுத்துவிட்டு திரும்பும்போது தலை சுற்றுவது போல் வரவே அருகிலிருந்த நிலைப்படியை சட்டென்று பிடித்துக் கொண்டாள்.

''அப்பவே சொன்னனான். கலியாணம் கட்டின கையோட இது இப்ப என்னத்துக்கு? பார்...! கொஞ்சம் தள்ளிப் போட் டிருக்கலாம்... இப்ப பார்! மயக்கம், சத்தி எண்டு... ரெண்டு வருசம் தள்ளிப் போட்டு கொம்மா வந்த பிறகு வைச்சிருக்க லாம்... ''ஆரம்பித்தாள் அத்தை.

ராகினி கர்ப்பமாக இருந்தாள். ஆனால் அதற்கு அவள் மட்டுமே காரணம் என்பதுபோல எல்லோருக்கும் முன் னால் வெளிப்படையாக திட்டுவதும் தினசரி நடப்பதுதான். இப்படிக் கதைப்பது அவளுக்கு எவ்வளவு தர்மசங்கடமாக இருக்கும் என்பதை அத்தை ஒருபோதும் உணர்ந்ததில்லை. என்றாவது தன்னுடைய மகனுடன் இப்படிக் கதைத்திருப் பாளா?

அவர்களின் கல்யாணம் முற்றாகியபோது ராகினி கொழும் பில் செய்த வேலையை விடவேண்டி வந்தது. அவள் மாப் பிள்ளை வீட்டில்தான் இருக்க வேண்டும், மாமன் மாமியும் அவளுடைய பொறுப்புத்தான் என்பது மாப்பிள்ளை வீட்டார் போட்ட கண்டிஷனாக இருந்தது. அம்மா தனித்துப்போய் விடுவாள், அவளைப் பார்த்துக்கொள்ள யாரும் இல்லை என்பது ராகினியின் அண்ணாவின் கவலை. அதனால் ராகினி யின் கல்யாணத்திற்கு வந்தவன் கையோடு அம்மாவையும் கனடாவுக்கு கூட்டிச் சென்றுவிட்டான்.

அதனால்தான் ராகினி கர்ப்பமாகியது அத்தைக்கு கோபம். கல்யாணம் செய்த நான் கர்ப்பமாகியதற்கும் அம்மா வந்த பின் இது வந்திருக்கலாம் என்று இவர்கள் சொல்வதற்கும்



என்ன சம்பந்தம்? போதாததற்கு என்ன தேடியும் இங்கு அவளுக்குப் பொருத்தமான வேலை கிடைக்கவில்லை. அதற்குள் குழந்தை உண்டாகிவிட்டது. அவள் வேலைக்குப் போகவில்லை என்பது மாமியாருக்கு கடுப்பு. கணவனுக்கும் தான். நாளொன்றுக்கு ஒரு முறையாவது சொல்லிக் காட்டாமல் இருக்க மாட்டார்கள்.

சமயங்களில் வெட்டியாக உட்கார்ந்து சாப்பிடுகிறோமோ என்று ராகினிக்குத் தோன்றும். கோழி கூவியதில் இருந்து இரவு கண் மூடும்வரை கை ஓடிய அவள் செய்யும் வேலைகள் கருத்திலேயே வருவதில்லை.

ராகவன் விழாவில் பேசுவதற்கு நல்லதொரு பேச்சைத் தயார் செய்து விட்டதாக பெருமிதப்பட்டான். அத்தை பின்னேர விழாவுக்கு கட்டுவதற்காக நல்ல காஞ்சிபுரம் பட்டுப் புடவையாக தெரிவு செய்வதில் இறங்கி விட்டாள். இடையிடையே தாயும் மகனுமாக மாறி மாறி ஃபோன் போட்டு தெரிந்தவர்களிடம் எல்லாம் ராகவன் உரையாற்ற இருப்பதை சொன்னார்கள்.

ராகவனை செல்லம் கொடுத்து கெடுத்து வைத்திருக்கிறாள் அத்தை என்பது ராகினியின் கணிப்பு. வங்கி உத்தியோகத்தராக வேலை கிடைத்ததும் அவனை ஏதோ சனாதிபதியாகியது போலக் கொண்டாடினாள். அவனும் அப்படித்தான். கதிரையில் இருந்து உடம்பு நோகாமல் செய்யும் வேலை. ஆனாலும், ஊரையே தான்தான் காப்பாற்றுவது போல பந்தா பண்ணுவான். தன்னைப்பற்றி பெரிதாக எண்ணும் வழக்கமும் அவனுக்கு உண்டு. வீட்டில் ஒரு துரும்பைத் தூக்கிப் போடமாட்டான். முன்பு கூட பரவாயில்லை. இப்பொழுது அவளுக்கு முடியாமல் இருக்கும்போதாவது உதவி செய்யலாமல்லவா? ஊகூம்

வீட்டின் வரவு செலவு, ரசீதுகள் கட்டுவது, பெற்றோரை வைத்தியரிடம் அழைத்துச் செல்வது, மருந்து மாத்திரைகளை சரியான நேரத்துக்கு வாங்குவது, வீட்டிற்கு தேவையானவற்றை வாங்கிப் போடுவது போன்றவற்றை முன்பு செய்தானாம். படித்த, செயற் திறனுள்ள பொண்டாட்டி வந்ததும் அதையும் அவள் தலையில் கட்டி விட்டான்.

பரபரவென்று மதிய, இரவுச் சமையல்களை முடித்தாள் ராகினி. மறக்காமல் மாமனார் எடுக்க வேண்டிய மாத்திரைகளைக் கொடுத்தாள். வீடு பூராவும் கூட்டித் துடைத்து பளிங்கு போல ஆக்கினாள். ஆட்டுக் கொட்டிலில் கட்டியிருந்த ஆடுகளுக்கு தீவனமும் போட்டாயிற்று. வெளியில் போவதால் கோழிகளையும் நேரத்தோடு அடைத்து விட்டாள். குமட்டிக் கொண்டு வந்ததால் அவளால் சாப்பிட முடியவில்லை. தேசிக்காய் தண்ணீர் குடித்தது குமட்டலை கட்டுப்படுத்தியது.

பின்னேரமாகியது. விழாவிற்கு புறப்பட்டார்கள். அங்கு மண்டபம் நிரம்பி வழிந்தது. பெண்கள் வண்ண வண்ண ஆடைகளும் அணிகலன்களும் அணிந்து ஜெகஜோதியாக இருந்தனர். ராகவனோடு வேலை செய்யும் அவன் வயதை ஒத்தவர்களும் அவனின் பேச்சைக் கேட்க வந்திருந்தனர் விழா ஆரம்பமானது.

ராகவனுக்கு கணீரென்ற குரல்வளம் இருந்தது ராகினியை ஆச்சரியப்படுத்தியது.

'பெண்கள் எவ்வளவு உயர்ந்தவர்கள் என்பதை இந்த சமுதாயம் உணர்ந்து கொள்ள வேண்டும். அவர்களால் முடியாதது என்று எதுவுமில்லை. தங்களுடைய வாழ்நாளில் அவர்கள் எத்தனை பொறுப்புகள் வகிக்கிறார்கள்? தம்முடைய உயிரையும் உதிரத்தையும் கொடுத்து தாயாகிறார்கள். குடும்பத்தை, உறவினர்களை, சுற்றத்தை அக்கறையோடு கவனிக்கும் தாதியாகின்றனர். பிள்ளைகளுக்கு ஆசிரியராக, சமையற்காரியாக, வேலைக்காரியாக, எவ்வளவு பரிமாணங்கள்.

வேலைக்குப் போகும் பெண்களாக இருந்தால் அது மேலதிக வேலை. கர்ப்பமாக இருக்கும் பெண்களை நினைத்துப் பாருங்கள்... எவ்வளவு அசதியாக இருக்கும்? இதை என்றாவது நாம் எண்ணிப் பார்த்திருக்கிறோமா? இவை எல்லாவற்றையும் விடவும் கொடுமையானது வயது வித்தியாசமின்றி பெண்கள்மேல் புரியப்படும் பாலியல் வன்கொடுமைதான்.

ஒவ்வொரு ஆணும் தன்னில் சரிபாதி பெண் என்று உணர்ந்தால் பெண்ணின் துன்பம் பாதியாகக் குறைந்து விடும். வீட்டில் உள்ள பெண்ணின் வேலைகளில் நாங்களும் பங்கெடுத்து அவர்களின் சுமையை பாதியாகக் குறைப்போம். பெண்களைப் புரிந்துகொண்டால் அலுவலகங்களிலும் பெண்களுக்கு கஷ்டங்கள் இருக்காது. கர்ப்பமாகவுள்ள ஒரு பெண்ணுக்கு கணவனையும் மாமியாரையும் தவிர யார் அவளுக்கு ஆதரவு கொடுக்க முடியும்...? பெண்களை மதிக்க வேண்டும் என்று ஆண் குழந்தைகளுக்கு சிறு வயதிலிருந்தே சொல்லிச் சொல்லி வளர்க்க, வன்முறைகள் குறையும்.

''மொத்தத்தில், மாற வேண்டியது ஆண்கள்தான். இந்த நன்நாளில் அதற்காக சபதம் பூணுவோம்....''

ராகவன் பேசப்பேச கரகோசம் வானைப் பிளந்தது.



# மெய்யெழுத்துக்கள்

புத்தாண்டே வருக!
புது வாழ்வு தருக!!

தரணி எங்கும் மகிழ்விக்க
நித்தம் நித்தம்
புத்தம் புது மலராய்
உன் அருகில்
உள்ள
மனிதரிடம் புன்னகைக்க
பழகிக் கொள்!

கடந்த கால
வீச்சை
இன்று முதல்
எழுச்சியாக்கிக் கொள்!
சேமிக்க பழகிக் கொள்!
பணத்தை மட்டுமல்ல
சிலரது நட்பையும்.

அழகழகாய்
உறவுகள்
அருகருகே இருந்தும்
அரவணைக்க  மறந்தோம்!
வரவுக்குள்ளே
செலவை வைப்போம்!
இயற்கை உணவுகளை உண்போம்!

நேரங்களை இனிதாக்குவோம்.
நோய்களை அரிதாக்குவோம்.
கடந்த காலத்தை
களைந்து
எதிர்காலத்தை மறந்து
நிகழ் காலத்தில்
அகமகிழ வாழ்வோம்!!

எப்பொழுதும் போல்
மை எழுத்துக்களாய்
இல்லாமல்
இந்த முறையாவது
மெய் எழுத்துக்களாய்
மாற்றுவோம்!!

மாற்றம் ஒன்றே
மாறாதது!

அன்புடன்
முல்லை பாஸ்கர்

